J6

806

NANDANAR

P. S. ACHARYAR

S. R. SUBRAMANIA PILLAI,
PUBLISHER,
[T]INNEVELLY JUNCTION.

1933

[Price As. 8.

O23wxl;g
N33
5889

நந்தனர்

P. S. ஆச்சாரியாரவர்கள்
எழுதியது.

S. R. சுப்பிரமணிய பிள்ளை,
புத்தக வியாபாரம், திருநெல்வேலி ஜங்ஷன்.

உரிமை பதிவு
செய்யப்பட்டது.

1933

விலை
அணா 8.

முகவுரை

இச் சிறு நூலிலே அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராய் விளங்கும் திருநாளைப் போவார் என்னும் நந்தனாரது திவ்விய சரித்திரம் கூறப்பட்டிருக்கிறது.

நந்தனாரது சரித்திரம் 'குலக்கவி' யாகிய சேக்கிழார் சுவாமிகளாலே பெரிய புராணத்தில் 35 திருவிருத்தங்களால் பாடி யருளப்பட்டிருக்கிறது.

அச் சரித்திர நிகழ்ச்சிகளை அடிப் படையாகக் கொண்டு, கோபால கிருஷ்ண பாரதிகள் 'பின்னோன் வேண் டும் விகற்பங் கூறி' யென்னும் இலக் கணத்தைத் தழுவி, இசைநூலமைதி கள் அமைத்துப், பலவகை ரசங்களுக்கு இடனாய், நந்தனார் சரித்திரக் கீர்த்தனை யென்னும் வழிநூலைச் செய்தனர். நாடக மேடைகளிலும் கதாப் பிரசங் கங்களிலும் அவ் வழிநூற் போக்கே கையாளப்பட்டு வருகிறது.

அவ்வழி நூலைப் பின்பற்றியே இனிய செந்தமிழ் நடையில் இஃது எழுதப் பட்டிருக்கிறது.

இந்நூல் உயர்தரப் பள்ளிக்கூடங் களிற் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்கு மென்பது எங்க ளது முழு நம்பிக்கை.

பிரசுர கர்த்தர்.

உள்ளுறை

எண்.			பக்கம்.
1.	தொண்டக் குலமே தொழுகுலம்	...	5
2.	சேற்றிற் பிறந்த செந்தாமரை	...	10
3.	பக்தி முதிர்ச்சி	...	21
4.	திருப்புன்கூர் யாத்திரை	...	27
5.	நாளைப்போவேன்	...	37
6.	சேரியில் பக்தி - வெள்ளம்	...	41
7.	ஞான பக்தியும் மூட பக்தியும்	...	52
8.	உயர்தர வியவசாயம்	...	66
9.	ஆதனூர் வேதியன்	...	72
10.	ஆண்டானும் அடிமையும்	...	79
11.	சோதனையும் வெற்றியும்	...	87
12.	சிதம்பர தரிசனம்	...	97

சிதம்பரம் கோவில்.

நந்தனார்

சரித்திரமும் பக்தியனுபவமும்.

முதல் அத்தியாயம்

தொண்டக்குலமே தொழுகுலம்.

“ நன்மைதிகழ் மேற்காநாட் டாத னூர்வாழ்
நந்தனார் புறத்தொண்டர் நாளைப் போக
பொன்மலிதென் புலியூர்க்கென் றுரைப்பார் புன்கூர்ப்
பொய்கையமைத் தடலேறு பிரிய நோக்கி,
வன்மதில்சூழ் தில்லையிறை யருளால் வாய்ந்த
வண்டழலி னிடைமூழ்கி மறையோர் போற்ற
மின்மலிசெஞ் சடைமுனியா யெழுந்து நாதன்
விளங்குநடம் தொழமன்றுள் மேவி னாரே.”

என்பது சந்தானுசாரியருள் ஒருவராகிய உமாபதிசிவாசாரியர் அருளிச்செய்த திருநாளைப்போவார் - புராணசாரம். சோழ வளநாட்டின் பகுதியான மேற்காநாட்டின்கண், ஆதனூரில் ‘ தீண்டத்தகாதவர்’ என்று கருதப்பெறும் பறையர் குலத்தில், நந்தனார் என்னும் பெயருடைய புறத்தொண்டர் ஒருவர் தோன்றினார். இவர் ‘ ஆலயத்திற் சென்று தொழுதல் தம் மரபுக்கிசையாமையின்’ ஆசைபற்றி, அடியார்கள்

பூலோக-சிவலோக மென்று கொண்டாடும் சிதம்பரத்தில் திரு அம்பலத்தைத் தரிசிக்க நான் நாளைப்போவேன் என்று சொல் லிக்கொண்டிருந்தனராம். இவ்வாறு அநேக தினங்கள் சென்ற படியால், நந்தனார் திருநாளைப்போவார் என்ற திருப்பெயரும் பெற்றனர். இவர் திருப்புன்கூரில் ஒரு பொய்கை யமைத்து, அத்திருப்பதிக்கணுள்ள நந்தி விலகக் கடவுளைத் தரிசிக்கும் பேறு பெற்றார் என்பது நந்தனார் சரித முற்பகுதியின் பெரு நிகழ்ச்சியாக உமாபதிசிவாசாரியரால் குறிக்கப்பெறுகின்றது. இத்தகைய அற்புதமான பக்தி யனுபவத்தோடு தொடங்கும் சரித்திரம் எவ்வாறு முற்றுப்பெறுகின்றது, பாருங்கள்! தில்லைக் கண் திருநடம்புரியும் இறையருளால் வாய்ந்த தீயிற்குளித்து மறையோர் போற்ற மறைமுனியா யெழுந்து திருநடம் தரிசிக் கும்படி கனகசபையுட் புகுந்தார் நந்தனார்!—என்னும் பேரற் புதத்தோடு இக்கதை முற்றுப் பெறுகின்றது.

'தாழ்குலத்' துதித்து, 'உயர்வற உயர்'ந்ததோர் இலட்சி யங்கொண்டு, அதற்காக உடல் பொருள் ஆவி யென்னும் மூன்றினையும் ஒருங்கே துறந்து வாடாத புகழ்சூடி வரும் ஓர் உத்தம பக்தமணியின் சரித்திரமே நந்தனார்-சரித்திரம். உண் மையில் இஃது ஓர் அழகிய பக்திப் பெருங்கதையாகும். இக் கதையின் அடிப்படையான சரித மூலங்களைக் குறித்து இப் பொழுது நாம் ஆராய விரும்பவில்லை. இதனை ஓர் அற்புத மான கற்பனைச் சித்திரமாகவே கருதியபோதிலும், இலட்சிய புருஷனாகிய ஓர் அரிய பக்தமணியின் வாழ்க்கையில் ஏற் படும் சோதனைகளைக் குறித்தும், முறுகி முதிர்ந்து விளை யும் பக்தி யனுபவங்களைக் குறித்தும் நாம் சில முக்கியமான உண்மைகளைக் கற்றுக்கொள்வோம் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. இதனாலன்றோ, நல்லறிஞர், 'நந்தன் சரித்திரம்

ஆனந்தம்' என்றும், 'திருநாளைப்போவான் சரித்திரம் தேனி லும் பாலினுமினியது கண்டீர்' என்றும் கூறிப்போந்தார்.

இக்கதையில் இரண்டு இலட்சியங்களைக் காண்கிறோம். ஒன்று உயர்ந்த இலட்சியம்; மற்றது தாழ்ந்த இலட்சியம். உயர்ந்த இலட்சியம் நந்தனாரது இலட்சியமாகவும், தாழ்ந்த இலட்சியம் சேரிப்புலையருடைய இலட்சியமாகவும் நந்தனாரை அடிமைகொண்டிருந்த பிராமணனுடைய இலட்சியமாகவும் சித்திரிக்கப்படுகின்றன. பக்தனது உயர்தர வாழ்க்கை ஒன்றினையே மனமெய்மொழிகளில் காதலிக்கும் நந்தனாருக்கு இடையூறுகள் விளைந்தவண்ணமா யிருக்கின்றன. ஆனால் இவர் இடையூற்றுக்கு இடையூறாக நின்று வெற்றிசூடுகிறார். துன்பங்களெல்லாம் பக்தனது வாழ்க்கையைச் சூழ்ந்துள்ள மாசுகளைச் சுட்டெரித்து, அவ்வாழ்க்கையினைச் சுத்தமான தங்கமாகச் சோதித்துக் காட்டுகின்றன. 'இறை யருளால் வாய்ந்த' துன்பமென்னும் கொழுந்தழலிற் குளித்தெழும் பக்த மணி முடிவில் ஓர் மாசிலாமணியாகவே காட்சிதருகிறான். இப்பேருண்மையினை நந்தனார் சரித்திரம் நன்கு வெளியிடுகிறது.

இத்தகைய பக்தர்-கூட்டம் வாழையடி வாழையென வந்து, உயர்ந்த இலட்சியங்களை உலகிலே நிலைநாட்டி நம்மை வாழ்விக்கிறதென்பது செந்தமிழ்ப் பெரியோர் கொள்கை. இத் திருக்கூட்டத்தார்,

> "நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால்,
> சாதியால் வந்த சிறு நெறியறியா"த

பெருமக்களாவர். இவர்கள், நந்தமிழ்த் திருநாட்டில், சிவ நேசச் செல்வர், திருமாலின் மெய்யடியார் என்னும் இரு

பெரும் பிரிவினராகக் காட்சிதருகிறார். இத்தொண்டர் கூட்டத்தில் மறையவருண்டு; முடிமன்னருண்டு; குறுநில மன்னருண்டு; வேளாளருண்டு; வணிகருண்டு; ஆயர் சாலியர் குயவர் செக்கார் பரதவர் சான்றார் வண்ணார் மறவர் பாணர் புலையர் ஆதிய வேறு மரபினருமுண்டு. சர்வ-ஜாதிய-"சமரச நன்னிலை கண்ட வித்தகர்" கூட்டமே பக்தர் குலம் அல்லது தொண்டக்குலம் என்பது.

> "ஒருலகோ ஒருதிசையோ ஒருபதியோ தம்மில்
> ஒருமரபோ ஒருபெயரோ ஒருகாலந் தானோ,
> பேருலகில் ஒருமைநெறி தருங்கதையோ பன்மைப்
> பெருங்கதையோ பேரொன்றோ அல்லவே!"

என்றவாறு, தொண்டர்க் குரியவை, ஒரு நாடு, ஒரு திசை, ஒரு நகரம், ஒரு மரபு, ஒரு பெயர், ஒரு காலம் அல்ல; ஒரு வமிச வரலாறான கதையோ? பல வமிசச் சரிதங்கூறும் பெருங் கதையோ? - இவைகளுமல்ல. பல மரபு குறித்துப் பலவாகவரினும், தொண்டக்குலம் சாதி சமயம் கடந்த ஒரு தனிப்பெருங் குலமேயாகும். உயர்தர வாழ்க்கைக்குரிய உயர்ந்த இலட்சியங்களை நமக்கு வெளியிடும் தொண்டக் குலத்தின் பெருமையினை யாரே அளவிட வல்லார்?

> "கருங்கடலைக் கைநீத்துக் கொளஎளிது முந்நீர்க்
> கடற்கரையின் நொய்மணலை எண்ணியள விடலாம்
> பெருங்கடல்மேல் வருந்திரையை ஒன்றிரண்டென்றெண்ணிப்
> பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிட லாகும்
> தருங்கடலின் மீனையள விடலாகும் வானத்
> தாரகையை அளவிடலாம் சங்கரன்தாள் தமது
> சிரங்கொள்திருத் தொண்டர்புரா ணத்தையள விடநம்
> சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிதே."

என்று உமாபதிசிவாசாரியர், 'தொண்டர்சீர் பரவவல்லா' ராகிய சேக்கிழாரைப் புகழ்ந்து பேசுகையில், 'தொழுகுல' மான தொண்டக்குலத்தின் அருமை பெருமைகளை அளவிடுவது எவர்க்கும் எளிதன்றென வற்புறுத்தியுள்ளார்.

சிவநேசச் செல்வர்களான திருத்தொண்டர்கள் நாயன்மார் என்று அழைக்கப்பெறுவர். இந்த அடியார்களில் ஒருவரான நாளைப்போவார் என்னும் நந்தனர், 'நீசர்' என்று கூறப்படுவதான பறையர் - மரபினில் தோன்றி, 'யாவர்க்கும் தொழுகுலமாம்' தொண்டக்குலம் பெற்றார். இவ்வாறு தாழ்குலத் துதித்துத் தொழுகுலம் ஏறிய இந்நாயனரைத் 'தம்பிரான் தோழ'ராகிய சுந்தரமூர்த்தி நாயனர் திருத்தோண்டத் தோகையில்,

"செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்"

என்று வழிபடுகிறார்.

'திருத்தோண்டர் திருவந்தாதி'யில் நம்பியாண்டார் நம்பி

"நாவார் புகழ்த் தில்லை யம்பலத் தானருள் பெற்றுநாளைப்
போவா னவனும் புறத்திருத் தொண்டன்றன் புன்புலைபோய்
மூவா யிரவர்கை கூப்ப முனியா யவன்பதிதான்
மாவார் பொழில்திகழ் ஆதனூர் என்பரிம் மண்டலத்தே"

என்று கூறி, இறையருள் பெற்றுப் 'புன்புலைபோய் மூவாயிரவர் கைகூப்ப முனி'யாகிய நந்தனரது பிறப்பால் இசைபெற்றுயர்ந்த ஆதனூரைச் சிறப்பித்துப் பேசுகிறார்.

இரண்டாம் அத்தியாயம்.

சேற்றிற் பிறந்த செந்தாமரை.

"நாளிகே ரஞ்செ ருந்தி நறுமலர் நரந்த மெங்கும்
கோளிசா லந்த மாலங் குளிர்மலர்க் குரவ மெங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாக மெங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்க மெங்கும்.

சூதபா டலங்க ளெங்குஞ் சூழ்வழை ஞாழ லெங்கும்
சாதிமா லதிக ளெங்குந் தண்டளிர் நறவ மெங்கும்
மாதவி சரள மெங்கும் வகுளசண் பகங்க ளெங்கும்
போதவிழ் கைதை யெங்கும் பூகபுன் னாக மெங்கும்.

மங்கல வினைக ளெங்கும் மணஞ்செய்கம் பலைக ளெங்கும்
பங்கய வதன மெங்கும் பண்களின் மழலை யெங்கும்
பொங்கொளிக் கலன்க ளெங்கும் புதுமலர்ப் பந்த ரெங்கும்
செங்கயற் பழன மெங்கும் திருமக ளுறையு ளெங்கும்.

மேகமுங் களிறு மெங்கும் வேதமுங் கிடையு மெங்கும்
யாகமுஞ் சடங்கு மெங்கும் இன்பமு மகிழ்வுமெங்கும்
யோகமுந் தவமு மெங்கும் ஊசலு மறுகு மெங்கும்
போகமும் பொலிவு மெங்கும் புண்ணிய முனிவ ரெங்கும்."

என்று சேக்கிழார் பாடும் பெரும்புகழ் வாய்ந்தது காவிரி-நாடாகிய சோழவளநாடு. தென்னை செருந்தி நரந்தம் அத்தி ஆச்சா தமாலம் குரவம் பனை சந்தனம் குங்குமம் வஞ்சி காஞ்சி கோங்கு மா பாதிரி புன்னை ஞாழல் கமுகு முதலான மரங்களும் பலவகையான மலர்க் கொடிகளும் செடிகளும் செழித்து வளர்ந்த சோழ நாடு முன்னாளில் தமிழகத்தின் சிங்காரப் பூங்காவனமாகவும் இயற்கையின் பேரின்பப்

பூங்கோயிலாகவும் விளங்கியது. நாட்டு மக்கள் எப்போதும் மணம், வேள்வி முதலான மங்கலத் தொழில்களிலே ஈடுபட்டிருந்தனர். மங்கல வாத்தியங்களோடு வேத கீதமும் பண் சுமந்த மழலைமென்மொழியும் எங்கும் கலந்து இசைத்தன. முகிற்கூட்டங்களோடு யானைகளும் எவ்விடத்தும் காணப்பட்டன. யோகமும் தவமும் ஒருபுறம்; போகமும் பொலிவும் ஒருபுறம்; உற்சாகமாக ஊசலாடிப் பொழுதுபோக்கும் காதலர் ஒருபுறம், புண்ணிய முனிவர் ஒருபுறம்; புதுமலர்ப் பந்தர் ஒருபுறம். பொங்கொளிக் கலன்களால் இயற்கையான பேரொளி வனப்பினை மறைக்க முயன்ற பெண்ணரசிகளின் திருமுகங்கள் சோலைகளிலும் சாலைகளிலும் வீதிகளிலும் வாயில்களிலும் மாடங்களிலும் சாளரங்களிலும் "அப்பொழுதலர்ந்த செந்தாமரை' போல் ஒளிதோற்றி மலர்ந்தன. இவ்வாறு, 'இன்பமும் மகிழ்வும் எங்கும்' பொங்கிய காவிரி-நாடு, திருமகளின் உறையுளாகத் திகழ்ந்தது.

அழகுத் தெய்வத்தின் அருமைத் திருக்கோயிலாக விளங்கிய சோழ நாட்டைச் சார்ந்த மேற்காநாட்டில் ஆதனூர் என்னும் பழம்பதி யொன்றுண்டு.

"பகர்ந்துலகு சீர்போற்றும்
பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன்
செழுமணிகள் திரைக்கரத்தால்
முகந்துதர இருமருங்கும்
முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு
மேற்காநாட் டாதனூர்."

“ நீற்றலர்பே ரொளிநெருங்கும்
அப்பதியில் நிறைகரும்பின்
சாற்றலைவன் குலைவயலில்
தகட்டுவரால் எழப்பகட்டேர்
ஆற்றலவன் கொழுக்கிழித்த
சால்வழிபோய் அசைந்தேறிச்
சேற்றலவன் கருவுயிர்க்க
முருகுயிர்க்கும் செழுங்கமலம்.”

என்றிவ்வாறு சேக்கிழார் சுவாமிகளால் வருணிக்கப்பெறும் ஆதனூரில், முன்னளில் இயற்கைச் செழிப்போடு, சைவ-வான்பயிரும் செழித்தோங்கியது. எங்கே பார்த்தாலும் தளிர் களும் கிளைகளும் செறிந்த செழுமையான மரங்கள் கூட்டங் கூட்டமாக நிறைந்து வானளாவி வளர்ந்தோங்கி நின்றன. காலம் தவருது அமுதளாவிய புனல் பொழியும் மேகக்கூட் டங்கள், அவ்வூரைச் சார்ந்தகாட்டிலும் சோலையிலும் சேர்ந்து சஞ்சரித்தன. மலர்களில் மது உண்டு, வண்டுகள் புடை சூழ்ந்து பண்கள் பாடின. குயில்கள் கூவின. மயில்கள் ஆடின.

பாளைகள் விரிந்து மணம் கமழாநின்ற தென்னமரங்கள், பசிய காயோடு கூடிய வலிய குலைகளோடு விளங்குகின்றன வென்றும், விசாலமான பள்ளங்களினின்றும் எழுந்து பாய்ந்த வாளைமீன் அம்மரங்களின் அடி அதிரும்படியாக அதனிடத்து முட்டுகிறதென்றும், பிறகு அவ்வாளைமீன் அப்பள்ளத்தில் முழுகும்படி அதனிடத்துச் சொரிந்த தெங்கின் பழங்கள் மிதக்க அதனல் பின் எழுந்து பலாமரத்தினது மிக முதிர்ந்த பழங்கள் கிழிந்து சொரிகின்ற தேன் வெள்ளத்தில் பாய்ந்து விளையாடும் என்றும், வருணிக்கும் புராணம், புராதன ஆதனூ

ரின் நிலவளத்தையும் நீர்வளத்தையும் சிறப்பித்து மனோ தர்மத்தால் சித்திரித்துக் காட்டுகின்றது.

வயல்களிடத் துண்டாகிய வளங்களும் வைத்துண்டாக் கப்பட்ட தோட்டங்களினின்றும் வருகின்ற வளங்களும் விசாலமான அந் நாட்டுப்புறமெங்கும் நிறைந்திருந்தன. இத் தகைய பொருள்-வளத்தோடு பொங்கிப் பொலிந்த குடி வளத்தைப் புராண ஆசிரியர் பின்வருமாறு வருணித்துள் ளார்:—

“ வயல்வளமும் செயல்படுபைந்
        துடவையிடை வருவளமும்
வியலிடமெங் கணுநிறைய
        மிக்கபெருந் திருவினவாம்
புயலடையு மாடங்கள்
        பொலிவெய்த மலிவுடைத்தாய்
அயலிடைவே றடிநெருங்கக்
        குடிநெருங்கி யுளதவ்வூர்.”

சோலைகளும் சாலைகளும் வயல்களும் தோட்டங்களும் செழுந்தருவின் குலங்களும் பெருஞ்செல்வர் வைகும் மாட மாளிகைகளும் நிறைந்து, சோழவள நாட்டின் திலகமாகத் திகழ்ந்த ஆதனூரில், ‘அத்திலக வாசனைபோல்’ சிவமணமும் கமழ்ந்து கொண்டிருந்ததென்பது சேக்கிழார்-குறிப்பு.

இத்தகைய அரும் பெருஞ் சிறப்பு வாய்ந்த ஆதனூரின் கண், மருதநிலத்தைச் சார்ந்த வயலின் புறத்தில் உள்ள பெரிய கரையில், பழங்கூரைகளுடைய புல்லாலாய பல குடி சைகள் நிறைந்துளது ஓர் புலைச்சேரி. இச்சேரியில் வசிக் கும் பறையர் ஒருவர்க்கொருவர் நெருங்கிய உறவினராய் அமைந்து, உழுதொழில் செய்து பிழைத்து வந்தனர்.

வாழ்க்கைக்குரிய பலவகையான வசதிகள் நிறைந்திருந்த அவ்வூரில், புலையர்கள் மாத்திரம் நாகரிக வாழ்க்கைக்குரிய வசதி பெருது, அழுக்குடம்போடும் அறியாமையில் ஆழ்ந்த உள்ளத்தோடும், பாமரராய்த் தாழ்ந்து, 'உயர்ந்த' சாதியினர் இகழ்ந்தொதுக்க, ஒதுங்கி ஒடுங்கி மனிதத்தன்மை கெட்டு இருகால்-விலங்குகளாய் வாழ்ந்து வந்தனர். சுரைக்கொடி படர்ந்த பழங்கூரையையுடைய சிறுகுடிசைகளில் வாழ்ந்த புலையர்களது உள்ளம், விரிந்த அறிவும் பரந்த அனுபவமும் பெருது பாழடைந்து கிடந்ததென்பதில் வியப்பொன்று மில்லை.

விடியற்சாமத்தினது குறியை வரையறுக்கக் கூவும் கோழிச் சேவல்களது 'கூக்குர'லைக் கேட்டு விழித்துக்கொண்டு புலையர்கள் உழவுதொழிலுக்குரிய வேலைகளை உடனே செய்யத் தொடங்குவர். இவ்வாறு தொடங்கி இரவு அடையும் வரை, உடல் ஓய ஊருக்குழைத்து நிலத்தைப் பண்படுத்துவதில் தம்மை முற்றும் இழந்த இம்மக்களுக்கு, மனத்தைப் பண்படுத்திக் கொள்வதற்குரிய வசதியாதல் அவகாசமாதல் ஒரு சிறிதும் அமையவில்லை.

சுற்றுப்பொருள்களும் இவர்களது வாழ்க்கையை வசமாக்கி வளர்ந்தோங்கச் செய்யும் நிலையில் அமைந்திருக்கவில்லை. கோழி முதலிய புட்களும் நாய்களும் புலைப்பாடியை எப்பொழுதும் நீங்காது கூட்டமாகச் சூழ்ந்து கொண்டிருந்தன. தென்னமரங்களின் அருகிலுள்ள முழைகளில் நாய்கள் குட்டிபோட் டிருந்தன. வஞ்சி மரங்களின் நிழலில் அமைந்துள்ள கூடுகளில், கோழிப் பெடைகள் முட்டையிட்டு, ஒடுங்கி அடைகாத்துக்கொண்டிருந்தன. புலைக்குல உழத்தியர்களும், தாம் புற்குடிசைகளி

லும் வயல்-மருங்கிலும் ஈன்றெடுத்த குழந்தைகளை மருதமர நிழலில் உறங்கச் செய்து கொண்டிருப்பர். மற்ற வேளைகளி லெல்லாம், அவர்கள் உழுதொழில்-முயற்சிகளிலேயே ஈடுபட் டிருப்பர்.

வார்வலைகள் தூக்கிய முற்றத்திலே வேட்டை நாய்கள் காவலாக நிற்கின்றன. இந்நாய்களின் குட்டிகள் அங்குமிங் கும் துள்ளிக் குதித்து விளையாடுகின்றன. புலைப்பாடியி லுள்ள கருஞ்சிறுவர்கள் இக்குட்டிகளைக் கவர்ந்தோடுகிறார் கள். அப்பொழுது குட்டிகள் மிருதுவாகக் குரைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஓடுஞ் சிறுவர்களது அரையிற் கட்டிய இருப்புமணிகள் நாய்க்குட்டிகளின் சிறுமென் குரைப்பை அடக்கி விடுகின்றன.

வேலை முடிந்தபின், வயல்-மாதர்கள் அளகத்தினிடத்து நெற்கதிர்களைச் சூடிக்கொண்டு கள்ளுண்டு கூத்தாடுவர். புலை யர்களும் அதிகமாகக் குடித்துவிட்டு, மாமரங்களில் தூக்கி யிருக்கும் பறைகளை எடுத்து, அக் கூத்துக்கிசைய அடித்து முழக்குவர்.

'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' யென்னும் அருமையான இசைத்தமிழ்-நூலின் ஆசிரியரான கோபால கிருஷ்ண பாரதி யார், இப்புலைப்பாடியை ஆச்சரியமான ஓர் உயிர்ச் சித்திர மாகச் சித்திரித்துத் தருகிறார். அது வருமாறு:—

சிந்து (இராகம் - புன்னுகவராளி)

"பழன மருங்கணையும்—புலைப்
பாடி யதுகூரை வீடு தனில்,
சுரையோ படர்ந்திருக்கும்;—அதைச்
சுற்றிலும் நாய்கள் குரைத்திருக்கும்;
பருந்தோடி வட்டமிடும்—இளம்



பச்சைப் பிசிதமேல் இச்சை கொண்டு,
கோழிகூடவும் கூக்குரலும்—பாழுங்
கொல்லை யருகினில் வெள்ளெலும்பும்
நரம்பும் குவிந்திருக்கும் ;—பல
நெட்டி மிதந்திடும் குட்டைகளில்
நண்டோ குடியிருக்கும் ;—சிறு
நத்தை கமடம் வலுத்திருக்கும் ;
தோலூறும் கேணிகளில்—வெகு
தொல்லைப் படும்வாடை சொல்லறியா ;
பரம்போ அடித்திருக்கும்—வயற்
பக்கங் களில்மெத்த நொக்கெலும்பும்
கிழிதோல் நரம்புகளும்—அவர்க்
கீனமில் லைசிறு மீனுலரும்;
தெருவில் விளையாடிக்கொண்டு—அவர்
தெந்தினம் பாடுவர் சுந்தரமாய்;
இருப்பு மணியரையில்—கட்டி
இண்டங் தலைகளில் பூண்டிருக்கும்
சங்குதோடு காதணியும்—அருந்
தாவட மேயவர் தூவிடமாம்
மணியோ தரித்திருப்பார்—தெரு
வாசற் புறத்தினில் ஏசிக்கொண்டு
கொண்டாட்ட மாயிருப்பார்—கையைக்
கொட்டிக்கொண்டு தமக்கிட்டமுடன்
மதுவுண்டு கொக்கரிப்பார்—பறை
வாத்திய மும்வெகு நேர்த்தியுடன்
இருக்கும் புலைப்பாடி.''

புலைப்பாடியில் வாழ்ந்த புலையர்கள், 'பழிதொழிலும் இழிகுலமும் படைத்த' பஞ்சமர்களாகிய தங்களுக்கு இதற்கு மேலான வாழ்வு இல்லையென்றே கருதுவாராயினர். அவர்

2

கள் தங்களோடு குடியிருக்கும் பிராணிகளைப் போலவே தாமும் பகுத்தறிவு பெறாது தாழ்ந்து வாழ்ந்தனர். தம்மைச் சுற்றிலுமுள்ள நண்டு நத்தைகளைப்போல் வெளியுலகினை அறியாது வாழ்ந்த புலையர்கள், தங்கள் வாழ்க்கையில் ஒரு சிறிதும் அதிருப்தி கொள்ளவில்லை. 'எல்லாம் விதிதான்' என்ற அசையாத நம்பிக்கையோடு, அவர்கள் 'உழவு-மாடு' போலவே உழைத்து வந்தார்கள். அப்புலையர்கள் உழுது பயிர் செய்துகொண்டிருந்த நிலத்தின் பொறுமை, அந்நிலத்தின் தவப்புதல்வர்களான (Children of the soil) அவர்களிடத்திலும் இயற்கையாக அமைந்திருந்தது.

புலையர்-வாழ்க்கை துன்பத்தால் இழைக்கப்பட்ட அடிமை-வாழ்க்கையாகவே யிருந்தது. எனினும் அவர்கள் தங்களுக்குக் கிடைத்த அற்பமான ஓய்வு-நேரங்களில் சுந்தரமாய்த் 'தேந்தினம்' பாடி விளையாடிக்கொண்டிருப்பர். சில சமயங்களில் தெருவாசற்புறத்தில் நின்று ஏசிக்கொண்டு கொண்டாட்டமாயிருப்பர். வேறு சமயங்களில் அமிதமாகக் கள்ளுண்டு கவலைகளையும் கஷ்டங்களையும் மறந்து கைகொட்டிக் கொக்கரிப்பர்.

இத்தகைய புலைப்பாடியில், சேற்றிலே புதிதாக முளைத்ததோர் செந்தாமரைபோல் நந்தனார் என்னும் திருப்பெயருடைய பக்தமணி யொருவர் தோன்றினார்.

"இப்படித்தா கியகடைஞர்
இருப்பின்வரைப் பினின்வாழ்வார்
மெய்ப்பரிவு சிவன்கழற்கே
விளைத்தஉணர் வொடும்வந்தார்
அப்பதியில் ஊர்ப்புலைமை
ஆன்றதொழிற் றாயத்தார்
ஒப்பிலவர் நந்தனார்
எனஒருவர் உளரானார்."

விசேஷமான இயற்கையறிவோடு பிறந்த நந்தனர் ஓதாதுணர்ந்த உயர்ஞானிகளில் ஒருவராக வளர்ந்தார். "நீற்றலர் பேரொளி நெருங்கும் அப்பதியில்"—(அதாவது, விபூதியின் விரிந்த பேரொளி நெருங்கிப் பரவியிருந்த ஆதனூரில்)—'பூசுநீறுபோல் உள்ளும் புனிதரான' இவ்வுத்தமர் தோன்றித் திகழ்ந்தார். மெய்யன்பு சிவன் கழற்கே விளைந்த உணர்வோடு இவர் பிறந்தாரென்பது சேக்கிழார்-கொள்கை.

இவர் அவ்வூரில், 'ஊர்ப்புலையர்' என்னும் புலைத்தன்மையால் உயர்ந்த தொழிலுரிமை யுடையவராகவும் ஒரு வேதியர்க்கு அடிமையாகவும் இருந்தார். அத்தொழிலிலும் பல வேறு நற்குண நற்செய்கைகளிலும் தமக்கு வேறுப்பில்லாதவர் நந்தனரென்று சொல்லும் பெயரும் புகழும் பெற்று விளங்கினர்.

"பிறந்துணர்வு தொடங்கியபின்
　　பிறைக்கண்ணிப் பெருந்தகைபால்
சிறந்தபெருங் காதலினல்
　　செம்மைபுரி சிந்தையராய்
மறந்தும்அயல் நினைவின்றி
　　வருபிறப்பின் வழிவந்த
அறம்புரிகொள் கையராயே
　　அடித்தொண்டின் நெறிநின்றார்."

உலகில் பிறந்து விவேகம் வந்த பின்பு, நந்தனர் இறைவனிடத்து வைத்த சிறந்த பெருங்காதலினல் செப்பமுற்ற மனமுடையவரானர். தொடக்கத்தில் அவர் தமது நிலைமைக்கு இசைந்த நெறியில் நின்று அறம் வளர்த்தார். இவ்வாறு செய்துகொண்டே, மறந்தும் புறந்தொழாது சிவமெனும்

செம்பொருளுக்குத் தொண்டு பூண்டொழுகும் செந்நெறியில் நிலைபெற்றவரானார்.

பிள்ளைப்பூச்சி சேற்றிலிருந்தாலும், அதன்மேல் சேறு ஒட்டுவதில்லை. அவ்வண்ணமே நந்தனார் சேரியிலிருந்தாலும், புலைச்சேரி அவர் உள்ளத்தை தீண்டவில்லை. அவர், புலையர்களின் உழைப்பிலும் கஷ்டங்களிலும் பங்கெடுத்துக்கொண்டார்; எனினும் மதுபானம் முதலிய சேரிப்பழக்கங்களில் கலந்துகொள்ளாமலே விலகி வாழ்ந்தார். உடம்பையும் உள்ளத்தையும் ஒருங்கே மாசடையச் செய்யும் பழக்க வழக்கங்களும் சுற்றுப்பொருள்களும் அன்புமயமான அவரது சரீரத்தையும் மனத்தையும் கெடுக்கத் துணியவில்லை.

நந்தனாரது பக்திக்காதல் அவரது மனத்தைப் பண்படுத்தியது. 'சிவமெனும் செம்பொருள்', தான் குடிகொண்ட சிந்தையினைச் 'செம்மைபுரி சிந்தை' யாக்கியது. பக்தியின் பொருள் நற்குணம்; பக்தியின் பயன் நற்செயல்—என்னும் உண்மை, நந்தனாரது வாழ்க்கையில் நன்கு புலனாயிற்று. பக்தியின் வடிவமாகத் திகழ்ந்த நந்தனார், 'கோதிலாத குண'க் கடலாகவும் காணப்பட்டார். ஒழுக்கமே இவரது பக்திப் பெருங்காதலின் உறுதியான அடிப்படையாகவும் உயிர்நிலையாகிய இதயஸ்தானமாகவும் முடிமணியாகவும் ஒளிர்ந்தது.

பக்தமணியின் தூய உள்ளம் குழந்தை யுள்ளம்போல் கள்ளங்கபடமற்று விளங்குகிறது. சுத்த அறிவோடும் மெய்யன்போடும் குழந்தை யுள்ளமும் பெறுவோரே, உயர்தர வாழ்க்கைக்குரிய பெருநெறி பிடித்து ஒழுகுவோராவர். இத்தகைய தெய்விகநிலை நந்தனாரிடம் நன்கமைந்திருந்தது.

"மனத்தில் குற்றமில்லாதவன் நிந்தை
வஞ்சனை-மாயை சொல்லாதவன்"

என்பது நந்தனரின் குணதிசயம். இத்தகைய குணதிசயம் வாய்ந்த நந்தனரைக் குறித்து, அவரது 'சரித்திரக் கீர்த்தனை'யில், கோபாலகிருஷ்ண பாரதியார் பின்வருமாறு பாடுகிறார்:—

“ நந்தனரவர் பெயராம்—வேது
நல்லவராம் இந்தத் தொல்லுலகில்
அவரே சிவனடியார்—அவர்க்
காரும் எதிரில்லைத் தாரணியில்
கோடிகோடி சென்மங்கள்—முன்னம்
குற்ற மறச்செய்த நற்றவமே
அவதாரமானதுவோ?—ஈசன்
அன்பு புரியும்பே ரின்பசுகம்
கொள்ளை கொள்ளவோ பிறந்தார் ?”

மூன்றும் அத்தியாயம்

பக்தி முதிர்ச்சி

'ஆதனூரில் ஒரு வேதியர்க்குள்ளே அடிமைக்காரப் பறையன்'யிருந்த நந்தனர் 'சூதுவாதொன்றுந் தெரியாதவன், சுத்தமான பக்தன்' என்னும் புகழ்பெற்றார். இவரது 'குழந்தையுள்ள'த்தில் விழுந்த 'பக்தி' யென்னும் வித்து அன்பு-நீரில் முளைத்தெழுந்து, ஒழுக்கம் தழுவி ஓங்கி வளரலுற்றது.

நமக்கு இனியரென்று நம்மாலே தெளியப்பட்டவரிடத்தே—நம்மால் விரும்பப்பட்டவரிடத்தே—தோன்றும் உள்ள நிகழ்ச்சிதான் அன்பு எனப்படும். நந்தனர் சேரிப்பறையரான உறவினரிடத்து உடம்பினாலே தமக்கு ஏற்பட்டிருந்த தொடர்ச்சி கருதி, ஒருவகையில் அன்பு செய்தார் என்பது உண்மையே. எனினும்,

"என்னில் யாரும் எனக்கினி யாரிலை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே"

என்று திருநாவுக்கரசு நாயனர் நாடிக் கண்ட உண்மை, ஓதா துணர்ந்த நந்தனரது தூய உள்ளத்திற்கும் இலக்காயிற்று. ஆதலால்,

"கனியி னும்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே"

என்றவாறு, நந்தனரும் சிவபெருமானே தமக்கு உலகத்துள்ள இனிமையாகிய எப்பொருள்களினும் மிக இனியராவரெனக் கொண்டு அப்பெருமானையே விரும்பி, அவரிடத்து இடையரூத மெய்யன்பு செய்தார்.

"உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ள முள்ளவ ருக்கருள் வானலன்"

என்பது உண்மையினும் உண்மை யாதலால், 'அவனருளால் அவன் தாள் வணங்கி'ய நந்தனரது பக்தியுள்ளம், கள்ளங் கபடமற்ற—சூதுவாதறியாத—சுத்தமான—பச்சைக்குழந்தை யுள்ளமாகவே விளங்கியது. 'ஓங்கிய பக்தி யால் சிவ தருமம் ஒழிவறப் புரிந்திடப் படுமால்' என்றவாறு, நந்தனரது தூய உள்ளத்திலே தோன்றி விளைந்த சிவபக்தி, சிவதருமமாகக் கனிவெய்தியது.

ஆதனூர் வாசிகளால் விடப்பட்டிருந்த—பறையர்க்குரிய—புன்செய் மானியத்தில் வரும் உணவைத் தமக்கு உரிமையாகக் கொண்டு, தமக்குரிய சார்பால் வரும் தொழில்

களைச் செய்து நந்தனார் திருத்தொண்டின் நிலையில் நின்றார். தாம் செல்லும் திருக்கோயில்கள்தோறும் பேரிகை முதலிய ஒருமுகக் கருவிகளுக்கும், மிருதங்கம் முதலிய இருமுகக் கருவிகளுக்கும், தோலும் வாரும் கொடுப்பார்; வீணைக்கும் யாழுக்கும் இசைவுபட்ட நரம்புகள் கொடுப்பார்; சிவபிரானுக்குரிய பூசைக்கு ஆர்வத்தோடு கோரோசனை கொடுப்பார்.

"வாரிருக்குது தோலிருக்குது வாங்கிக்கொள்ளுவீரே!" என்றும் "சிறியவன், சாதி யொன்றும் அறியாதவன், நான் ஏழை—சிவபெருமானுக்கு அடியேன் செய்யும் பணிவிடை இது!" என்றும், சிவஸ்தலங்கள் தோறும் போய்க் கூவுவார். இதுவன்றி, ஆலயங்களின் திருவாசற் புறத்தே நின்று, மெய்யன்பின் மிகுதியால் ஆனந்தக் கூத்தாடுவார்; அவ்வியல்பிற் பாடுவார்.

திடீரென்று தண்டம்போல் விழுந்துருண்டு புழுதியில் புரண்டுகொண்டிருப்பார். எழுந்து நின்று மயிர்சிலிர்ப்பக் கண்ணீர் உகுப்பார். "அன்பே! என் அன்பே! என் இன்பமே!" என்று அழைத்து அழைத்து அறிவழிய வாய்குழறி உரை தடுமாறி ஒரு தரம் அழுவார்; ஒரு தரம் தொழுவார்; ஒரு தரம் சிரிப்பார். உலகை மறந்து, தம்மை இழந்து அனல் கண்ட மெழுகுபோல் உருகுவார்; ஆனந்த வெள்ளத்தே ஆழ்ந்து கிடப்பார். மீண்டும் அவர் வாய் திறந்து, 'அம்மையே! அப்பா!' என்று ஆசையோடு பேசுவார்; கைகொட்டி ஆரவாரம் செய்து கூத்தாடுவார். அலையடித் தோய்ந்த கடல்போல், ஓசை தெரியாமல், நிறைந்த காதலில் தம்மை அறவே மறந்திருப்பார். ஒரு முகூர்த்தம் சித்திரத்தில் எழுதி வைத்த பதுமைபோல் கண்ணிமையால், வாயசையாமல், காலெழாமல், 'இட்டகால் இட்ட கைகளா'கத் தம்வசம்

அழிந்திருப்பார். அப்பால் நினைவு வந்து பரவசம் தெளிய, விம்மி நாத் தழுதழுக்க நாதனைப் புகழ்ந்து பணிந்து, மயிர்க் கால்தோறும் திவலையுண்டாகப் புளகம் கொண்டு ஆனந்த அருவி பொழிந்து, தம்மால் இயன்ற பணிகளை யெல்லாம் செய்து, ஆதனூருக்கு மீள்வார்.

நந்தனாரது சித்தத்தில் பெருகிய பக்தி வெள்ளம், கரை புரண்டோடியது. தமக்குப் பேரின்பம் காட்டிய பரம் பொருளை, அவர் தமது சேரிப்பறையர்களான உறவின ரோடு பங்கிட்டுக்கொள்ள முயன்றார். தமது தாகத்தைத் தீர்த்த பக்தி வெள்ளத்தில், அப்புலையர்கள், தங்கள் தாகத் தையும் தாபத்தையும் போக்கிக் கொள்ளுதல் கூடுமென்று அவர் நம்பினார்.

சேரிப் பறையருள் இயற்கை நுண்ணறிவு வாய்ந்த சில ரை அழைத்து நந்தனார், பக்தியின் பொருளையும் பயனையும் அவர்களது மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு பல திருஷ்டாந்தங்களோடும் கதைகளோடும் எடுத்துரைத்தார். 'பார்க்கும் இடம் எங்கணும் நீக்கம் அற நிறைகின்ற பரிபூரண ஆனந்த'மான பரம்பொருள் ஒன்று உண்டென்றும் அப் பரம்பொருளையே பெரியோர் பதியாகிய பரமசிவன் என்று வழிபடுவரென்றும், பரமசிவன் தமக்கு ஒரு பயனும் குறியாது பெருங் கருணையினாலே படைத்தல் காத்தல் அழித் தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்வரென்றும், அப்பதியானவர் அம்மையப்பனாக விளங்கு வதால் அவரை அறிஞர் 'மாதொரு பாகனார்' என்று போற்று கின்றன ரென்றும், எச்சமயத்தவர் எத்தெய்வத்தைக்கொண்டு வழிபாடு செய்தாலும் மாதொரு பாகனாரே அத்தெய்வ மாகி ஆங்கே வருவரென்றும், பலவகைச் சமயத்தோர்க்கும்

அவ்வவர் பொருளாய் அமைந்து அருள்புரியும் சிவம் எல்லை யின்றி எழுந்து இடையறாது முறுகி வளரும் அன்பின் முதிர்ச்சியிலேயே விளங்கும் என்றும் கூறினார்.

பிறகு அவர் அன்பு நெறியாகிய பக்திமார்க்கத்தின் அருமைபெருமைகளை விரிவாக எடுத்துக் காட்டினார். ஒப்பிலாமணியாகிய இறைவன் அன்பினில் விளைந்த ஆரமுதமாகக் காட்சி தருகிறானென்றும்,ஆதலால் அன்பும் சிவமும் இரண்டற அபேதமாம் என்றும், இத்துணைப் பெருஞ்சிறப்பினதாகிய அன்பின் மாட்சியால் கற்றல் கேட்டல் சிறிதும் இல்லா வேட்டுவச் சாதியினரான கண்ணப்பரும் உயர் வொப்பின்றி விளங்கிய உத்தம பக்த மணியாகப் பரிணமித்தாரென்றும் கூறினார்.

அப்பால் பக்திமார்க்கத்தின் பலவேறு படிகளை எடுத்துக் காட்டினார். வெய்யிலின்மீது இருந்து வெதும்பும் அரக்கைப் போலிருப்பது பக்தியின் தாழ்ந்தபடியாகும்; இத்தகைய அற்ப அன்புமில்லாதவர் இரக்கமிலா அரக்கரே யாவர். வெய்யிலுக்கு எதிர்ப்படுமுன் உருகும் மெழுகுபோல் உருகுவோர், சாதாரணமான மந்த பக்தராவர். சூட்டுக்கு இளகும் நெய்போல் இளகும் நன்னெஞ்சினரே தீவிரபக்தராவர். சிறிதும் இடையறாது ஒழுகும் தைலதாரைபோல், காதலாகிக் கசிந்து கசிந்து, ஆவியோடாக்கை ஆனந்தமா யுருகும் அன்புருவமாகவே அமைந்து ஒழுகுவோர், அதி தீவிர - பக்த மணிகளாவர். இந்நிலையில் இவர்கள் பசுபோதம் இழந்து சிவபோதம் பெறுவர். இவர்களது செயலெல்லாம் சிவன் செயலேயாம். இவர்களுக்கு இறைவன்மாட்டுள்ள இறவாத அன்பே, அந்தமில் இன்பமாகிய பேரின்பமாகும். இத்தகைய 'இறவாத இன்ப அன்பே' பக்திமார்க்கத்தின் தனிப்பெரும் பயனாகும்.

இவ்விதமான கருத்துக்களை அப்புலையர்களுக்கு எளிதில் விளங்குமாறு வெள்ளைச் சொற்களாலும் விநோதமான கதைகளாலும் திருஷ்டாந்தங்களாலும் கூறிய பின், நந்தனார் பக்தியின் புதைபொருளும் உயிர்-நிலையுமான ஒழுக்கத்தின் அவசியத்தை வற்புறுத்தலுற்றார். கொலை களவு காமம் கள்ளுண்டல் முதலிய பாவங்களே மக்களை உண்மையில் தீண்டத்தகாத பாவிகளாக்குகின்றன. இப்பாவங்கள் எத்தகைய நுண்ணறிவையும் கெடுத்துவிடும். இவற்றுள் விசேஷமாகக் கள்ளும் காமமுமே கொலை களவு முதலிய பலவேறு பாவங்களுக்கும் காரணமாக உள்ளன.

"கண்டதோர் நறவமே காம மேயென
எண்டரு தீப்பொருள் இருமைத் தென்பரால்
உண்டுழி யழிக்குமொன் றுணர்வை, உள்ளமேற்
கொண்டுழி யுயிரையும் கொல்லும் ஒன்றரோ"

என்றவாறு தன்னை உண்பவரது உணர்வை உண்ணும் கள்ளும், தன்னை உள்ளத்திற் கொள்வோரது உயிரை உண்ணும் காமமும், மகா பாதகங்களுக்கெல்லாம் மூலமாகக் காணப்படுகின்றன. கள்ளும் காமமும், கல்வி யறிவொழுக்கங்களால் பண்பட்ட நெஞ்சையும் பாழ்பட்ட பாவ நெஞ்சமாக்கிவிடும். இவை குலத்தை அழிக்கும்; குணத்தை அழிக்கும்; ஒழுக்கத்தை ஒழித்துவிடும்; பழி பாவங்களை யெல்லாம் விளைக்கும்; இம்மையிலேயே மக்களை நரகத்தில் வீழ்த்தி வருத்தும்; சன்மார்க்க நாசத்தின் மூல காரணமான கள்ளும் காமமும் அடியோடு ஒழிக்கப் பெறுதல் வேண்டும். இவற்றினிடத்தே கருத்து இறங்காவண்ணம், காலம் போக்குவதற்குச் சிறந்த உபாயங்கள், நல்லாரிணக்கம் நற்செய்கை முதலியனவே. ல்ல வர் நல்லாரிணக்கத்தையே பொருளென மதிப்பர். தம்

மோடு இணங்குவோர்களைத் தீநெறிக்கட் செலுத்தும் தீயவரோடு சிறிதும் இணங்காதொழிதல் வேண்டும். அன்பை விளைவித்து, ஒழுக்கத்தினை வளர்த்து நன்னெறிக்கட் செலுத்தி வாழ்விக்கும் அடியார்களோடு கூடி வாழ்வதே வாழ்வு. இவ்வாறு நந்தனர் ஞானமழை பொழிந்தார். இவரது உபதேசத்தால் சேரிப்பறையருள் பதினெருவர், தமது பழைய பழக்க வழக்கங்களை ஒழித்து மெய்யன்பராயினர்.

நான்காம் அத்தியாயம்

திருப்புன்கூர் யாத்திரை

(அற்புத பக்தித் திறம்)

“ அறிவி னன்மிக்க அறுவகைச் சமயத்
தவ்வ வர்க்கங்கே ஆரருள் புரிந்து
எறியு மாகட லிலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலி னின்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே ”

என்று சுந்தரமூர்த்தி நாயனரால் புகழப்பெறும் சிறப்பு வாய்ந்தது திருப்புன்கூர் என்னும் சிவஸ்தலம். அறிவினல் மிக்க பல வேறு சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாக அங்கங்கே நின்று ஆரருள்புரியும் இறைவனது பெருந்தன்மையினையும், அரக்கர்கோனகிய இராவணனைச் செருக்கொழி

த்து, முடிவில் அவனுக்கு வாளொடு நாள் அருளிய பெருந் தன்மையினையும், சுந்தரமூர்த்தி சுவாமிக்கு ஒருங்கே நினைப் பூட்டுவது திருப்புன்கூர்ச் சிவலோக நாதனது சந்நிதியாகும். நந்தனார் இப்பெருமானது திருவடிகளை மிகவும் நினைந்து பேரன்போடு தாம் செய்யத்தக்க திருப்பணிகளில் வேண்டு வனவற்றைச் செய்ய ஒருப்பட்டார்.

பிறகு அவர் தமது சாதியாருக்குத் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். "அன்பர்களே! திருப்புன்கூரில் கோயில்கொண் டிருக்கும் சிவலோகநாதனைக் கண்டு சேவித்து வருவோம். அத்திருப்பதியில் நாம் செய்யத்தக்க பணிகளை விருப்போடு செய்வோம். இறைவனை வழிபடுவதும் அடியார்களுக்குப் பணிசெய்து கிடப்பதும், நமது உள்ளத்தில் பாவம் குடி புகுந்து இடம் பெறுதபடி செய்யும் சாதனங்களாகும். அன் பிற்கு நெஞ்சும் பணிக்குக் கையுமாய் வாழும் வாழ்வன்றோ, இவ்வுலகிலே நாம் வாழத்தக்க பேரின்ப வாழ்வாகும்? பேரின்பத்தை மறந்து சிற்றின்பச் சேற்றில் மூழ்கி நண்டு நத்தைகளைப் போலவும் பன்றி முதலிய பிராணிகளைப் போலவும் வாழ்வது, பகுத்தறிவு பெற்றுள்ள மக்களுக்கு அழகாகுமோ? நண்பர்களே! பாருங்கள். நாம் அற்ப சுகத்தைப் பெரிதென மதித்தோம்; அரன் திருவடிகளை மறந்தோம். அறிவுக்கறிவாகிய மரக்கலத்தைவிட்டு, ஆசைக் கடலில் ஆழ்கின்றோம். பாசம் அகல வழிதேடாமல் பாவி களாகப் பரிதவிக்கிறோம். இறைவன் நமக்கு மனித ஜன்மம் கொடுத்திருக்கிறார்; நாம் மிருகம்போல வாழ்கிறோம். அன்பு செய்ய நெஞ்சும் பணிசெய்யக் கைகால்களும் தந் திருக்கிறார். நாம் உண்டு களித்து உறங்கி, வீண்பொழுது போக்குகிறோம். திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகளை வண

ங்கி, அவ்வூரில் விருப்போடு பணிசெய்வோம், வாருங்கள்'' என்று நந்தனர் சேரிப் பறையரை அழைத்தார்.

அவ்வாறு செய்வது தங்கள் சாதி நெறிக்கு இசையாது என்றும் உயர்குலத்தார் செய்யும் வழிபாடுகளைப் பறையர் கள் செய்வது பாவமாகுமென்றும் அவர்கள் நினைத்தார்கள். எனவே,

"தேரும் திருநாளும் இருக்குது, போவோம்,
வாரும்! வாரும்!''

என்று நந்தனர் எவ்வளவோ வருந்தியழைத்தும், பறையர் களில் பலரும் இணங்கவில்லை. அவர்கள்,

"பொறும்! பொறும்! இது புண்ணியமன்று,
சேரிக்குப் போவோம்!''

என்று இவரையும் சேரிக்குத் திரும்புமாறு வற்புறுத்தினர் கள். எனினும் நந்தனரது உபதேசத்தால் மனம் திருந்தப் பெற்றிருந்த பதினெருவரும் வேறு சிலரும் சேரியை நீங்கி இவரோடு புறப்பட்டார்கள்.

திருப்புன்கூருக்குப் பயணமான பறையர்கள், சிவலோக நாதனைச் சேவிக்க வெறுங்கையோடு போகலாகாதென்று வாரும் தோலும் நரம்புகளும் வரிசையாகக்கொண்டு, 'சேரியி லுள்ள சீரிது!' என்று நந்தனரிடம் கூறினர்கள். "இராமன் அணைகட்டுகையில் குரங்குகள் மலைகளைத் தூக்கிக்கொடுத்து உதவி செய்தன: இதைப் பார்த்துக் கொண்டிருந்த அணில் களோ, கடலிற்குளித்து மணலிற்புரண்டு வெயிலிற்காய்ந்து அம்மணலை உதிர்த்து, அணைகட்டும் முயற்சியில் இராம னுக்கு உதவின. குரங்கு செய்த பணிதான் பணியென்று இராமன் மதித்தனனு? அணில் செய்த பணியை அங்கீகரிக்க வில்லையா? பணி ஆற்றுவதில், அப்பணியைத் தூண்டும்

உள்ளமே முக்கியமானது. பணியின் சிறப்பெல்லாம் அதற்குக் காரணமான மெய்யன்பின் சிறப்பே' என்று நந்தனர் சொல்லி அவர்களுக்கு ஆறுதல் அளித்தார்.

பிறகு அவர், வந்த புலேயர்களே நோக்கி, "உங்களுக்குப் பக்தி பெருகவேண்டும்; நீங்கள் இத்தூய வெண்ணீறு போல் உள்ளும் புறமும் ஒத்த புனித வாழ்வு வாழ்வீர்கள்!" என்று ஆசீர்வதித்து, அவர்களுக்கு நெற்றியில் நீறிட்டார். அவர்கள், 'சத்தியந்தா'னென்று, தவமுனிபோல நின்ற நந்தனரை அடி வீழ்ந்து வணங்கினர்கள்.

நந்தனர் சந்தோஷங்கொண்டு கோரோசனேப் பையை எடுத்துத் தாராளமாக வாரிக்கொடுத்தார். அனைவரும் அகங்குளிர்ந்து இறைவனது திருப்பெயரை அமைத்துச் சிங்காரமான 'பள்ளு'ப்பாடினர். அவர்கள் ஒரு முகமாக ஒரே குரலில் ஆனந்தமாகப் பாடிக்கொண்டே வழியின் சிரமத்தை உணராது சென்றார்கள். திருப்புன்கூர் வந்து சேர்ந்ததும், அப்புலேயர்கள் ஆசைப்பெருங்கடல் தாண்டி வந்து அத்தியற்புதமான காட்சி பெறும் தவராஜயோகிகளேப் போல் அளவிலாத ஆனந்தம் அடைந்தார்கள். நந்தனர் அன்போடு அவர்களேக் கொண்டாடி, 'இதுவே தவம்! என்று சொன்னர்.

புலேயர்கள் திருப்புன்கூர் ஈசனேப் பாடிக்கொண்டு, ஊருக்குள் பிரவேசிக்கலாகாதே என்ற வருத்தத்தோடு வெளியே ஊரைச்சுற்றி வலமாக வந்தார்கள். அப்பொழுது நம்பிக்கையின் விசித்திர சக்தியால் அவர்கள் புதிய பலம் பெற்றவர்களேப்போல் ஒருணர்வு கொண்டு பேருவகை எய்தி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்கள். மண்ணுலகிலிருந்து கூட்டோடு விண்ணுலகம் அடைந்து அவ்வுலகில் ஆனந்த

சுதந்திரத்தோடு பறந்து திரிவதைப்போலவே, அவர்கள் திருப்புன்கூர் என்னும் தலத்தைச் சுற்றி வந்துகொண் டிருந் தார்கள். முடிவில், சிவலோகநாதனது சந்நிதிக்கு எதிரே வெகு தூரத்தில் நின்றுகொண்டு, ஒரே குரலில்

"எங்கள் குலம் சுத்தமாச்சு !
மலம் வெந்து போச்சு !
நலம் கண்டோம்!"

என்று உற்சாகமாக உரக்கக் கூவினார்கள்.

நந்தனர் சிவலோகநாதனுக்குரிய சிறப்பு மிக்க புகழை நினைத்து நினைத்து உளம் உருகித் துதிசெய்துகொண் டிருந் தார். "இறைவா! உனது வரம்பிலாற்றலை என்னென்று புகழ்வது! சிரித்துப் புரமெரித்த உமது சேவகத்தைப் பௌ ராணிகர்கள் எத்தனை அழகிய கற்பனைகளால் புகழ்ந்து புகழ்ந்து பேசுகிறார்கள்! அம்மையப்பனாகி மக்களை வாழ்வித் தருளும் உனது பெருங்கருணையை எண்ணிறந்த கதைகளா லும் கற்பனைகளாலும் அளந்துரைத்தல் கூடுமோ? உலக மெலாம் ஒருயிராகத் தழுவிநின்று அருள் செய்யும் உனது பெருந்தன்மையினை உள்ளவாறு உணர்ந்துரைப்பது, உனது ஞானனந்த வெள்ளத்தில் மூழ்கிக் களிக்கும் ஞானியர்க்கும் எளிதாகுமோ? எள்ளில் எண்ணெய்போல், பாலில் வெண் ணெய்போல், மலரில் மணம்போல், மணியில் ஒளிபோல், பார்க்குமிட மெல்லாம் நீக்கமற நிறைந்து நிற்கும் சிவலோக னாகிய உன்னை இவ்விடத்தில் காண்போம்! அவ்விடத்தில் காண்போம்! என்று கருதி அலைந்து திரிகிறோம். அன்பால் நினையும் நெஞ்சிலே வளரும் ஜோதியே! வஞ்சகரை வஞ்சிக் கும் வஞ்சவெளியே! வேதமுடிவே! எளியேனும் காணத்

தரிசனம் தந்தருள்வாய்!'' என்று இவ்வாறு தோத்திரஞ் செய்துகொண்டே சந்நிதியை நோக்கி நின்றார்.

அத் தலத்திலே நந்தி மிகவும் பெரிதாக இருந்ததால் நந்தனார் தூரத்தே திருவாயிலுக்கு எதிர் நின்று சுவாமி தரிசனம் செய்வதற்கு அது இடையூறாக அமைந்தது. இவ்வாறு இடபதேவர் மறைத்திருக்க இறைவனை நேரே கும்பிடப் பெறாத நந்தனார் திடுக்கிட்டு இதயத்திலுள்ள இன்பத்தையும் மகிழ்ச்சியையும் இழந்து, 'என்ன வினை செய்தேனோ? கண் பெற்ற பாவந்தானோ?' என்று இரங்கி யேங்கி,

''சிவலோக நாதன் திருச்சந்நிதானம்
மலையாகி நந்தி மறைத்திடும் இங்கே
பலகாலஞ் செய்த பாழ்வினை குவிந்து
மலையாகி இப்படி மறைத்ததோ? என்றார்.''

அப்பொழுது பறையர்களெல்லாரும் தமக்குத் தரிசனம் நேரிடவில்லையே என்னும் வருத்தத்தை விளக்கும் காதலோடு, ''நாம் என்ன செய்வோம்? வழி மறைத்திருக்குதே! மலைபோலே ஒரு மாடு படுத்திருக்குதே!'' என்று கலங்கிக் கதறினார்கள். நந்தனாரும், ''ஐயோ! துணைவரே! என் செய்வோம்? 'காசிக்குப் போனாலும் கருமம் தீராது' என்பதுபோல் இவ்வூரில் வந்தும் பாவிகளாகிய நமது பாவம் தொலையவில்லை. இறைவன் பாதத்தில் நாம் சேர்வது எப்படி? கைக்கெட்டிய கனி வாய்க்கெட்டவில்லை யென்பதுபோல், சிவலோக நாதனது சந்நிதிக்கு எதிரே வந்து நின்றும் நமக்குச் சிவலோகனது தரிசனம் கிடைக்கவில்லை. நாம் கோவிலுக்குள் செல்லவும் விரும்பவில்லை; தேரடியில் நின்று தெரிசித்தாலும் போதும் என்றல்லவோ வந்திருக்கிறோம்'' என்று புலம்பிக் கொண்டிருந்தார்.

பிறகு அவர் தம்மை மறந்த நிலையில் பெருங்காதலோடு, "ஐயோ! அங்கே நின்று ஓரடி விலகினால் போதுமே! உற்றுப் பார்க்கச் சற்றே விலகாதோ மாடு?" என்று வருந்திக் கூவினார். சுவாமி அவ்வாறே அருள் செய்வாராய், நந்தனார் மீது இரக்கம்கொண்டு, திருமுன்னேயிருந்த நந்தியை விலகச் செய்து, இவருக்குத் தரிசனம் கொடுக்க ஒருப்பட்டார்.

இறைவன் தமக்கு முன் உள்ள இடபதேவரை நோக்கி, "சற்றே விலகியிரும், பிள்ளாய்! சந்நிதியை மறைத்திருக்கிறாயாம். ஒரு நாளும் வாராத பக்தன்—நற்றவப்புரியும் திருநாளைப்போவான் என்னும் சித்தன்—எங்கும் பிரசித்தி பெற்ற அன்பன்—வந்திருக்கிறான்; ஒதுங்கி நின்று திருவாயிலில் நேரே கும்பிடவேண்டுமென நினைக்கிறான். நீ ஒதுங்காமலிருந்தது குற்றம்! கோதிலாத குணக்கடலாகிய அவன் தன்னை நொந்துகொள்ளுகிறான். பூதலத்தில் பக்திக் கரைகண்ட இவனைப்போன்ற புண்ணிய புருஷன் வேறொருவனுமில்லை" என்று அருளினார். இறைவனது திருவுளங் கண்ட இடபதேவரும், நந்தனே நல்ல பக்தனென்று தெளிந்து வெட்கங்கொண்டு விலகியிருந்தார். இறைவன் பின்னும் நந்தியை நோக்கி, "எதையும் பொறுப்பேன், எதையும் கொடுப்பேன். பக்தனுக்குக் குற்றம் செய்தால் மாத்திரம் அதைப் பொறுக்கமாட்டேன். பக்தனது உள்ளம் திடுக்கிட்டுத் துடிக்கும்படி செய்வோரது செல்வமும் சிறப்பும் குறைந்தொழியும். பக்தன் 'பசி'யென்று வருகையில் அவனை நோக்காது தன் வயிற்றையே நிரப்பும் பாவத்தையும் நான் பொறுக்கமாட்டேன்" என்று இவ்வாறு பக்தரது அருமை பெருமைகளை உபதேசஞ் செய்தார்.

நந்தி விலகியதைக் கண்ட நந்தனார் தம்பொருட்டு நிகழ்ந்த அற்புதத்தைக் கண்ணுற்றதும், 'இது இறைவனது

அதியற்புதமான பிரகாசம்!' என்று சிந்தை குளிர்ந்து அளவில்லாத ஆனந்தமடைந்து குதித்தார், துதித்தார், கொக்கரித்தார், கைகொட்டினர், கண்ணீர் வடித்தார், ஒருதரம் துடித்தார். மீண்டும் உளம் களித்தார். உலகெலாம் விரிந்த திருவடியை உள்ளே பதித்தார். எங்கும் சிவமாகவே பாவித் திறைஞ்சினர். ஆடிக்கொண்டு பற்களைக் கடித்தார்: பிறகு வாய்விட்டு உச்ச ஸ்வரத்தில் உற்சாகமாகப் பள்ளுப் படித்தார்; அப்பால் தோள்தட்டி ஆரவாரஞ் செய்து கூத்தாடினர்.

நந்தனர் ஆசை தீர இஷ்ட தெய்வத்தைத் தரிசனஞ் செய்தார்; பண்பாடிப் புகழ்ந்தார். கஷ்டமான சம்சார சாகரத்தைத் தாண்டினேன்! என்று துணிந்தார். மட்டுப்படாத மகிழ்ச்சிகொண்டு, தன் தெய்வத்தோடு நேரே பேசுவது போலத் தான் பட்ட பாடுகளைப் பேசினர். 'இறைவா! இப்படியே, உண்மையின் முகத்தினை மலைபோலக் குறுக்கிட்டு மறைக்கும் மாயாவிலாச மோகங்களையும் மயக்கங்களையும் விலக்கியருளல் வேண்டும்' என்று வேண்டினர்.

"ஐயோ! இந்த ஜன்மம் கெட்டதென்று நொந்துகொண்டோமே! இந்த ஜன்மத்திலேயே இறைவன் நமக்கு விடுதலை காட்டுவார்! இனி நமக்கு ஜயமுண்டு; பயமேயில்லை" என்று நெஞ்சொடு கூறுவார். உடனே தமது தோழர்களைக் கட்டித் தழுவி முத்தமிட்டுக்கொண்டு, "நீங்கள் பாக்கிய சாலிகள். இறைவன் உங்கள் கலிதீரக் கருணை பொழிவார்!" என்று சொல்லி, அங்கு மிங்கும் சிங்கக்குட்டிபோல் தாவிக் குதிப்பார்.

குதித்துக் குதித்துக் கும்பிடுவார். துன்பங்கள் தீரத் துதித்துத் துதித்துத் தேன்மழை சொரிவது போல் தோத்தி

OFFICE OF THE REGISTRAR
17 MAY 1933

ரம் செய்வார். வாழி! வாழி! யென்று வரிசையோடு வாழ்த்து வார்; போற்றுவார். இறைவனது விக்கிரகத்தைப் பார்த்துப் பரமானந்தம் எய்துவார். இச்சை மறந்தார், அச்சம் துறந்தார். துச்சமான கவலைகளை யெல்லாம் 'தூ!' வென்று தள்ளினர், இறைவனோடு ஒன்று பட்ட உள்ளத்தோடு, குழந்தையைப் போலத் துள்ளி விளையாடினர்.

இவ்வாறு தரிசனஞ் செய்த நந்தனர், 'அம்பலவாணரே! அடைக்கலமென்று நம்பி வந்தேன்; ஆதரிப்பது உமது பாரம்! உம் கையிலுள்ள பிள்ளை! உமக்கே அடைக்கல மன்றோ? தாயும் நீர்! தந்தையும் நீர்! ஏழையேனுக்கு உம்மைத் தவிர வேறு ஒருவருமில்லை' என்று பிரார்த்தனை செய்துகொண்டு பணிவிடை செலுத்தினர்.

பிறகு நந்தனர் ஒரு சோலையை அடைந்து அதன் அழகினை வியந்து, அங்கே ஒரு குளம் வெட்டவேண்டுமென்று, ஆசை கொண்டார். உடனே சிவலோகநாதனது திருவருளை முன்னிட்டு, விரிவான ஒரு திருக்குளத்துக்குரிய அளவினைக் கணக்கிட்டறிந்து நந்தனரும் அவருடைய தோழர்களும் தாம் விரும்பியவாறு குளம் வெட்டத் தொடங்கினர்கள்.

இவர்கள் குளம் வெட்டிக்கொண்டிருக்கையில், வேலை செய்வதற்கு இன்னும் அதிகமாக ஆள் வேண்டுமென்று நந்தனர் நினைத்தார். அப்பொழுது அவ்விடத்திற்கு ஒரு மனிதன் வந்தான். அவன் வினோத முகமும் பெருவயிறும் சப்பைக் காலுமுள்ளவனாகக் காணப்பட்டான்.

நந்தனர், 'நீ யாரப்பா?' என்று பரிவோடு கேட்டார். வந்த மனிதன் விகடமாக, 'நான் உன் ஆள் அப்பா!' என்று விடை கூறினன்.

நந்தனார், "நாங்கள் இங்கே குளம் வெட்டுகிறோம்" என்றார். அம்மனிதன் இளநகை யரும்பி, "வெட்டுவது வெகு புண்ணியம்!" என்றான்.

நந்தனார், "எங்களுக்கு உதவி செய்ய ஆள்வேண்டும்" என்றார். அம்மனிதன் "நானும் உங்களோடு வெட்டுவேன்" என்றான்.

நந்தனார், "அற்பமாகப் பதக்கு நெல்லைத்தான் நாங்கள் கூலியாகக் கொடுத்தல் கூடும்" என்று வருந்தினார். "அப்பனே! அது போதும்! போதும்!" என்று அம்மனிதன் இசைந்தான்.

அம்மனிதனுடைய தோற்றமும் குணமும் நந்தனருள்ளத்தில் வியப்பையும் மகிழ்ச்சியையும் ஒருங்கே தோற்றுவித்தன. அவர்கள் அனைவரும் ஒரு மனத்தோடு அல்லும் பகலும் உழைத்து வந்தார்கள். புதிய மனிதன் அநாயாசமாகப் பல மனிதர் செய்யும் வேலைகளையும் சொற்ப நேரத்தில் செய்வதைக் கண்ட நந்தனாரது ஆச்சரியம் அதிகரித்தது.

முடிவில் அச்சோலையிலே அழகிய தடாகமொன்று நிர்மாணமாயிற்று. அத்தடாகத்தில் கந்தமுலாவிய செந்தாமரைகள் மலர்ந்திலங்கின. பன்னிறமீன்கள் துள்ளிக் குதித்தன. சுந்தரமான வண்ணப்பறவைகள், அங்கு மிங்கும் பறந்து திரிந்து கொண்டிருந்தன. பகலில் சூரியனது தூய ஒளியும் இரவில் சந்திரன் பொழியும் தண்ணிலவும் சுகமாக விழும்படி அத்தடாகம் அமைந்து விளங்கியது. தடாகத்தில் மக்கள் நீராடி நிர்மலராக அமர்ந்து ஜபம் செய்தற்குரிய படிகளும் மண்டபங்களும் அமைக்கப்பட்டன. கரையிலுள்ள தேவதாரு முதலிய மரங்கள் நீராடுவோர்க்கு நிழல் செய்தன. சோலையிலுள்ள மல்லிகை முல்லை முதலிய மலர்களின் நறு

மணத்தோடு வீசும் காற்று, இனிமையாக—எப்போதும் புதுமையாக—வீசிக்கொண்டிருந்தது. வாழை பலா மா கமுகு சந்தனம் முதலான விருட்சங்களும் செடிகளும் கொடிகளும் நிறைந்திருந்த சோலையிலுள்ள மான்கள் தடாகக்கரையில் 'ஆசைபெற' விழித்து நின்று துள்ளியோடுவதும் மயில்கள் ஆசையாகத் தோகைவிரித்து அழகுற நடிப்பதும், அத்தடாகத்தின் காட்சி யின்பத்தை அதிகரிக்கச் செய்தன.

தடாகவேலை முற்றுப்பெற்றபின், தங்களுக்கு அவ்வேலையில் அருந்துணையாக அமைந்து உதவிய அந்நியனை நந்தனர் காணவில்லை. திருப்புன்கூர் எங்கும் விசாரித்துப் பார்த்தும், அம்மனிதனைக் குறித்து ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. அம்மனிதனது முகத்தையும் வயிற்றையும் காலையும் நினைத்துப் பார்த்தால் பிள்ளையாரே அவ்வுருவாகி வந்ததாக ஊகித்தல் கூடுமென்று புலையர்கள் கருதுவாராயினர்.

நந்தனர் "இதுவும் சிவன் செயலே!" என்று தெளிந்து முன்போலவே திருப்புன்கூர்க்கோயிலை வலமாக வந்து வணங்கி யெழுந்து சிவலோகநாதனிடம் விடைகொண்டு தமது தோழர்களோடு மீண்டு ஆதனூர் வந்து சேர்ந்தார்.

ஐந்தாம் அத்தியாயம்

'நாளைப் போவேன்!'

நந்தனர், சிவபிரான் வீற்றிருந்தருளும் பல திருப்பதிகளிலும் போய் வணங்கி, அத் திருப்பதிகளில் தமது மெய்யன்பின் பயனாகப் பல திருத்தொண்டுகளைச் செய்தார். இவருடைய பக்தி நாளடைவில் முறுகி முதிர்ந்து வளர்ந்தோங்

கியது. இவ்வாறிருக்கையில் ஒரு நாள் சிதம்பரத்தின் கண்ணுள்ள கனகசபையை வணங்குதற் கேதுவான பெருங் காதலுணர்வு இவருள்ளத்தில் உதித்தது.

பிரமபுரமாகிய நமது சரீரத்தில் பிரமமாகிய சிவம் சிதாகாசமாக விளங்குகிறதென்று உபநிடதம் கூறுகின்றது. "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும், இலங்குமுயி ருடலனைத்தும் ஈசன் கோயில்." சிதாகாசம் சிதம்பரமென்னப்படும். இதய புண்டரீகத்தின் மத்தியத்திலே, தெளிவுடையதாய், எண்ணப்படாததாய், வெளிப்படாததாய், அரூபமாய், அற்புதமாய், சிதானந்தரூபமாய் விளங்கும் அமுத - ஒளி வெளியே, சிதாகாசமென்றும் சிதம்பரமென்றும் பெயர் பெறுமென்பர். சிதம்பரத்தில் நிருத்தஞ்செய்யும் அரூபமான சிவம் அனந்த ரூபமுடையதாகவும் சோகமற்ற ஏகராகவும் அம்மையப்பராகவும் பிரபுவாகவும் பரமேசுவரராகவும் சமஸ்த சாட்சியாகவும் காட்சிதருகிறது. இச்சிவனே பிரமா; இவரே விஷ்ணு; இவரே இருந்ததும் இருப்பதுமாகிய எல்லாமானவர்; என்றும் உள்ளவர்; சகல உலகமும் இவரது விபூதியே. 'அண்டத்திலுள்ளது பிண்டத்திலுண்டு' என்பது உண்மையாதலின், பிண்டமாகிய பிரமபுரத்தின் இதயத்தில் இறைவன் நிருத்தமிடுவதுபோல், பிரமாண்டமாகிய பிரமபுரத்தின் இதய ஸ்தானத்திலும் கருணாநிதியாகிய கடவுள் சிதாகாசமாக அமைந்து ஆனந்த நிருத்தமிடுகிறான்; இத் திருநிருத்தமே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் பஞ்ச கிருத்தியம் அல்லது ஐந்தொழிலாக நடைபெறுகின்றது. அண்டத்தினுள்ளே இருக்கும் சிதாகாசம் அல்லது சிதம்பரமாகவே, நந்தமிழ்த் திருநாட்டினுள்ள தில்லை சைவ நன்மக்களால் பாவிக்கப் பெறுகின்றது.

“அந்தநன் னடமே தென்னில்
ஐந்தொழில் நடத்த லாகும்
பந்தம தகற்று மிந்தப்
படிவமு மதுவே யாகும்
வந்துல கத்தில் யாரும்
காண்பரேல் வழுவா முத்தி
தந்தரு ளளிக்குந் தெய்வத்
தலமுமத் தலமே யாகும்”

என்பது சிவநேசச்செல்வர் கொள்கை. இதனாலன்றோ, ‘அழு தடியடைந்த அன்ப’ரான வாதவூரடிகளும் ‘கல்லைப் பிசைந்து கனியாக்’கும் கருணைவாசகமாகிய, தமது அருமைத் திரு வாசகத்தில்,

“ தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!”

என்று அருளிப் போந்தார். மணிவாசகப் பெருமானது இம் மனநிலையினை நமது நந்தனாரும் அடைந்தார்.

பல சிவஸ்தலங்களுக்கும் போய் வணங்கித் திருப்பணி செய்தலே தொழிலாகக் கொண்டிருந்த நந்தனாருக்குச் சிவஸ் தலங்கள் எல்லாவற்றுள்ளும் மேலான ஸ்தலமாகிய சிதம்பரத் திற் கனகசபையின்கண்ணே கருணாநிதியாகிய சபாநாயகர் செய்தருளும் ஆனந்த நிருத்தத்தைத் தரிசித்தல் வேண்டு மென்னும் வேட்கை மிக்குற்றது. இக் காதலுணர்வு, உள்ளத் தில் உதித்த தினத்திலேயே, அற்புதமாக முதிர்ந்து, குளம் விட்டகலாத தெப்பம்போல், இவருள்ளத்தில் ஓயாது ஒழி யாது சுற்றிச் சுழன்றுகொண்டே யிருந்தது. இவ்வாறு

தம்மை நீங்காது அடிக்கடி வந்துதித்த வேட்கையின் மிகுதியால், நந்தனார் அன்றிரவு கண்துயிலவேயில்லை. பொழுது புலர்ந்ததற்பின் அத்திருப்பதிக்குப் பிரயாணமாகலாமென்று கருதியிருந்தார்.

மற்றைநாள் விடிந்த பின்பு, இவர் தாம் தில்லைக்குச் செல்லில், அத்திருப்பதியின் கோயிலினுள்ளே புகுந்து தரிசித்தல் தமக்கு இசையாதே என்பதை நினைந்து வருந்தினார். பிறகு இவ்வாறு போகக்கூடாமையும் எம்பெருமானது திருவருளேயென்று நினைந்து போகாதொழிந்தார். எனினும் தில்லை சென்றிறைஞ்சுதற் கேதுவாகிய காதலுணர்வு ஒரு சிறிதும் குன்றாது மேன்மேலும் வளர்ந்துகொண்டே யிருந்தது. உள்ளத்தே எழுங் காதல் நன்கு மேம்படுங்கால், இவர், கோயிற் பிரவேசம் தமது சாதிக்கு இசையாதென்பதையும் மறந்து, தில்லையம்பதிக்கு 'நாளைப்போவேன்!' என்று சங்கற்பஞ் செய்து கொள்வார்.

இவ்வாறு நந்தனார் 'நாளைப்போவேன்' 'நாளைப்போவேன்' என்று சொல்லி நாட்கள் பல கழித்தார். இக்காரணத்தினாலே இவர் திருநாளைப் போவார் என்னும் திருப்பெயர் பெற்றார். இவர் அடிக்கடி 'தில்லையம்பலம்' 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லிக்கொண்டிருந்தார். இப்பெருங்காதலில் ஊண் உறக்கம் முதலான சாமானிய உலக விஷயங்களை மறக்க அற்றார்.

"நான் சிதம்பரம் போவேன்! நாளைச் சிதம்பரம் போவேன்! உலகம் புகழும் தில்லையை நாடித் தேறித தெளிவேன். ஆ! ஆ! என்ன ஆச்சரியம்! 'சிதம்பரம்' என்று ஒருதரம் சொன்னாலும், என் உள்ளத்தில் இன்பம் ஊறிப் பெருகுகிறதே! நல்வினை, தீவினை யென்னும் இருவகை விலங்குகளி

விருந்தும் விடுதலையருளும் பெருமான் ஆனந்த நடராச மூர்த்தியன்றோ? மறைகளை மறைந்து போய்த் தில்லைவனத்துள் நடம்புரியும் திருவடியன்றோ காலனை உதைத்து அடியவரை வாழ்விக்கும் பெருவாழ்வாகும்!'' என்று ஒருகால் எண்ணமிடுவார்.

ஒருகால், "திறமொன்றறியாத பாவியேனுக்கும் சிதம்பர தரிசன முண்டோ? இது முடவன் கொம்புத்தேனில் இச்சை வைத்த கதையாக முடியுமோ?" என்று ஏங்குவார். உடனே, தமக்கும் 'இறைவன் அருள் புரிவான்' என்னும் நம்பிக்கையோடு பிரார்த்தனைகள் செய்வார்.

"நாளைப் போகாமலிருப் பேனோ? இந்த நாளை வீணுக்க் கழிப்பேனோ?'' என்று அடிக்கடி புலம்புவார். "நாளைப் போகாம லிருப்பேனோ? தில்லை நாதனைக் காணுமல் சகிப்பேனோ?'' என்று சில வேளை புலம்பிக் கதறுவார்.

"காலனைச் சீறிய பாதமன்றோ? காணுமலிருக்கலாகாது'' என்று ஒரு தரம் சொல்லுவார். "ஆனந்த வெள்ளத்தில் ஆடிய பாதமன்றோ? காணுமலிருக்கலாகாது'' என்று ஒரு தரம் நினைப்பார். முடிவில் நந்தனுர் சேரியிலுள்ள தம் இனத்தாரை அழைத்துத் தமது நிலையை வெளியிட விரும்பினர்.

ஆரும் அத்தியாயம்

சேரியில் பக்தி - வெள்ளம்

நந்தனுர் சேரியிலுள்ள புலையரை யழைத்து, "எல்லோரும் வாருங்கள்! பக்தியிலே சுகமிருக்கிறது, பாருங்கள்! இறைவனை நினையாமல் காலத்தை வீணுகப் போக்குவது

நன்றாகுமோ? மூடன் வீணாகப் பொழுது போக்கிக் காலத்தைக்கொல்ல முயல்கிறான். ஆனால் உண்மையில் காலமே அவனைக் கொன்று விடுகிறது. துன்பமயமான இவ்வாழ்க்கையில் பக்தியே பரமானந்த வெள்ளமாகும். இவ் வெள்ளத்தில் மூழ்கி வாழ்வதே இன்பவாழ்வு!'' என்று கூறி, ஒரு தரம் இப்பொழுது 'தில்லைச் சிற்றம்பலம்' என்று சொல்லுங்கள் என்று வேண்டினார்.

சிறுவர் சிறுமியர்க்கெல்லாம் அவ்வாறு சொல்லப் பழகுவது ஒரு விளையாட்டாக இருந்தது. ஆரம்பத்தில் அவர்கள் 'தில்லைச் சிற்றம்பலம்' என்று உச்சரிக்க இயலாத நிலையில் திகைத்து நின்று ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் விரைவிலே நந்தனார் சொன்னபடி சொல்லப் பழகிக் கொண்டார்கள். நந்தனார் நல்லவரென்றும் சூது வாதறியாத சுத்தரென்றும் கோதிலாத குணக்கடலென்றும் பெயர் பெற்றிருந்ததோடு, சேரியிலுள்ள இளைஞர்களால் பெரிதும் காதலிக்கப் பெற்றிருந்தார். எனவே, அவர்கள் அவரது சொல்லை உறுதியென்று கொண்டு, 'தில்லைச் சிற்றம்பலம்' என்று கூவிக் கூத்தாடினார்கள்.

நந்தனார் மகிழ்வெய்தி, ஆண்டில் முதிர்ந்த புலையர்களை 'இப்படி வாருங்கள்' என்று அழைத்தார். அவர்களில் பலர்க்கும் நந்தனாரது நிலை பரிதாபத்திற்கும் பரிகாசத்திற்குமே உரியதாகத் தோற்றியது. அவர்கள் இவரது அழைப்பிற்கிணங்கிவர மறுத்து, 'இவருக்கு வேறு வேலையில்லையா? பக்தி யென்றும், சிற்றம்பலமென்றும் பிதற்றிக்கொண்டிருக்கிறார்' என்று வெறுத்துரைத்தார்கள். நந்தனார் நல்ல வார்த்தை சொல்லி அவர்களை நோக்கிச், 'சேரியிலுள்ள பெரியோர்களே!

என்று பேரன்போடு அழைத்து, "உங்களை வணங்கிக் கும்



பிடுகிறேன்; இறைவனது திருநாமத்தை எங்களோடு சேர்ந்து

ஒருதரம் சொல்லலாகாதா ?" என்று கருணை தோய்ந்த குரலில் வேண்டினார். அவர்கள் சிறிது நேரம் விடைகூறாது பிரமித்து மௌனமாயிருந்தனர். பிறகு அவர்களுக்குள் பின்வரும் ருசிகரமான வாக்குவாதம் நடைபெற்றது.

நந்தனார் :—தில்லையம்பலம் என்று சொல்லச் சொன்னார்.

புலையர் :—கள்ளப்பேச்சென்று மெள்ளச் சொன்னார்.

நந்தனார் :—சங்கரா ! என்று சொல்லச் சொன்னார்.

புலையர் :—இங்கே வா ! என்று நிற்கச் சொன்னார்.

நந்தனார் :—சேரியில் நல்ல காரியம் இது என்றார்.

புலையர் :—ஏரியில் நல்ல மாரியுண் டென்றார்.

நந்தனார் :—விட்டநாள் நினையாமல் எட்டுநாள் மறவாமல் நிஷ்டை பண்ணாத ஜன்மம் நஷ்டம் என்றார்.

புலையர் :—விட்டவிரை முளையாமல் நட்டபயிர் விளையாமல் கெட்டதானால் கிராமம் நஷ்டமென்றார்.

நந்தனார் :—உங்கள் புலைத்தன்மை போகுமென்றார்.

புலையர் :—எங்களைக் கெடுத்தாயே பாவி என்றார்.

நந்தனார் :—தேவாதி தேவனைத் தெரிசிப்பீர் என்றார்.

புலையர் :—பாவாடைராயனைப் பணிந்துவா என்றார்.

நந்தனார் :—அனைத்தாளு மீசனுக் கன்பு செய்வீரென்றார்.

புலையர் :—இனத்தாரை நொந்தவர்க் கின்பமேதென்றார்.

நந்தனார் :—தினமும் சிவனைப் போற்றிக் களிப்போமென்றார்.

புலையர் :—பதரைத் தூற்றி நெல்லை யளப்போமென்றார்.

நந்தனார் :—பொன்னாசை கள்ளாசை விடுதலே நன்றாம்.

புலையர் :—எந்நாளு முன்னாலே கெடுதலே யுண்டாம்.

நந்தனார் :—பூசத்திருநாளிற் போய் வருவோமென்றார்.

புலையர் :—பேசத்தெரியாது பேயா நீ போ வென்றார்.

நந்தனார் :—அழுது முறையிட்டால் அம்பலத்தே கேட்கு மென்றார்.

புலையர் :—உழுது பயிரிட்டால் உள்ளபடி விளையு மென்றார்.

நந்தனார் :—சித்தமெல்லாம் அம்பலத்தே சென்று விட்ட தென்றார்.

புலையர் :—பத்தியெல்லாம் பாழாகிப் பறந்துபோச் சென்றார்.

நந்தனார் :—தாண்டவராயனே தகுந் தெய்வமென்றார்.

புலையர் :—தூண்டிவீரப்பனே தொழுந்தெய்வமென்றார்.

நந்தனார் :—இஷ்டப்படி நடக்கும் ஈசனைத் துதியு மென்றார்.

புலையர்:—கஷ்டப்படமாட்டோம் கசக்காதே போ வென்றார்.

நந்தனார் :—கொண்டாடித் தெய்வத்தைக் கொள்ளுவீ ரென்றார்.

புலையர் :—பெண்டாட்டித் தெய்வமே பெருந்தெய்வம் என்றார்.

நந்தனார் :—நலத்தைக் கொடுக்க வந்த நற்குரு வென்றார்.

புலையர் :—குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு என்றார்.

நந்தனார் :—பலவழக்கம் நானறிவேன் பக்தி செய்யு மென்றார்.

புலையர் :—குலவழக்க மறியாத குருடா போ வென்றார்.

பிறகு நந்தனர் சிவனே தெய்வ மென்றும், சிதம்பரமே பூலோக கைலாசமென்றும், பக்தியே பெருமையென்றும் தமது சம்பிரதாயத்தை விரிவாக எடுத்துரைத்தார். புலையரோ சேரியே சொர்க்கமென்றும் ஏரியே கைலாசமென்றும், மாரியே தெய்வமென்றும் ஏறுமாறுகப் பேசினர். நந்தனர் 'படிப்பது ஞானம் பார்ப்பது மூலம்' என்று சொன்னபோது அவர்கள் விகடமாக'

"பிடிப்பது நண்டு புசிப்பது இறைச்சி
குடிப்பது கள்ளு குலசம்பிர தாயம்.

என்று விடையிறுத்தார். நந்தனர் ஆசையை வென்று ஐம் புலனடக்கி மாசற்ற வாழ்வு வாழும் மதசம்பிரதாயத்தை எடுத்துக் காட்டினர். புலையரோ

"பூசைகள் புரிவோம் பொன்னே குழுவோம்
கூசாமல் வாழ்வோம் குலசம்பிரதாயம்"

என்று தங்களது நிலையில் விசேஷமான திருப்தியோடு பேசினர்கள். நந்தனர் தம்மாலியன்றவரையில் பக்திநெறியின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார். புலையர்களோ அவரைப் பரிகசித்து,

"கையிலே கலயம் காலிலே சேறு
பையிலே பாக்கு பறைச்சம் பிரதாயம்'

என்று உரக்கக் கூவினர்கள்.

ஆனந்தத் தாண்டவனுகிய ஆண்டவனை மனக்கோயிலில் அமைத்து அன்பு செய்பவர்க்கு இவ்வுலகமே பேரின்ப உலகமாகும் என்று நந்தனர் புலையர்களுக்குப் போதித்தார். "உன் கள்ளவேஷம் எங்களுக்கு வேண்டாம்; உன் சம்பிரதாயங்களில் எங்களுக்கு நம்பிக்கையில்லை" என்று அவர்கள் பிடிவாதமாகப் பேசினர்கள். பிறகு அப்புலையருள் ஒருவன்,

"பார்ப்பாரத் தெய்வமது பலிக்காது, பறையரைக்
காப்பாற்ற மாட்டாது கைவிடு மென்றான்"

அப்பொழு நந்தனர் அவனது அறியாமைக்குப் பெரிதும் இரங்கி,

"பார்ப்பார் பறையரென்று பாராது பரிதிபோல்
காப்பாற்று மல்லவோ கண்ணுதலே யென்றார்."

வேறொரு புலையன்,

"அடுக்காத வார்த்தையை அல்லும் பகலுமாய்ப்
பிடிக்கிறாய் பிடிவாதம் பேசாதே யென்றான்."

இன்னுமொரு புலையன் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாகத் தான் விஷயம் தெரிந்தவனென்ற இறுமாப் போடு,

"பித்தனென்று சொல்லுவார் பேருலகில் எல்லோரும்
சத்தியமி தல்லவோ தள்ளுவாயென்றான்."

நந்தனர், இறைவன் உலகினருக்கு அருள் செய்வதி லேயே கண்ணுங்கருத்துமாகித் தன்னை மறந்திருப்பதால் பித்தனென்று பக்தர்களால் உபசாரமாகப் பிரீதியோடு அழைக்கப்படுகிறான் என்று கூறி,

"பித்தனு யிருந்தாலும் பிறவியறுத் தனைவர்க்கும்
முத்திகொடுக்கும் நல்ல மூர்த்தி அவரென்றார்."

பழைய வழக்கங்களில் அளவுகடந்த பற்றுள்ளங்கொண்ட புலையனொருவன் நந்தனரது கொள்கையைப் புதுமைக் கொள்கையென இகழ்ந்து,

"இத்தனை நாளுமிங்கே இல்லாத வார்த்தை
கற்றுவந்தாய் இதுநல்ல காரியமோ வென்றான்."

நந்தனர் பழைமையென்று போற்றுவதும் புதுமையென்று இகழ்வதும் தகாதென்று சொல்லி, எப்பொருளை யார்

சொன்னபோதிலும் அது எத்தன்மையதா யிருந்தபோதிலும் மெய்ப்பொருள் காண முயல்வதே அறிவுடைமைக்கு அழகாகுமென வற்புறுத்தினர். பிறகு அவர் பழைமையிற் பற்றுள்ள சேரிப்புலையர்களை நோக்கி,

“ இத்தனைநாள் வீணுக ஈசனடித் தாமரையில்
பத்திசெய்ய வாருமின்று பாக்கியமீ தென்றார்.”

நந்தனர் சிவபக்தியின் பலன்களைக் குறித்த பல கதைகளையும் சேரிப்புலையர்களுக்கு எடுத்துச் சொன்னர். இனிய குரலில் அவர் பொறுமையாகவும் நயமாகவும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், வயது முதிர்ந்த புலையர் பலர்க்கும் அவரது கொள்கைகள் வெறுப்பையே விளைத்தன. எனினும் சேரியில் நந்தனரது உபதேசத்தின் பயனுக ஒருவாறு நாளடைவில் பக்திவெள்ளம் பெருகி வந்ததென்பதை அனுபவசாலிகளான புலையர்கள் கண்டுகொண்டார்கள். விசேஷமாக இவரது கொள்கை இளைஞருக்குள் பரவிவந்த தென்பதை அவர்கள் உணர்ந்து, ‘அனுபவமற்ற சிறு பிள்ளைகளை நந்தனர் கெடுத்துவிடுவாரே!’ என்று அஞ்சினர்கள். இவ்விதமாக நந்தனரைக்குறித்தும், சேரி இளைஞர்களைக் குறித்தும் மனவருத்தம் மனக்கவலை கொண்ட புலையர்களில், ஆண்டிலும் அனுபவத்திலும் மூத்து முதிர்ந்த சிலர் ஒரு சிறு கூட்டமாகச் சேர்ந்து தங்களுக்குள் இரகசியமாகக் கலந்து ஆலோசனை செய்துகொண்டு, நந்தனரை எப்படியாவது பழைய நிலைமைக்குத் திருப்பிவிட வேண்டுமென்றும் அவ்வாறு திருத்தமுடியாவிட்டால் அவரை ஊரைவிட்டுத் துரத்திவிட வேண்டுமென்றும் உறுதியாகத் தீர்மானித்தார்கள். பிறகு அவர்கள் நந்தனரை ஓர் தனியிடத்தில் சந்தித்து அவரோடு வாதமும் தர்க்கமும் செய்யத் துணிந்தார்கள்.

அவர்களில் ஒரு புலையன் மனக்கடுப்போடு நந்தனாரை நோக்கி, 'ஐய, ஆண்டிகளும் பரதேசிகளும் அரகரா என்று கூச்சலிடக் கேட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட தெய்வம், கஷ்டப்பட்டு உழைத்து ஜீவனம் செய்யும் நமக்குத் தருமா? நந்தனாரே! உம்முடைய தெய்வம் ஆண்டிகளின் தெய்வமாக இருப்பதோடு, தானும் ஆண்டியாகவே பிச்சை யெடுத்துண்ணப் புறப்பட்டதாகவும் கேள்விப்பட்டிருக்கிறோம்" என்று சொன்னான். அதற்கு விடையாக நந்தனார், "விருப்பு வெறுப்பில்லாத இறைவன் ஆண்டியாக வேடங் காட்டியபோதிலும் அவரே மூன்று லோகத்திற்கும் இறையாகிய மூர்த்தியாவார்" என்றார்.

இப்பேச்சு வீண்பேச்சென்றும், கடவுளைப்பற்றிப் பேசினால் ஒரு பயனும் விளையப்போவதில்லை யென்றும், கருதிய புலையன் ஒருவன்,

"நாற்றைப் பிடுங்கியே நடுகை நட்டால் இந்தச்
சோற்றுக் கவலை விடும் சுகமிது"

என்றான். எப்போதும் அழுமூஞ்சியாக இருந்த புலையனொருவன் நந்தனார் செய்யும் சிவஸ்துதி தனக்கு வேதனையாக இருப்பதாயும், அழுகை விளைப்பதாயும் சொன்னான். வேறு சிலரும் நந்தனாரது நிலைமைக் கிரங்கி, அவரது பக்திப் பித்தத்திற்காக வருத்தமுற்றார்கள். அப்பொழுது நந்தனார்,

"தேனாகவே மெத்தத் தித்திக்கும் சிவத்துதி
யானாலு முங்களுக் கழுகையோ?

என்று வியப்பும் வருத்தமும் தோய்ந்த குரலிற் சொன்னார்.

'கா! கா!' என்று கரையும் காக்கைபோல், 'சிவ சிவ!' என்று கரைந்துகொண்டிருப்பதில் என்ன இன்பமிருக்கிறது என்று அதிசயித்த புலையன் ஒருவன்,

"மூக்கு நுனியைப்பார்த்து முணுமுணுத் தெந்நேரம்
காக்கை போலவே சும்மா கதறுகிறீர் என்றான்"

வேறொரு புலையன், இழிகுலத்தாருக்கு நற்கதியில்லை யென்னும் கொள்கையோடு,

"மறையோதத் தெரியாத மடையராய்ப் பூமியில்,
குறையாத புலைத்தன்மை கொண்டோமே யென்றான்."

நந்தனார் உடனே இறைவனது அருள்பெற இழிகுலமென்றும் உயர்குலமென்றும் வேறுபாடில்லை யென்னும் தமது உறுதி யான கொள்கையை வெளியிட்டுப்,

"பறையனாய்ப் பிறந்தாலும் பரகதி தேடலாம்
உறுதி மாத்திரம் வேண்டும் உமக்குண்டோ ?"

என்று கேட்டார்.

நந்தனாரது உபதேசத்தால் சேரியின் ஒற்றுமை கெட்டு விட்டதென்றும், பழைய கட்சி என்றும் புதிய கட்சியென் றும் இரண்டு கட்சிகளாகச் சேரி பிரிந்து போயிற்றென்றும் வருந்திய கிழவனொருவன் நந்தனாரை நோக்கி,

"உலகத்தி லொவ்வாத வுருவேற்றிச் சேரியில்
கலகமிட்டீர் என்ன பலன் கண்டீரோ"

என்று வினவினான். நந்தனார் தம்மைத் தாமே நொந்து கொண்டு,

"பலகாலஞ் சொன்னாலும் பலியாது பாழ்வினை
விலகாம லிருக்குது வேடிக்கை என்றார்."

அச்சமயம் நந்தனார்மீது கடுங்கோபங் கொண்ட புலையர் சிலர்,

"புத்தியில்லாதவன் புலம்புகிறான் சிவனென்று
கத்தினாலும் என்ன காரியமோ"

என்று சீறினர். அப்போது தடிப்பேறிய உடலும் கொழுப்பேறிய உள்ளமும் வாய்ந்த ஒருவன் நந்தனரது தோளில் கை வைத்து,

"சேரியி லிருந்தாலும் செல்வம் குறைந்திடும்
ஊரை விட்டாகிலும் ஒழிந்து போ"

என்று சொல்லி, இவரை எப்படியாவது சேரியை விட்டு வெளியே அனுப்பிவிட்டாலொழிய நமக்குச் சுகமில்லை என்று உறுமினன். ஆனல் நந்தனர் ஒரு சிறிதும் உள்ளங் கலங்காது,

"வாருங்கள் எல்லோரும் மன்னவரைப் போலவே
சேருவோரும் தில்லைச் சிதம்பரம்."

என்று சொன்னர். நந்தனரிடத்தில் அனுதாபங்கொண்ட ஒரு புலையன் எப்பொழுதும் பக்தி பண்ணிக்கொண்டிருந்தால் தங்கள் தொழிலுக்கு கெடுதி யுண்டென்றும் பண்ணை விளையாதென்றும் சொல்லிப்,

"பாலாறு பெருகவே பண்ணையைப் பயிரிட்டு
ஆளாமலே வீணுக் கலைகுறீர்."

என்று அவரது கைகளைக் கட்டியாகப் பிடித்துக்கொண்டு வருந்தியழுதான். நந்தனரும் "ஐயோ இவர்கள் அடையாளம் காணுத ஆடுகள்" என்று வருந்தியழுதார். இந்நிலையில் நந்தனரைத் திருத்தவேண்டும் அல்லது துரத்தவேண்டும் என்று கருதி வந்த கூட்டம் கலைந்துபோயிற்று. சேரியில் இளைஞர்க்குள் மாத்திரம் பக்தியும் நந்தனரது புதுமைக் கொள்கையும் முன்னினும் அதிகமாகப் பரவின.

N33
58896

ஏழாம் அத்தியாயம்

ஞான பக்தியும் மூட பக்தியும்

இளைஞருக்குள் பரவி வந்த பக்தி நந்தனுர் உள்ளத்திற்கு ஆறுதல் அளித்தது. எனினும், மூத்தவர்களது நடை அவருக்கு மேலும் மேலும் துன்பத்தையே விளைத்தது. வயதில் முதிர்ந்திருந்தும் அவர்கள் அறிவிலாவது பக்தியிலாவது வளர்ச்சி பெறவில்லை யென்பதும், உயர்தர வாழ்க்கைக்குரிய அம்சங்களில் கிழவர்களும் குழந்தைகளாகவே இருந்தனரென்பதும் நந்தனுரது மனத்தில் ஆருத புண்ணை யுண்டாக்கின. சேரியை ஒரு புறம் மூடபக்தியும், ஒரு புறம் உலகாயதமும் கவர்ந்து கொண்டிருந்தன என்பதையும் எண்ணி யெண்ணி அவர் ஏக்கமுற்றுர். தாம் சேரியிலிருப்பதால் சிலர் அச்சேரியில் ஒற்றுமை குலைந்து செல்வம் குறைந்து வாழ்வு பாழாகுமென்று நம்புகிறுர்களென்பதையும் அவர் நன்குணர்ந்துகொண்டு சிதம்பர தரிசனத்திற்கு "நான் நாளையே போவேன்' என்று தமது தோழர்களிடம் கூறினுர்.

உண்மையில், சேரிப்பறையரில் பெரும்பாலார் நந்தனுரிடம் அந்தரங்கமான நம்பிக்கையும் நட்பும் உடையவராயிருந்தார்கள். எனவே அவர்கள் ஓடி வந்து அவரைச் சூழ்ந்து கொண்டு, "அண்ணே நீ போகாதே. நமது ஆண்டை பொல்லாதவன்; கோபித்துக்கொள்வான்" என்று நயமும் பயமுமாகச் சொல்லி அவரைச் சிதம்பரம்போகாது தடுக்க முயன்றுர்கள். நந்தனுர் கம்பீரமாக அவர்களை நோக்கி, "நான் இனி

ஆண்டைக்கு அடிமைக்காரனுவேனு? ஆண்டவனுக்கன்றோ அடிமைக்காரனுவேன்'' என்று சொன்னுர். அப்போது அவர்,

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னேமே''

என்று மொழிந்த அப்பர் சுவாமிகளைப்போல் ஓர் அற்புத ஞான வீரராகவே விளங்கினுர். அவர் தமது தோழர்களை மீண்டும் அன்போடு நோக்கி, "ஆண்டவனுக்கு அடிமையாகிய நான் வேறொருவனுக்கும் குடியல்லேன். மூவுலகும் படைத்துக் காத்துத் துடைக்கும் பிரபுவுக்கு மனமொத்த அடிமையானபின் சாமானிய மனிதனொருவனைப் பிரபுவென்று ஒப்புக்கொள்ளுதல் கூடுமோ? ஆண்டவருக்கும் அவர் அடியார்களுக்குமே இனி நான் அடிமையாவேன்'; என்று உறுதியான குரலில் கூறினுர்.

மீண்டும் புலைச்சேரியில் ஒரு கூட்டம் கூடியது. இக்கூட்டத்தில் புலையர் அனைவரும்—முதியரும் இளைஞரும், ஆணும் பெண்ணும்—வந்திருந்தனர். நந்தனுரைக் குறித்து அக்கூட்டத்தாருள் பலவகையான வாதங்களும் பிரதிவாதங்களும் நிகழ்ந்தன. முடிவில் சேரிப் பெருங்கிழவன் என்று பிரசித்தி பெற்றிருந்த மூத்தோனுல் நந்தனுருக்குப் புத்தி புகட்டுதல் நலமென்று தீர்மானமாயிற்று. இப் பெருங்கிழவன் முதியருள் முதியன்; இவனது வயது இவ்வளவுதானென்று

ஆதனூர்வாசிகளால் நிர்ணயித்தல் இயலாததாயிருந்தது. காலங்கண்ட பெருங்கிழவன் இவனேயென்று அயலூர்ப் புலையர்களும் கூறுவதுண்டு. வயது மிகுந்திருந்தும் அவனது உள்ளம் மாத்திரம் ஞாபகசக்தி பிசகாமலிருந்தது.

இப் பெருங்கிழவன் உடல் தளர்ந்து, பற்கள் உதிர்ந்து, தோல் சுருங்கி நரம்புகள் வெளிப்பட்டுத் தோன்றும் நிலையில் தள்ளாடித் தள்ளாடி நடந்துவந்தான். அவனது முதுகு சரிந்து முழுதும் வில்லாக வளைந்திருந்தது. அடிக்கடி நடுங்கிக்கொண்டிருந்த உடம்போடு அவன் கோலூன்றிக் கூனிக் குறுகிக் கோணலாக நடந்து வந்தான். வந்து தம்மை மறந்து நிஷ்டையிலிருந்த நந்தனரைக் கட்டி யணைத்துக் கண்ணீர் சொரிந்து மனங்கனிந்து காதல் மிகுந்து முகம் நோக்கி நிமிர்ந்துபார்த்து, இவன் ஒன்றும் தெரியாத இளங்கன்றென மதித்து, விஷயத்தை விளையாட்டாகவும் வேடிக்கையாகவும் சொல்லத் தொடங்கினன். "ஒ! நந்தனரே, நீரேசொல்லும்! இது ஞாயந் தானே? நம் சாதிக்கடுக்குமோ? சேரியிலில்லாத வழக்கமே நீர் செய்து கொண்டு வந்த பழக்கமாகும். உமது செய்கை ஊரெங்கும் முழங்குகிறது. உமது ஒழுக்கம் நன்றுயிருக்கிறது! சிதம்பரம் என்னும் பேச்சினல் உமக்கு என்ன பயன் ஏற்படுமென்று நினைக்கிறீர்? சிதம்பரப்பேச்சு காரியப்பேச்சாகுமோ? நீரேசொல்லும்! நந்தனரே, இப்பேச்சுநமதுசாதிக்கு உரியபேச்சாகுமா? மதம் மதமென்று நீர் சொல்லுவதெல்லாம் உமக்கு மதம் பிடித்திருக்கிறது என்பதையே காட்டுகிறது. உமது காரியம் சேரிப்பறையருக்கு மட்டுமோ எச்சாக முடிந்திருக்கிறது? நமது பூமண்டலத்திலுள்ள பறையர்களுக்கெல்லாம் இது எச்சாக முடியுமன்றே? இவ்வாறு செய்வது நியாயமா? நீரே சொல்லும். தைப்பூச மென்பது பறையருக்

குண்டோ? சிதம்பர தரிசனமும் சிவபக்தியும் பறையருக் குண்டோ?'' என்று சொல்லிக்கொண்டே அவன் "சிறு பயல்களுக்கே உபதேசம் செய்கிறீர்; நீர் பண்ணி வைத்த தெல்லாம் பெருமோச மன்றோ?'' என்று நந்தனரை நோக்கி வாய் கூசாது பேசினன்.

பின்னும் பெரிய கிழவன் நீண்ட நாளாக அனுஷ்டானத் திலிருக்கும் சாதி வழக்கங்களை யெல்லாம் அறிந்திருந்ததால், அவற்றைக் குறித்து நீண்டதோர் பிரசங்கம் செய்தான். பார்ப்பாரச் சாதிக்கும் பறைச்சாதிக்கும் அதிக வித்தியாச முண்டென்று கூறி ஒரு முக்கியமான வித்தியாசத்தைச் சுட் டிக் காட்டினன்.

"பார்ப்பாரச் சாதியுண்டே—என்ன
பாடுபடும் முழுக் காடுமங்கே''

என்று கூறி, அதிகாலையில் குளிர்ந்த நீரில் கஷ்டப்பட்டு முழுகி முழுகி எழுந்திருக்கும் சாதியே பார்ப்பாரச் சாதி யென்றும், அப்படிப்பட்ட கஷ்டமொன்றும் பாடுபட்டுப் பயிர்த்தொழில் செய்யும் சாதியாகிய பறைச்சாதிக்கு இல் லையே என்றும் பெரிய கிழவன் நகைச்சுவையோடு பேசினன். நந்தனர் 'இதுவும் சிவன் வேடிக்கைதான்!' என்று கருதிச் சிரியாமல் ஒன்றும் அறியாதவர்போல் கேட்டுக் கொண்டிருந் தார்.

பெரிய கிழவன் இன்னும் அதிக உற்சாகத்தோடு, "நந்தனரே! நமக்கும் திருநாளோ? அந்த நியாயமுண்டோ? என்ன மாயம் இது? கழனியே நமது தெய்வம். கழனியைச் சுற்றி வருவதே நமது வழிபாடு. உழுது பரம்படித்து விதை தெளித்து முளை கொள்ள நீரோடவிட்டுப் பழுதற நட்டுக்

களைபிடுங்கி மடைதிறந்து நீர் பாய்ச்சி வயலைக் காத்துக் கிடப்பதன்றே, நமது தேருந் திருவிழாவு மாகும். இதற்கு மேல் திருவிழா வேண்டுமென்றால், காத்தவராயனுக்குப் பொங்கலிட்டு மகிழலாம்!" என்று வாக்குவன்மையோடு பேசினன்.

நந்தனர் தட்டிப் பேசாதது கண்டு, தன் காரியம் ஜயம் என்றே கருதிய கிழவன், "நந்தா! புலைச்சாதியன்றே நாம்! பூமிதரிசனம் போதுமன்றே நமக்கு? சுவாமி தரிசனமுமுண்டோ! நமது தொழிலன்றே நமது கதிமோட்சம்! பயிர்த்தொழில் செய்வதும் பதர் தூற்றி நெல்லளப்பதும், ஊரை வளைந்து தமுக்கு அடிப்பதும், சுடலை காப்பதும், ஆண்டைமார் இடம் வேறு பணிவிடைகள் செய்வதும், குடக்களுண்டு களித்துக் குதித்துக் கூத்தாடுவதும், உறங்குவதும் நமது சாதிதர்மங்கள்! இவையே நமக்கு எளிதில் விளங்கும் தருமங்கள்! நம்மால் எளிதில் செய்யத்தக்க தருமங்களுமிவையே! நமது சாதிமுறை இவ்வளவுதான் என்று 'உயர்ந்த' சாதியாரும் நமக்கு அடிக்கடி உபதேசிக்கிருர்கள்; நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். இவ்வளவு தெளிவாகப் புலப்படும் விஷயங்களை விட்டு, வேதமுனிவர்கள் வினவியும் கண்டோமில்லையென்று சொல்லும்—மூளைக்கெட்டாத—ஒரு விஷயத்தை உடும்புபோலப் பற்றிக்கொண்டு வாணுளை வீணுளாக்குவோன் பத்தனு, பித்தனு? நந்தா! நீ எங்கள் குலமைந்தனன்றே? ஊர்ப்புலையனன்றே? உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செய்; சேரியையும் வயலையும் தரிசனம் செய். சிதம்பர தரிசனத்தை உழைப்பின்றி உண்டு களித்திருப்போர்க்கு விட்டுவிடுவோம்" என்று கூறி முடித்தான்.

கிழவனது பிரசங்கமழை ஓய்ந்த பின், நந்தனர் தம்மை ஒன்றும் அறியாத கன்றென மதித்துரையாடிய அப்பெரிய

கிழவனது முகம் நோக்கி, ஆண்டிலும் அனுபவத்திலும் முற்ற மூத்து முதிர்ந்திருந்த அவனும் திடுக்கிட்டுத் திகைக்கு மாறு பளிச்சென்று, உருக்கமான குரலில்,

"மீசை நரைத்துப் போச்சே—கிழவா,
ஆசை நரைக்க லாச்சோ"?

என்று கேட்டார். கிழவன் ஒன்றும் தோன்றாது பிரமித்து நின்றான்.

நந்தனர் மீண்டும் அவனை நோக்கி, அன்போடும் அருளோடும்,

"பாசம் வருவதாச்சே!—கிழவா,
பாவம் விலகிப் போச்சோ ?
கூனிக்குறுகிப் போச்சே!—கிழவா
கோபம் விலகிப்போச்சோ ?
அங்கம் தளர்ந்துபோச்சே!—கிழவா,
ஆங்காரமும் போச்சோ?"

என்று வினவினர். பெரிய கிழவன் விடையிறுக்க வகையறியாது 'தெறு தெறு' என்று விழித்தான். அவனுள்ளத்தில் பலவகையான எண்ணங்கள் அலையலையாகப் பொங்கியெழுந்தன.

இதுதான் தக்க சமயமென்று நினைத்து நந்தனர், போதங்கரைந்து பொங்கிய பேரன்போடு,

"மானிட ஜன்மமடா!—கிழவா,
மாண்டால் வருமோடா?
அம்பலத் தரசனடா!—கிழவா,
ஆளும்தெய்வமடா!
திருவடி பணியாயோ—கிழவா,
தேடித் தெளியாயோ"

என்று சொல்லி, அம்மையப்பனுகிய முழுமுதற் கடவுளை மனமொழிகளால் இறைஞ்சி நின்று, விபூதி யெடுத்துப் பெரிய கிழவன் முகத்திலே தடவி வாயிலேபோட்டு அவனைக் கட்டி யணைத்துக்கொண்டு, செவியிலே சிவமந்திர முபதேசித்தார். உடனே பழைய கிழவன் சித்தந் தெளிந்து ஏர் புதிய பக்தனு னன்.

சிவனடியாரருள் இதுவோ!—என்று வியந்து மகிழ்ந்த கிழவனுள்ளம் பக்தி வெள்ளத்தில் கரைந்து போயிற்று. அவன் தன்வசமழிந்து பரவசமாகிப் பேசத் தெரியாமற் பேசி னன். முடிவில் அவன், நந்தனரை நோக்கி அகமகிழ்ந்து முகமகிழ்ந்து, "இன்றுதான் நான் பெரிய கிழவனுனேன். நந்தா! எனது பந்தம் தீர்க்கவந்தாய்" என்று கூறி வலம் வந்து வணங்கி விடைகொண்டான். "கலிதீர்ந்தேன்! அமுதம் உண்டேன்! ஆனந்தம் கொண்டேன்!" என்று கூவிக்கொண்டே அவன் புலையர்கள் கூட்டமாயிருந்த இடத்திற்கு வந்தான்.

பேரானந்தக் கடலாடிவரும் பெரிய கிழவன், அவர்களை நோக்கி, "நந்தனே இந்தச் சேரிக்கும் ஊருக்கும் யாருக்கும் பெரியவன். அவனைத் துன்புறச் செய்வது தகாது. அவன் உங்கள் வலையில் அகப்பட மாட்டான். பங்கமில்லாத ஆயி ரத்தெட்டு மாற்றுத் தங்கமன்ருே, நந்தன்! எங்கள் தவராஜ சிங்கமன்ருே? நந்தி சந்நிதியில் விலகிய கதை கேட்டும், அவ னுக்காக யானைமுகக் கடவுளே வந்து தடாகம் வெட்டிய புதுமைகேட்டும் அவனது மகிமையை உணர்ந்தோமில்லை. இப் பொழுதுதான் நான் நந்தனை அறிந்து கொண்டேன். நீங்க ளும் அவனைப் பணிந்து நல்வழிப்படுங்கள்" என்று சொன்னுன்.

இவ்வாறு கிழவன் சொல்லக் கேட்டு, அப்புலையர்கள் மிகவும் துன்பமுற்று, "ஐயோ ! நந்தனால் கெடுக்கப்பட்ட சிறுவர் கூட்டத்தில் பெரிய கிழவனாகிய நீயும் ஒருவனாகச் சேர்ந்து கொண்டாயா ? சிவ சிவா என்று சேரியைக் கெடுக்கத் தலையெடுத்தீர்களே ! கிழவா ! சாகும் காலத்தில் உனக்கும் இந்தப் பைத்தியமா ?" என்று பிரலாபித்தார்கள்.

'நந்தனது சிதம்பரப் பித்தம் நமது பெரிய கிழவனையும் பிடித்துக் கொண்டதே !' என்று வருந்திக் கதறிய புலையர்கள், மீண்டும் அவசரமான கூட்டம் ஒன்று கூட்டி, இனி என்ன செய்வதென்பதைக் குறித்து ஆலோசனை செய்தார்கள். "நாம் இனி என்ன செய்வோம் ? இந்தப் பூமியிலில்லாத புதுமையை நமது சேரியிலன்றோ கண்டோம் !" என்று அவர்கள் ஒருவர்க் கொருவர் சொல்லித் துயரப்பட்டார்கள்.

அவர்களில் ஒருவன், "நந்தனொருவனாலே நமது சாதியே கெட்டுப் போய்விட்டது. சந்நிதிக்குச் சந்நிதி கூத்தாடுவது தானா நமது வேலை ? இப்படிப்பட்ட அக்கிரமம் செய்கிறவர்களைத் தண்டிப்பதற்குச் சாமியு மில்லாமல், எங்கேயோ போய் விட்டது !" என்று வயிற்றெரிவோடு பேசினான்.

வேறொரு புலையன், "சேரிச் சிறுவர்கள் கெட்டுப் போனார்கள். சிவ சிவா என்பதும் ஜபிப்பதும் குளிப்பதும் கும்பிடுவதும் கூத்தாடுவதுமாயிருந்தால், தொழில் முறை பாழாகுமன்றோ ? இனி இவர்கள் ஒரு காசுக்கும் உதவாத ஆண்டிகளாகப் போய் விடுவார்கள். இப்படியிருந்தால், கள்ளுக் கடையையும் மூடிவிட வேண்டியதுதான் ! இது என்ன யோக்கியதை ? ஊருக்குப் பெரிய கிழவனும் கெட்டான் ! உண்மை யறியாமல் சிதம்பரம் ! சிதம்பரம் !!—என்று கூச்சலிடுகிறார்கள் !—ஐயோ ! நமது மாரியாத்தாளுக்கு மதிப்

பில்லையோ? மன்னார்சாமியின் மகிமையும் மறைந்துவிட்டதோ?"

இவ்வாறு இவன் கூறியதைக் கேட்ட புலைப்பூசாரி, இது நல்ல சமயமென்று கருதி, மற்றவர்களை நோக்கி, "வழக்கம்போல், சேரித் தெய்வங்களுக்குப் பூசைபோட்டு, நாம் பலியிட்டு வேண்டினால், சேரிக்கு நல்லகாலம் பிறக்கும்" என்று கூறினான். புலையர்களெல்லோரும், வேறு யோசனையொன்றும் அப்பொழுது தோன்றாததால், 'பூசாரி'யின் ஆசைப் பேச்சை அப்படியே ஒப்புக்கொண்டார்கள்.

தெய்வங்களுக்குப் பலியிடுவதற்காக எண்ணிறந்த ஆடு கோழிகள் சேரிக்கு வந்து சேர்ந்தன. அவ்வாறே மதுக் குடங்களும் ஏராளமாகக் கொண்டுவரப்பட்டன. பறையர்கள் சேரியை வளைந்து பந்தலிட்டு, பறை, பம்பை, கொம்பு, தம்பட்டம் முதலான வாத்தியங்களை இடைவிடாது முழக்கினார்கள். சண்டமாருதம் கண்ட கடலைப்போல், 'பூசாரி'யின் உள்ளம் கொந்தளித்தது. அவன் சந்நதங் கொண்டு பேய்ச் சிரிப்போடு 'ஹா! ஹா! ஹா!' என்று அலறிக்கொண்டு "சேரிக்கு நல்லகாலம் பிறக்கும்! சிதம்பரப்பித்து நந்தனாருக்குத் தெளிந்துவிடும்! நன்றாகப் பூசை போடுங்கள்! சாமிகளுக்கு ஏராளமாகப் பலியிடுங்கள்! 'பூசாரி'யையும் மறந்து விடாதேயுங்கள்!" என்று இடிக்குரலில் பேசினான்.

பிறகு அவன் சேரித் தெய்வங்களின் திருநாமங்களையெல்லாம் ஒரு கோவையாகக் கோத்து, மந்திரம்போல உச்சரித்து நீட்டி முழக்கி உச்ச ஸ்வரத்தில் பின்வருமாறு பாடத் தொடங்கினான்.



"வீரன் இருளன் காட்டேரி
 வெறியன் நொண்டி சாமுண்டி
தூறித் தூண்டி நல்லண்ணன்
 தொட்டியச் சின்னான் பெத்தண்ணன்
மாறு முனியன் சங்கிலியான்
 மாடன் கறுப்பன் பாவாடை
மூரிக் காத்தான் குழியிரிசி
 மோகினி சத்த கன்னிகைமார்
சேரி மன்னரன் முன்னடியான்
 சிறுகாட் டுடையன் பனைமரத்தான்
மாரி யாண்டி வழிமறிச்சான்
 மலையன் சாத்தன் பக்கிரியான்
ஏரி யாண்டி சிலம்பாயி
 எல்லைப் பிடாரி பெத்தாச்சி
சிறு மூர்க்கன் ஊமைச்சி
 சேரித் தெய்வம் இங்கிருக்க"

என்று. அவன் உற்சாகமாகப் பாடிக்கொண்டே அதிகமாகக் கள்ளுண்டு கொக்கரித்தான், கூத்தாடினான்.

புலையர்கள் "சாமி! சாமி!! குறையுண்டோ?" என்று கும்பிட்டுக் கேட்டார்கள். பூசாரி, "வீரனை மறந்தீர், சேரி பாழாச்சு! இருளனை மறந்தீர், சிறுவருக்குக் கொண்டாட்ட மாச்சு! காட்டேரியை மறந்தீர், அது உங்களைச் சிறுவர் கையில் காட்டிக் கொடுத்தது!" என்று ஆரவாரம் செய்தான். புலையர்கள், "தெய்வங்களே! உங்களுக்கு ஒரு குறையும் வைக்க வில்லையே! உங்களைத்தானே நம்பியிருக்கிறோம்; அடிமைகளை இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டார்கள்.

பூசாரி, 'வெறியன் வந்து விட்டான்!' என்று சொல்லி வெறிக்கக் குடித்தான். நொண்டி, நொண்டி நடந்து "நொண்டி

யின் ஆவேசத்தைக் காட்டினன். ஐயோ, சாமுண்டீ! சக்கம்மா !—என்று பயங்கரமாக அலறினன், பதறினன். பிறகு நல்லண்ணன்' பெயரைச்சொல்லி, ஒரு சாதுவைப்போல நடித்தான். வேறு சிலர் சின்னன் பெத்தண்ணன் முதலான தெய்வங்கள் தங்கள் மீது ஆவேசித்தன என்று கூக்குரலிட்டார்கள்.

தாடி மீசை நரைத்துப்போன ஒரு கிழவன், 'முனியன் ஆவேசித்துவிட்டா'னென்று கூவினன். ஒருவன் சங்கிலியை மேலே போட்டுக்கொண்டு, 'நான்தான் சங்கிலியான்' என்று சொன்னன். தடித்திருந்த ஒருவன் தான் மாடன் என்று ஆடினன். எண்ணெயுண்ட இருள்போன்ற மேனியனை ஒருவனிடம் கறுப்பன் ஆவேசித்தான். யௌவன புருஷன் ஒருவனிடம், மோகினி முதலிய சில தெய்வங்கள் ஆவேசித்தன. நெடிய வடிவினன் ஒருவன்மீது 'பனைமரத்தா'னது ஆவேசம் தோன்றியது. இவ்வாறே மலையன், மன்னரான், வழிமறிச்சான், பக்கிரியான், மூர்க்கன் முதலான தெய்வங்கள் பாத்திரமறிந்து ஆவேசித்து வந்தன.

புலையர்களது கவனம் பலவேறு ஆவேசங்களின் மீது சென்றுகொண்டிருந்ததை அறிந்த பூசாரி, பளிச்சென்று எல்லைப்பிடாரி! எல்லைப்பிடாரி!!' என்று உறுமினன். பிறகு அவன் "எல்லைப்பிடாரி தொல்லைப்படாது, வெல்லப்படாது, தள்ளப்படாது, சொல்லப்படாது, கள்ளப்படாது! என்று பிரசங்கங்களாகச் சொற்களைமூச்சுவிடாமல் அடுக்கிக்கொண்டு போனன். புலையர்கள் திறந்தவாய் மூடாமல், விழித்தகண் இமையாமல் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். பூசாரி மீண்டும் 'அது யாவரையும் விடாது, கோபப்படாது, பட்

டால் விடாது, துன்பம் தொடாது, தொட்டால் விடாது, இடங்கொடாது, அடங்கிடாது, அருளைக் கொடாது, நிலை விடாது!' என்று செங்கல் அடுக்குவதுபோல் சொற்களை அடுக்கிக்கொண்டே போனான். இவ்வேடிக்கைகளை விலகி நின்று பார்த்துக்கொண்டிருந்த சேரிப் பெருங்கிழவன், அருகிலிருந்த நந்தனாரை நோக்கிப், "பயலுக்குக் குடிவெறி மண்டைக் கேறிவிட்டதுபோலிருக்கிறது!" என்று சொன்னான்.

எல்லைப் பிடாரியின் ஆவேசத்தோடு ஆடிப்பாடி நின்ற பூசாரி, என்னை ஏன் மறந்தாயடா? கை யிடிபடாது விலகடா! பிடாரியென்று சொல்லடா! என்னையறிந்து பணியடா! பலிகொடுத்துப் போற்றடா!" என்று கர்ச்சித்தான். புலையர்கள் ஒரு முகமாக நின்று ஒரு குரலில்,

"எல்லைப் பிடாரியே! எதிராக வந்தெமைக்
கொள்ளடீ! உன்காவலாய்க் கொள்ளடீ யென்றார்."

அப்பொழுது நந்தனார்,

"சொல்லினும் அடங்காது சோதிபர மானந்தத்
தில்லை நாயகன் காவல் தெளியீரோ? என்றார்."

பிறகு புலைப் பூசாரி கம்பீரமாக எழுந்து நின்று,

"முண்டாசு கட்டிவரும் நொண்டி வீரப்பனைக்
கொண்டாடிப் பூசைகளைக் கொள்ளுவீரென்றான்."

நந்தனார் அதற்கு விடையாக,

"அண்டங்கள் பதினாலுக் கப்பாலு மிப்பாலும்
நின்றார்க்கு முண்டாசு நிலைக்குமோ? என்றார்."

பூசாரி, நந்தனாரை ஒரு சிறிதும் லட்சியம் செய்யாது புலையர்களை நோக்கி,

"கச்சையரி வாள்வைத்த கறுப்பண்ண சாமியை
இச்சையுடன் வேண்டி, இடும்பலிகள் என்றான்"

நந்தனர், வருத்தத்தோடு,

"பச்சிலையும் பூவும் பாதத்தில் இட்டவுடன்
இச்சையெல்லாம் தந்தருளும் என்தெய்வமென்றார்"

புலையர்களும் நந்தனரை அலட்சியம் செய்து, பூசாரியை விசேஷமான பயபக்தி விசுவாசத்தோடு நோக்கி,

"நேயமறி கோழியும் நிதமூன்று சாவலும்
தியகள்ளும் வைத்துத் தெரிசிப்போம் என்றார்"

நந்தனர் ஜீவகாருணிய மிகுதியால் "ஆடு கோழி நீடு வாழ்க!" என்று கூவி,

"வாயாலே சிவமென்று வாழ்த்தினல் எப்போதும்
தாயாரைப் போலவே தழுவிவரும் என்றார்"

அப்பால் புலையர்கள் அனைவரும் பூசாரியின் கட்டளைக் கிணங்க,

"பித்துப் பிடித்திருக்கும் பேயனும் நந்தனுக்குச்
சித்தந் தெளிந்திடச் செய்குவீர்"

என்ற கூக்குரலோடு தெய்வங்களுக்குப் பூசை போடத் தொடங்கினர்கள். நந்தனரும் இவரது நண்பர்களும் ஆறாத் துயரத்தோடு,

"பத்திவெள்ளம் பெருகிப் பாய்ந்தாலும் சேரியில்
நத்தைபோல் வாழ்வோர்க்கு ஞானமுண்டோ"

என்று சொல்லிக்கொண்டு அவ்விடத்தை விட்டகன்றனர். நந்தனர் சென்றபின் பூசையை முடித்துப் புலையர்கள் அயலூரிலிருந்த புத்திமானும் தங்கள் குலகுருவுமான வள்ளுவனொருவனை நந்தனர் விஷயமாகக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று அங்கே சென்றார்கள்.

எட்டாம் அத்தியாயம்

உயர்தர வியவசாயம்

நாளடைவில் ஞானபக்தி மூட பக்தியை வென்று வலியழித்தது. நந்தனருடைய 'அடியார்—திருக்கூட்டம்' தொகையிலும் செல்வாக்கிலும் அதிகரித்து வந்தது. பழைய சிறு தெய்வ வழிபாடுகளிலும் மிருக பலிகளிலும் களியாட்டங்களிலு முள்ள நம்பிக்கையும் உற்சாகமும் குறைந்து வந்தன. ஓய்வு நேரங்களிலெல்லாம் பாட்டும் பஜனையும் கதையும் நல்ல காலக்ஷேபமும் நடைபெற்றன. புலையர்கள் பலரும் உடம்பையும் உள்ளத்தையும் சுத்தமாக வைத்துக்கொண்டு, நித்த நியமங்களான ஜபதப நிஷ்டைகளோடு, தங்கள் தொழிலையும் கவனமாகச் செய்து வந்தனர். ஒவ்வொரு நாளும் தத்தம் வேலை முற்றுப்பெற்றபின் அவர்கள் நந்தனர் தலைமையில் ஒன்றாகக் கூடி நின்று, கள்ளுண்டு கருத்தழிந்து கூத்தாடும் வழக்கத்தை அறவே ஒழித்து விட்டதால், இதற்கு மாறாகத் தில்லையம்பலத்தில் திருநடம்புரியும் புண்ணிய மூர்த்தியாகிய ஆனந்த நடராஜப் பெருமானைத் திசை நோக்கி வணங்கி, உலகக் கவலைகளை உதறித்தள்ளி ஆனந்தமாகக் கூத்தாடுவார்கள்.

இரவில் நெடுநேரம் வரை, நந்தனர் அவர்களுக்குக் கருணைக்கடலான கடவுளின் மகிமையை எடுத்துரைப்பார். அவர்களும் பக்தி விசுவாசத்தோடு கேட்டு ஆனந்தம் அடைவர். தமக்கு விரோதமாகவும் தமது நன்முயற்சிகளுக்கு இடையூறாகவு மிருந்தவர்களையும் அவர் அன்பால், ஒழுக்கத்தால், பொறுமையால், வசப்படுத்தலுற்றார். தம்மீது புலிபோலப் பாய்ந்து சீறி வருவோரிடத்தும், அவர் பசுவைப்போலச்

சாதுவாகவே நடந்து கொள்வார். முகத்தில் அடிப்போரை யும் முத்தமிட்டுக் கொண்டாடுவார். தம்மைக் கல்லால் எறிந்து காயப்படுத்துவோரையும் தழுவி யணைத்து உபசரிப்பார். குப் புறத்தள்ளிக் கோபித்து உதைப்போரையும் கும்பிட்டு வாழ்த்தி 'இறையருள் பெருகுவதாக!' என்பார்.

நந்தனாரது திருவுளத்தில் உதயஞ்செய்து திகழ்ந்த ஞான சூரிய ஒளியின்முன் சேரியில் செறிந்திருந்த அறியாமை யிருளும் மூடபக்தியிருளும் மறைந்தொழிந்தன. அவரது நல் லொழுக்கத்தின் முன், அழுக்காறும் தூரபிமானங்களும் தலை யெடுத்து நிற்க முடியாமல் ஓட்டம்பிடித்தன. அவரது மெய் யன்பின்முன் பகைமை முதலிய துர்க்குணங்களெல்லாம் முகங்காட்டாது மறைந்தன. தியாக மூர்த்தியாக விளங்கிய அவரது அற்புத வசீகர சக்தியால், சேரி சிவலோகம் போல விளங்கியது.

"அரகர சிவசிவ அம்பல வாணு!
தில்லையம்பல தேசிக நாதா!
புரமூன் றெரித்த பொன்னம்பல வாணு!
கரியுரி போர்த்த கருணு கரனே!
அநுதினம் மன்றுள் ஆடிய பாதா
பிழைபொறுத் தாளும் புண்ணிய மூர்த்தி!"

என்று காலையிலும் மாலையிலும் புலையர்கள் சித்தம் மகிழ்ந்து பக்திசெய்தார்கள். பகல் முழுமையும் அவர்கள் பயிர்த்தொழி லிலும் பண்ணைத் தொழில்களிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

ஒரு நாள், பயிர்த்தொழில் முடிந்து வந்தபின், நந்தனர் தமது தோழர்களை நோக்கிப் பின்வருமாறு பேசினுர்:—

"அன்பர்களே! ஆருயிர்த் தோழர்களே! நாம் கைகால் களாலும், உடம்பாலும் உழைத்து வியவசாயம் செய்து

வருகிறோம். இவ்வாறே கருத்தினால் உழைத்துச் செய்யும் உயர்தர - வியவசாயம் ஒன்றுண்டு. 'பூமி தரிசனம்' இவ் வியவசாயத்திற்கு எவ்வளவு அவசியமாகுமோ, அவ்வளவு 'சுவாமி தரிசனம்' என்பது அவ்வியவசாயத்திற்கு இன்றி யமையாததாகும். சிந்தித்துப் பாருங்கள், நண்பர்களே! இவ் வியவசாயத்திற்கு நிலத்தை உழுது பண்படுத்துவது அடிப் படையான காரியமல்லவா? அவ்வண்ணமே உண்மையாய் உழவைச் செய்து உள்ளத்தைப் பண்படுத்துவது, நாம் செய்ய வேண்டிய உயர்தர வியவசாயத்திற்குரிய அடிப்படை யான காரியமாகும். நிலத்தை நன்றாக உழுது பண்படுத்திய பின், நாம் என்ன செய்கிறோம்? வளமாகப் 'பாத்தி' கட்டி விதை தெளிக்கிறோமல்லவா? அவ்வாறே, உண்மையால் பண்பட்ட உள்ளத்திலே, நல்விருப்பமென்னும் விதையை விதைத்தல் வேண்டும். நண்பர்களே! உழுது விதைத்து நாற்றைப் பிடுங்கி நட்டபின், என்ன செய்கிறீர்கள்? களை பிடுங்குகிறீர்களல்லவா? நன்று, நன்று! உயர்தர வியவசாயத் திலும் களையெடுத்தல் வேண்டும். பொய் யொழுக்கங்களான களைகள் மண்டித் துயர் கொடுக்கின்றன. இக்களைகளைக் களைந் தெறிதல் வேண்டும். சாதாரண வியவசாய முறையில், மடை திறந்து நீர் பாயவிடுகிறீர்களல்லவா? உயர்தர வியவசாயத் திலும் மடை திறந்து நீர் பாய்ச்சுதல் வேண்டும். அன்பர்களே! நாம் ஆத்திரப்படாமல் பொறுமை—நீர் பாய்ச்சுதல் வேண் டும். நன்செய்களைச் சுற்றிப் பார்க்கிறோமல்லவா? அவ்வண் ணமே 'தன்னம்பிக்கை'யோடும் 'தன்னறி'வோடும் தம்மை நோக்கிக் கண்டு வருவதும் அவசியமாகும். பயிர்த்தலையிலே வேலியிட்டுக்காக்கும் சம்சாரியைப்போல், தன்னடக்கமென் னும் வேலியிட்டுப் பயிரைப் பாதுகாப்பதும் அவசியமாகும்.

இதுவும் செம்மையான பயிர்த்தொழிலேயாகும். இவ்வாறு பாடுபட்டுப் பார்த்தால், செந்நெல் கதிர்வீசி விளைவதுபோல், சிவகதியும் தானே முளைகொண்டு நாறெழுந்து கதிர் வீசி விளையும் என்பது திண்ணம். உள்ளங்கைக்குள்ளிருக்கும் கனியைப்போல், இவ்வுயர்தர வியவசாயம் எள்ளளவும் பிசகாது விருத்தியடையும். நண்பர்களே! வயிறு வளர்ப்பதற்கு அவசியமான பயிர்த்தொழிலைப் போலவே, சிவகதி விளைக்கும் செம்மையான பயிர்த்தொழிலும் நமது ஆன்ம வளர்ச்சிக்கு—நமது உயர்தர வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். நண்பர்களே! ஜாக்கிரதையாக இப்பெரிய வியவசாயம் செய்து பிழையுங்கள்!

இவ்வாறு பேசியபின், அவர் தாம் இளமையில் வழிப்போக்கனை ஒரு துறவியிடம் ஒருதரம் கேட்டு நினைவில் வைத்திருந்த அப்பர் அருள்மொழியான தேவாரத் திருப்பாட்டொன்றை அவர்களுக்குக் குழலை வென்று குளிர்ந்த தமது இயற்கைக்குரலில் பாடிக்காட்டினர். அப்பாட்டு வருமாறு:—

“மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே!”

அத்தொண்டர் கூட்டத்தில் சிலரிடம் இயற்கையாகவே குளிர்ந்த நல்லிசை பாடுவதற்குரிய குரல் அமைந்திருந்தது. அவர்களும் நந்தனரோடு அபேதமாக மனங்கலந்து பாடினர்

கள். பாடப் பாடப் பாட்டின் பொருளும் இசையும் ஒன்றுபட்டிசைந்து பேரின்ப வெள்ளமாகப் பொங்கி யெழுந்தன. அவ்வின்ப வெள்ளத்திலே அவர்களது உணர்வு கரைந்து போயிற்று. அவர்கள் புத்துயிர் பெற்று வீடு சேர்ந்தார்கள்.

நந்தனர் சொற்ப நேரம் தங்களைப் பிரிந்தாலும், அவரது தோழர்கள் சகிக்க மாட்டார்கள்; தாயைப் பிரிந்த சேய் போல் தவிப்பார்கள். அவரைக் காண்பதும் அவருடனிருப்பதும் அவர் சொல்லைக் கேட்பதும் அவர்களுக்கு எப்பொழுதும் ஆனந்தமாகவே யிருந்தன.

சில சமயங்களில் அவர்கள் அவரை நோக்கி, "ஐயா, நீங்கள் சொன்ன வியவசாயம் கஷ்டமான காரியமன்றோ? எங்களுக்கும் சிவகதி விளையுமோ?—என்று மனம் அஞ்சுகிறது; உயிர் நடுங்குகிறது. நாங்கள் என்ன செய்வோம்?" என்று விண்ணப்பஞ் செய்துகொள்வார்கள். அவர் அவர்களை நோக்கி, அருள் தோய்ந்த புன்னகை செய்து, " நண்பர்களே, நமக்கினி அச்சம் ஏது? தில்லை நடராஜனிருக்கும்போது நடுக்கமுமுண்டோ? சிறுவனுக்காக அருள் சுரந்து காலனைக் காலால் உதைத்த கடவுளிருக்க, அச்சமெனும் துச்சமான பேயும் நம்மை அணுகத் துணியுமோ? ஆலகால விஷத்தைக் கண்டு அஞ்சி ஓடிய அமரர்களுக்காக இரங்கித் தான் விஷமுண்டு பிறரைக் காத்த தயாநிதி யிருக்க, நமக்கும் குறையுண்டோ? நண்பர்களே! அவன் பெயரை நம்பினல், நான் சொன்ன பெரிய வியவசாயம் சுலபமாகும். 'அரஹரா' என்று ஒரு குழி நட்டால் ஐங்கலம் விளையும்—என்பது உயர்தர வியவசாயத்திற்கு விசேஷமாகப் பொருந்து மன்றோ?" என்று கூறுவார். அவர்களும் ஐயந்தெளிந்து அச்சமறுத்து, இறைவனை வாழ்த்தி ஆடுவார்கள்.

சில சமயங்களில் அவர்கள் பலவேறு கேள்விகளைக் கேட்பார்கள். ஒரு நாள் ஒருவன் விஸ்தாரமான இந்த அண்ட கோடிகளெல்லாம் இறைவனிடத்தில் எவ்வாறு அடங்கிக் கிடக்கின்றன என்று வினவினன். நந்தனர் தந்தை போல அவனைத் தழுவிக் கொண்டு,

"வித்துக்குள் விருட்சம் அடங்கிய வாறுபோல்
சத்துக்குள் அண்ட சராசரம் மைந்தா !"

என்று மொழிந்தார்.

வேறொருவன் நந்தனரைப் பார்த்துப்,

"புத்திக்குள் எட்டாத போதத்தை நாமுண்டு
முத்தி பெறும் வழியில் முற்பட்டு நிற்போமோ"

என்று கேட்டான். நந்தனர், அத்தனருளால் இம்மையும் மறுமையும் ஒருங்கே பெறுவது எளிதாகு மென்றார்.

தத்துவங்கடந்த தனிமுதற் பொருளை எவ்வாறு எண்ணுவது என்று ஒருவன் வினவினன். நந்தனர் சிரித்துக்கொண்டு

'பத்தி வலைவீசிப் பார்த்திடும் போதினிலே
தத்திக் குதித்திடும் தாண்டவம், மைந்தா !'

என்றார்.

ஒரு கிழவன் நந்தனரை நோக்கி, "பித்தனைப் பேய்கள் பிடித்துக் கொண்டது போல் நம்மைச் சுற்றியலைக்கும் சித்த விகாரங்கள் தெளியுமோ ? நந்தா !" என்று கேட்டான். நந்தனர் அவனுக்குப் பத்திநெறி யறிவித்துச் சித்தமலம் அறுக்கும் உபாயத்தை விளக்கினர்.

பிறகு அவர்கள் எல்லோரும் நந்தனரைக் கண்குளிர நோக்கி,

"சீலமுள்ள நல்லசெய்தி சொன்னாய் உன்றன்
காலுக்குக் கும்பிடு!"

என்று உவகையோடு சொன்னார்கள். நந்தனாரோ, "எல்லாம் இறையருள்! எல்லாம் உங்கள் பாக்கியம்!" என்று கூறினார். பிறகு அவர் தமது 'வியவசாயம்' வீணாகவில்லை யென்று மகிழ்ந்து, அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினார்.

ஒன்பதாம் அத்தியாயம்

ஆதனூர் வேதியன்

சேரியில் நந்தனாரது செல்வாக்கு அதிகரித்து வருவதைக் கண்டு, 'பூசாரி' தன் பிழைப்பிற்கு வழி இனி இச்சேரியில் இல்லாமற் போய்விடுமே யென்று பெருங்கவலை கொண்டான். அவனது தூண்டுதலால், நந்தனார் விஷயமாக முடிவான ஆலோசனை செய்யும் நோக்கத்தோடு, புலைச்சேரியில் ஒரு பெருங்கூட்டம் கூடியது. ஆனால் அக்கூட்டத்தில், நந்தனாருக்குச் சேரியிலிருந்த பெருமதிப்பு நன்கு வெளிப்பட்டது. வயது சென்ற சில புலையர்கள் மாத்திரம், அதிகமான பக்தியால் தொழில் முறை கெட்டுப்போகுமென்று கருதி, நந்தனாரைப் பணிந்து நல்ல வார்த்தை சொல்லி, "நாங்கள் நாளொன்றுக்கு மூன்று முறைதான் சிவனே! என்று சொல்லுவோம்; மற்ற வேளையில் எங்கள் தொழிலைச் செய்துகொண்டிருப்போம்" என்று சமாதானமாக வேண்டிக் கொண்டனர். நந்தனாரும் சந்தோஷித்து, எல்லாம் சிவன் செயல் என்று நம்பி, 'நல்லது, அப்படியே தப்பாமல் செய்யுங்கள்' என்று சொல்லிச் சம்மதித்தார். எனவே சேரிவாசிகள் அனைவரும்

தினம் மும்முறை சிவ நாமத்தைச் சொல்லவேண்டு மென்னும் தீர்மானம் அக்கூட்டத்தில் நிறைவேறியது.

நந்தனாரது செல்வாக்கைக் கெடுக்கவேண்டும் என்னும் நோக்கத்தோடு கூடிய கூட்டம், ‘பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதை’ யாகவே முடிந்ததென்று கண்ட ‘புலைப் பூசாரி’ பழைய வழக்கங்களில் அமிதமான பற்றும் பிடிவாதமுங் கொண்ட சிலருக்குத் துர்ப்போதனை செய்து, ‘ஊர்ப்புலையர்’ என்று நந்தனர் செருக்கித் திரிகிறாரென்றும் இவர் செய்யும் அக்கிரமங்களை இவரை அடிமை கொண்டிருக்கும் பெருஞ்செல்வனை ‘ஆண்டைப் பார்ப்பா’னிடம் தெரிவித்தல் வேண்டுமென்றும் அப்பொழுதுதான் நந்தனரது மதம் ஒடுங்குமென்றும் சொல்லி, அவர்களைத் தன் அபிப்பிராயத்திற்கு இணங்குமாறு வேண்டினன். ‘எறும்பூரக் கல்லுந் தேயும்’ என்றவாறு, பூசாரி இடைவிடாது செய்த போதனைகளால், சிலர் நந்தனரது ஆண்டானிடம் செல்லவேண்டுமென்று தீர்மானித்தார்கள். ‘நாளொன்றுக்கு மூன்றுதரம் சிவ நாமம் சொல்லும் நிர்ப்பந்தம் தங்களுக்கும் ஏற்பட்டுவிட்டதால் பெரிதும் வருந்திய அவர்கள் எப்படியாவது இத்தகைய குற்றங்களுக்கெல்லாம் காரணமான நந்தனரை அடக்கிவிடவேண்டுமென்று முடிவு செய்து கொண்டார்கள்.

அரவன், தொந்தி, ஆனையேறி, முத்துமாரி, கழனிகாத்தான், பாய்ச்சலூரான், ஆண்டி, சேவகன், சொறியன், வெறியன், கணியன், எல்லைசுற்றி என்னும் பெயர்கொண்ட பன்னிரண்டு பேரும் நந்தனரது ‘ஆண்டை’யும் ஆதனூர் வேதியன் என்று பிரசித்தி பெற்றிருந்தவனுமான சீமானது மாளிகையை நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்கள் தூரத்திலே நின்று கொண்டு கூவியழைத்ததைக் கேட்டு, வேதியன் தன்

மாளிகையைச் சார்ந்த தோட்டத்தில் வந்திருந்து கொண்டு, புலையரிடம் வந்த சமாசாரம் என்னவென்று கேட்டான். அவர்கள் பின்வருமாறு செய்தி சொன்னார்கள் :—

" ஐயே! ஒரு செய்திகேளும்—உங்கள்
அடிமைக்காரப் பறையன் நடத்தையெல்லாம்
வரவரக் கெட்டுப்போச்சு—சேரியில்
வழக்க மில்லாதபடி பழக்கமிட்டான்,
குடி யிருக்க மாட்டோம்—எப்போதும்
கூக்குரல் போடுகிறான் ஆக்கைமறந்தே
இருப்பான் ஒருவேளை—பொல்லாத
எக்கம் அடைந்தவன்போல் நாக்கை வளைத்துச்
சிரிப்பான் ஒருவேளை—தில்லைச்
சிதம்பரம் என்று சொல்லி மதம்பிடித்தே
அழைப்பான் ஒருவேளை—எங்களையும்
அண்ணேவா ! என்றுசொல்லிக் 'கிண்ணாரங்' கொட்டிக்
குதிப்பா னொருவேளை—'திக்குமுக்கல்'
கொண்டவன்போல் எதையோ கண்டவன்போல்
களிப்பா னொருவேளை—மரம்போலே
கையசைத்தல் காலசைத்தல் மெய்யசைத்தலும்
இருக்கா தொருவேளை—தாளம்போட்(டு)
எக்கலிகொட் டியேகுடி சைக்குட் புகுந்து
பேசா னொருவேளை—கண்டதெல்லாம்
பிரட்டென்று சொல்லுவான் முரட்டுத்தனம்
மன்னரச் சாமிபோலக்—கிளம்பி
வாய்விட் டலறும்குரல் ஊரெட்டுமே!
ஐயோ! சிவனே! யென்பான்—கீழே புரண்
டழுவான் யாரையும் தொழுவானே
தூண்டி(ல்) மீனதுபோலத்—துள்ளித் துள்ளித்

துடிப்பான் பற்களைக் கடிப்பானே
சிவனென்று மூன்று* வாட்டி—நாங்களும்
செப்பவேணு மில்லாவிடில் வப்பிலுதைப்பான்
கோவிலிற் போவோமென்பான்—எங்களையும்
கும்பிடச் சொல்லியில்லா வம்பு பண்ணுவான்
சுற்றிவரச் சொல்லியடிப்பான்—சிவன்பேரைச்
சொல்லடா சந்நிதியில் நில்லடாவென்பான்
சொல்லித் தொலைக்கவேணும்—இல்லாவிடில்
சுக்குமாந் தடிகொண்டு நொக்கிவிடுவான்
கொம்பேறி மூக்கன்போல—முதுகினில்
குத்துவான் புலிபோலத் தத்துவானே
இதுஎன்ன காரணமோ—எங்களுக்
கீனமாயிருக்குது மானமல்லவோ
கறுப்பண்ண சாமிதானே—இருளன்
சாட்டேரிவீரன் இவன் வீட்டேரியோ,
பாவாடைத் துரைதானே—ரண
பத்திரகாளியோ! உன் மத்தவீரனே
பூசைகள் போட்டுப் பார்த்தோம்—ஒன்றிலும்
போவதில்லை, காரிய மாவதில்லையே,
எங்கள் வள்ளுவரைக் கேட்டோம்—அவர்
எடுத்துச சொன்னரிதை விடுத்துச்சொன்னர்
மாயான உருத்திரனர்—பிடித்து
வாட்டுதடா இப்படி ஆட்டுதென்றர்
தெளியா தென்று சொன்னர்—ஐயே!
தெளியா தென்று சொன்னர்."

இவ்வாறு செய்தி சொல்லவந்த பறையர்கள், நந்தனர்மீது குற்றம் சொல்லத் தொடங்கி, அவரது பக்திப் பெருக்கின்

* வாட்டி=தரம் (கிராமியச் சொல்.)

விளைவுகளைத் தாங்கள் கண்டபடி சித்திரித்துப் பேசலுற்றார். பேச்சினிடையே, பக்தி பண்ணும்படி நந்தனார் தங்களையும் இம்சிக்கிறாரென்று சொல்லி, 'ஆண்டை'ப் பார்ப்பானுக்கு 'அடிமை'யின் மீது கோபம் பிறக்கும்படி ஜாலஞ் செய்திருந் தார்கள். அவ்வாறு பக்தி செய்வதால் தங்களுக்கு மானம் போய்விட்டதென்றும், அம் மான நஷ்டத்திற்கு நந்தனாரே காரணமாவாரென்றும் சொன்னார்கள். நந்தனாரை இவ்வித மாக ஆட்டிவைப்பது பலவேறு சேரித் தெய்வங்களில் எது தான் என்று தெரிந்துகொள்ள இயலாத நிலையில் பூசைகள் போட்டுப் பார்த்ததாகவும், அப் பூசைகளால் ஒரு பயனும் ஏற் படவில்லை யென்றும், அவை வீண்செலவும் சிரமமுமாகவே முடிந்தனவென்றும் ஒப்புக்கொண்டார்கள். முடிவில், தங் கள் குலகுருவான வள்ளுவனிடம் கலந்து யோசித்ததையும், அவன் நந்தனாரை ஆட்டிவைப்பது சேரித்தெய்வ மன்றென்று துணிந்து மயான உருத்திரனாரே, இவரை வாட்டுகிறாரென்று யுக்தியாகக் கண்டுபிடித்துக் கூறியதையும் நந்தனது நோய் தெளியாத நோய் என்று வள்ளுவனே ஒப்புக்கொண்டதை யும், அவர்கள் 'ஆண்டை'யிடம் ஒளியாதுரைத்து, நந்தனார் மீது தங்களுக்குள்ள விசேஷ அனுதாபத்தையும் தெரிவித் தார்கள்.

வேதியன் தாங்கள் சொல்வதை விசேஷ கவனத்தோடு கேட்டுக்கொண்டிருக்கிறானென்பதை அறிந்ததும், அவர்கள் தாங்கள் சொல்ல விரும்பியதையெல்லாம் தொடர்ந்து சொல் வாராயினர். "ஐயரே! நந்தனார் செய்தியைச் சொல்வதற்கா கத்தான் நாங்கள் இங்கே வந்தோம்; அக்கிரகாரத்தில் எங்க ளுக்கு இன்று வேலையில்லை. 'ஊர்ப்புலையர்' என்னும் பத விக்கும் உங்கள் 'அடிமை' என்னும் தகுதிக்கும் வேண்டிய

யோக்கியதை நந்தனரிடம் சிறிதும் காணப்படவில்லை. அவருக்குச் சாதி முறைமை கொஞ்சமும் தெரியவில்லை. உழைப்பிலும் நந்தனர் வழக்கம்போல் ஈடுபடுவதில்லையென்றே நினைக்கிறோம். ஏரைப்பிடித்துச் சற்றே உழுகிறார்; உடனே ஏங்கித் தள்ளாடி விழுகிறார். சில சமயங்களில் எங்கள் சேரியைப் பார்த்து அழுகிறார். திடீரென்று 'சிவ சிதம்பரப்' பித்தம் வந்துவிடுகிறது. அப்போது திசை நோக்கித் தொழுகிறார். நாற்று முடியைக் கையில் எடுப்பார்; எடுத்த நாற்றை நடத்தெரியாமல் விழிப்பார். இதைப் பார்த்தால், எங்களுக்குச் சிரிப்பு வருகிறது. இப்படிப்பட்ட பக்தியால், 'ஆண்டை'யின் பயிர்த்தொழில் மோசமாகுமல்லவா? எசமானுக்குத் துரோகம் செய்து என்ன பக்தி வேண்டியிருக்கிறது? சில வேளை உதட்டை யசைத்துக்கொண்டு 'மிணமிண' வென்று எதையோ முணு முணுக்கிறார். என்ன முணு முணுப்பு வேண்டியிருக்கிறது? இப்படிப்பட்ட கூத்தாடிக்கும் எங்கள் சேரியில் ஒரு கூட்டம் சேர்ந்து விட்டது. நாளுக்கு நாள் பைத்தியம் அதிகமாகப் பரவி வருகிறது; குறையக்காணோம். நாங்கள் என்ன செய்வோம்? அதட்டிப் பேசினல், அக் கூட்டத்தார் எங்களை அடித்து நையப் புடைத்து விடுவரென்று பயப்படுகிறோம்" என்றனர்.

இவ்வாறு புலையர்கள் முறையிட்டுக் கொண்டதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த வேதியன் தன் மன நிலையை வெளியிடாமலே, அவர்களை நோக்கி, "நான் இவ்விஷயத்தில் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்கள்" என்று சுருக்கமாகக் கேட்டான்.

புலையர்கள் உடனே 'இவனை அடக்கி ஆளும் ஐயே! அடக்கியாளுமையே! என்று கூவினர்கள். அப்புலையர்களில்

ஒருவனுன வெறியன், "ஐயோ! சாமீ! குடிக்கக்கூடாதென் றும் தெய்வங்களுக்குப் பலியிடலாகாதென்றும் தடுக்கிறுன், குடியாத குடிக்கு விடிவுண்டா? சாமீ! துடுக்குக்காரன். சாமீ! இவனைப் பிடித்துக் கண்டித்து அடக்கியாளவேணும், சாமீ!" என்று பட படப்பாகப் பேசினுன்.

வேதியன் சிரித்துக்கொண்டு புலையர்களைப் பார்த்து, "நந்தனுடைய நோக்கந்தான் என்ன?" என்று கேட்டான். புலையர், "நந்தனர் பொன்னம்பலம், பொன்னம்பலம் என்றே சொல்லிக்கொண்டு, நாளைப்போவேன்! நாளைப்போவேன்!! என்று ஊணுறக்கத்தையும் துறந்து புலம்பிக்கொண்டிருக் கிறுர். ஊர்ப்புலையரென்று நாங்கள் எத்தனை நாள் மரியாதை கொடுத்துப் பார்ப்போம்? இவர் கூட்டத்தைச் சேர்ந்த சிறு பிள்ளைகளெல்லாம் சாம்பலைப் பூசிக்கொண்டு வீண் பொழுது போக்குகிறுர்கள். சிறுவரை மயக்குவதற்கு என்ன மந்திரம் போட்டானே? என்ன சொக்குப் பொடி தூவினுனே? குழந் தைகள் பெற்றேர் சொல்லைக் கேட்பதில்லை. சிறுவர் சிறுமி யர்கள் மூத்தோர் சொல்லைக் கேட்பதில்லை. பழைமையான பழக்க வழக்கங்களை யெல்லாம் 'தூ' வென்று தள்ளிவிட்டார் கள். பூசாரிக்கு மதிப்பில்லை; வள்ளுவருக்கு மதிப்பில்லை; சேரித் தெய்வங்களுக்கும் மதிப்பில்லை யென்றுல் நாங்கள் என்ன செய்வோம்? பேசுந் தெய்வமாகிய ஆண்டைச் சாமி தான், எங்கள் குலத்தைக் கெடுக்க வந்த கோட்டானைத் திருத்த வேண்டும். சாமீ! அவர் இனி எங்கள் வழிப்பட மாட்டார். சாமீ! எசமானே! சிதம்பரம், சிதம்பரம் என்றும் நாளைப்போவேன் நாளைப்போவேன் என்றும் புலம்பிப் பொழுது போக்கும் வீணனை எப்படியாவது அடக்கி யாள வேண்டும்!" என்று புலையர்கள், கேட்ட கேள்விக்கு நேரே

விடை சொல்லாமல் காட்டையும் மேட்டையும் வளைத்துப் பேசினார்கள்.

வேதியன் புலையர்கள் சொன்னதையெல்லாம் ஒருமை யுள்ளத்தோடு கேட்டபின், அவர்களை நோக்கி, "நந்தன் காலைப்பொழுதில் இங்கே வந்திருந்தான்; கள்ளக் கும்பிடுகள் போட்டான்; குழந்தையைப் போலே பேசிப் பசப்பினான்; போடா! என்று சொன்னேன். நீங்கள் சொல்வதைப் பார்த்தால், இந்த ஜம்பூத்வீபத்தில் இவனைப்போன்ற வீணன் இருக்கமாட்டா னென்றே நினைக்கிறேன். சிதம்பரம் செல்ல நான் அவனுக்கு ஒரு நாளும் விடை கொடுக்கமாட்டேன். நீங்கள் போய் வாருங்கள்" என்று சொல்லி யெழுந்தான். புலையர்கள் சந்தோஷங்கொண்டு சேரி சேர்ந்தனர்.

பத்தாம் அத்தியாயம்

ஆண்டானும் அடிமையும்

புலையர்கள் போனபின் நந்தனார் வழக்கம்போல வேதிய னிடத்தில் வந்தார். நந்தனார் நம்பிக்கையுள்ளவரென்றும் நல்ல உழைப்பாளி யென்றும் அதிர்ஷ்டமுள்ளவரென்றும் வேதியன் எப்போதும் கருதியிருந்ததால், அவரைத் தனது 'சொந்தமான நந்தன்' என்று பெருமிதத்தோடு கூறுவதுண்டு. புலையர்கள் தனக்கு அறிவித்த விஷயங்கள் சேரியிலிருந்து வெகுதூரம் விலகி வாழ்ந்த அவனுக்குப் புதுமையாக விருந்த தோடு, ஒருவாறு மனக்கலக்கத்தையும் விளைத்து விட்டன. எனவே நந்தனாரோடு நீண்ட சம்பாஷணை செய்து அவரது மனக்கருத்தை யெல்லாம் உள்ளவாறு தெரிந்துகொண்டு.

அவரைத் திருத்தி, எப்போதும்போல் அடிமை கொண்டிருக்க வேண்டுமென்று வேதியன் தீர்மானித்துக் கொண்டான்.

நந்தனார் தூரத்தில் வந்துகொண்டிருக்கும்போதே, பிராமணன் அவரை உற்றுநோக்கத் தொடங்கினான். நந்தனார் தமது மேனி முழுமையும் திருநீறு பூசியிருந்தார். 'அரகர சிவசிவ!' என்று சொல்லிக்கொண்டும் 'சிதம்பரம் போவேன், நாளைப் போவேன்' என்று சொல்லிக்கொண்டும் வந்தார். அவர் நெருங்கிவரவர அவரது திருமுகத்தை உற்றுநோக்கிய வேதியனுக்கு, 'இவர் நமக்குச் சொந்தமான நந்தன் அல்லர்; இவர் வேறொரு நந்தனாராவர்' என்னும் உணர்வு பிறந்தது.

பிராமணன் ஒன்றும் பேசவில்லை. அப்பொழுது நந்தனார் "நான் திருச்சிற்றம்பலத்தைக் கண்டு ஆனந்திக்க விரும்புகிறேன். ஐயரே! வேதமொழி விளங்கும் உமது திருவாயால் விடை கொடுத்தனுப்புவீர்" என்று வேண்டினார். "நந்தா! நீ சொன்னது எனக்கு விளங்கவில்லையே!" என்று கூறிப் பகற் கனவு காண்பவன்போல் வேதியன் விழித்தான்.

நந்தனார் சொன்னார்;—"தில்லையம்பலத் தலமொன்று உண்டாம், பார்த்தவர்க்கு உள்ளங்குளிரக் கருணை பொழியுமாம்! அத் தில்லைக் காட்டில் உள்ள மருந்தே பிறவிப்பெரும் பிணிக்குக் கைகண்ட அருமருந்தாம். அம்மருந்து பிரமனை மூத்தையும் அழித்துவிடுமாம், ஆரையும் அது ஆனந்த முழுக் காட்டுமாம், உருவில்லாத குருவாம்; அது உருவமாகி விளையுமாம். அம்மருந்தைப் பார்த்துவர உத்தரவு தாரும்."

இவ்வாறு நந்தனார் கூறியதைக் கேட்ட பிராமணன், கனவு காண்பவன் திடீரென்று விழித்துக்கொள்வதுபோல் விழித்து, "இவன் சோம்பேறிகளைப்போல் வீண் வேதாந்தம் பேசு

கிறான். இப்படிப்பட்ட பேச்சை எவனே ஒரு துறவியி னிடம் கிளிப்பிள்ளைபோல் கற்றுக்கொண்டிருக்கவேண்டும். கற்ற பாடத்தை நம்மிடத்திலேயே காட்ட வந்துவிட்டான். இவனுக்குப் புத்தி கற்பிக்க இதுதான் சமயம்" என்று நினைத் தான். உடனே அவன் நெஞ்சம் துடித்து முகத்தில் கடுங் கோபத்தைத் தோற்றுவித்துக்கொண்டு, நந்தனரை நோக்கி, "நந்தா! உன் அதிகப் பிரசங்கம் போதும், போதும். அப்படிப் பட்ட பிரசங்கத்தைச் சேரியோடு நிறுத்திக் கொள். சேரியில் சிவ பக்தியாம்! உன் செய்தியை நான் தெரிந்து கொண் டேன். 'உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி கருடனுகு மோ?' சேரிப் புலையனுக்கும் சிதம்பர முண்டோ? அடிமை வேலை செய்யும் உனக்கும் கொண்டாட்டமோ, ஜனக்கூட்ட மோ? அடக்கியாள மாட்டேனே? ஆதனூர் வேதியன் சிங்கக் குட்டி என்பதை மறந்தாயோ? சேரி வழக்கங்களை நீ கண்டிக்கிறாயாம். உன் கபட நாடகங்களை நான் கண்டு கொண்டேன். சிதம்பரம் போவதிருக்கட்டும். சிதம்பரம் என்று வாயால் சொல்லத்தான் நினைக்கத்தான் உனக்கு யோக்கியதை யுண்டா? உன் அறியாமைக்காக உன்னை இவ் வொருதரம் மன்னிக்கிறேன். இனி இப்படிப்பட்ட பேச்சை விடு. நாற்றைப் பதத்தில் பிடுங்கி நடுவதும் வேறு பயிர்த் தொழில்களும் பறைத்தொழில்களும் செய்வதும் உக்கிர மாடன் உன்மத்தவீரன் முதலான தெய்வங்களுக்குப் பலி கொடுத்துக் கள்ளுக்குடம் வைத்து வழிபடுவதுமே உங் கள் சாதி முறைகளாகும். மேலும் நீ முறி யெழுதிக்கொடுத் திருக்கிறாய் என்பது உன் ஞாபகத்திற்கு வரவில்லையா? உன் கூலியை நான் ஒழுங்காகக் கொடுத்து வரவில்லையா? வயிற் றில் அடியாமல் உன் குடும்பத்தைக் காப்பாற்றிக்கொண்டு

வரும் எனக்கு, முதுகில் அடித்து நல்வழிப்படுத்தும் உரிமை யுண்டல்லவா?" என்று 'மடமட' வென்று பேசினன்.

வழக்கமான மன அமைதியை இழந்து பதறிப்பேசும் பார்ப்பானை நோக்கி நந்தனார் கும்பிடுபோட்டு மெள்ளப் பேசினார். "சிதம்பரம் போனல் இதம் பெறலாகும். சாதியினும் சமயமே மேலானது. பக்தி பண்ணிக்கொண்டிருந்தால் எச்சாதியினரும் முத்தி பெறுதல் கூடும். எத்திசையிலும் எவ்வுலகிலுமுள்ள எவ்வுயிரினும் அவ்வுயிராய்க் கலந்து நிறைந்திருக்கும் பரம்பொருளின் அருள்பெற, மக்கள் அனைவரும் சமானர்; உயர்ந்தவரும் தாழ்ந்தவரும் சமானர். ஆண்டானும் அடிமையும் சமானர்; செல்வனும் ஏழையும் சமானர்; கற்றவரும் கல்லாதவரும் சமானர்" என்று இவ்வாறு பேசத் தொடங்கிய நந்தனார், தாம் தமது 'ஆண்டை' யைப் போல் வித்தைகள் கற்றதில்லையென்றும், தம்மைப் போன்றவனுக்கும் பக்தியில் பரகதி யுண்டெனத் தமது உள்ளம் சொல்லுகிறதென்றும், பேய்த் தெய்வங்களுக்குப் பலியிட்டுப் பேயனைத் திரிந்த காலம் புலர்ந்து போயிற்றென்றும், தாம் ஏதாவது குற்றங்கள் செய்திருந்தால் அத்தனையும் பொறுத்து ஆதரவாக 'ஆண்டை' உத்தரவு கொடுத்துத் தம்மை அனுப்பிவைக்க வேண்டு மென்றும், தில்லைச் சிதம்பரத்தைத் தெரிசித்து வந்தால், 'ஆண்டை'யின் எல்லையைக் காத்துக் கொண்டிருப்பதில் தடையில்லை யென்றும் கூறி முடித்தார்.

பிராமணன் அசையவில்லை. "அடிக்கடி மறுத்து நான் சொல்லவோ? நீ அடிமைக்காரன்தான் என்பது உன் நினைவில் இருக்கட்டும். சாசனம் இருக்கிறது; எடுத்துக் காட்டுவேன்.

தடுத்துப் பேசினல் தாடையில் அடிப்பேன்'' என்று உறுமிக் கொண்டு,

"சாதியிலே எளியவன் நீ அறியாயோ? என்றார்."

மனம் திருந்தப் பெற்றார்க்கு வாராத தொன்றில்லை யென்பது உண்மையாதலின், கல்வி பெறாத ஞானமணம் வீசப் பெற்ற நந்தனர், வேதியர் கேட்ட கேள்விக்கு விடையாகப் பளிச்சென்று,

"ஆதியிலே பேதமில்லை, அறிவீரோ? என்றார்."

பிராமணன் அதிகமாகக் கல்விகற்றவன், வேதசாஸ்திர நிபுணன். அவன் நந்தனரது விடையைக் கேட்டு ஆச்சரியமுற்று, இவனேடு சமாதானமாகவே பேசித் தனது காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டுமென்று துணிந்தான். பிறகு அவன் நந்தனரைப் பார்த்து, "நந்தா! எல்லாம் விதியின் செயல். நீ புலையனுகவும் அடிமையாகவு மிருப்பதும் நான் எஜமானுகவும் பிராமணனுகவும் இருப்பதும் விதியின் பயனல்லவா? நீ புலைத்தொழிலை அனுசரிப்பதும் புலைத்தெய்வங்களுக்குப் பூசை போடுவதும் கள்ளருந்துவதும் உன் பிழையாகுமா? விதியின் பிழையன்றோ? இதற்காக வருந்தி 'எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி' விடுவது அறிவுடைமையாகுமோ?'' என்றான். நந்தனர் சுருக்கமாக,

"மதியில்லாதவர்க் கெல்லாம் விதியே!" என்று கூறி, 'மதியால் விதியை வென்ற மார்க்கண்டனே சாட்சி' யென்று சொன்னர்.

பிராமணனது ஆச்சரியம் அதிகரித்தது. "இவனை நான் என் சொந்த நந்தனுக இதுவரை எண்ணி வந்தேன்; இப்பொழுது புதிய நந்தனுக வருகிருனே யென்று இவன்

இங்கு வந்தபொழுதே நினைத்தேன். சாஸ்திரத்தில் ஊறிக் கிடக்கும் என் உள்ளத்திற்கும் எட்டாத விஷயங்களை எளி தாக்கி அநாயாசமாக முடிவு கட்டிப் பேசுகிறான். இவனை எப்படியாவது மீண்டும் வசமாக்கிப் பழைய நந்தனாக்கி விடுவதே நலமாகும்'' என்று சிந்தித்த வேதியன், "சாசன மிருக்கிறது. பார்ப்பானை ஏமாற்றப் பார்க்கிறாயோ? நீ சிதம்பரம் போக எண்ணினாலும், பார்ப்பான் உத்தரவு கொடுப்பானோ?'' என்று குறும்பாகக் கேட்டான். அப்பொழுதும் நந்தனார் கலங்காது,

"காப்பாற்றும் கடவுளுக் கப்பாரம்'' என்றார்.

நந்தனார் பரவசமாய் ஆனந்தக் கண்ணீர் பெருக்கிக் கொண்டு இறைவனைக் கொண்டாடிப் பாடத் தொடங்கினார். பக்தமணிகளின் சித்தத்தில் நின்றாடும் பரமனே, சிதம்பரத்தில் அன்புருவாகிய அழகனாகவும் ஆரா அமுதாகிய ஆனந்த நடராஜாவாகவும் சமரச நடம்புரிந்து தரிசனம் தருகிறான் என்றும் இந்நிமல மூர்த்தியின் அருளையே நம்பி ஒழியாக் கவலைகளை ஒழித்து, உண்மை காண்பதே அறிவுடைமையென்றும் பொருள்பட நந்தனார் பாடினார்.

பிறகு அவர் வேதியரை நோக்கிப் "பலகலையும் கற்றுணர்ந்த ஐயரே! புத்தியில்லாத நான் சிதம்பரத்தை ஒரு தரமாவது தரிசித்து வரவேண்டுமென்று ஆசைகொண்டேன். தயவு செய்து அனுப்புவீர்!'' என்று மீண்டும் பிரார்த்தித்தார். பிராமணனோ பிடிவாதமாக மறுத்து, நந்தனாரை இகழ்ந்து,

"புத்தி சொல்லிக் கேளாத மூடா உன்றன்
புரட்டெல்லாம் நானறிவேன் போடா, போடா
பத்தியென்றும் சித்தியென்றும் பறையர்க் கேது
பார்ப்பாரத் தெய்வமது பாலிக் காது

குற்றமுண்டுன் சாதியிலே வழக்க மில்லாக்
கொள்கையது சேரியிலே கூடா தப்பா,
பித்தமது கொண்டவன்போ லிங்கே வந்து
பேசாதே போ, போ என் றேசு வானே.''

அவன் மேலும் பயமும் நயமுமாகக் கூறுவான்:—“சிதம்பர தரிசனம் வேதவேதியர் செய்வதுதான் நியாயம். நீ அதை நினைப்பதும் பாபமன்றோ? சிதம்பரம், சிதம்பரம் என்று சொல்லிக்கொண்டு, இங்கே நின்று வீண்பொழுது போக்காதே! சனகனாதி யோகியர், மூவர் தேடிய கனக சபேசனை—முனிவரும் அமரரும் காணாது தேடித் தவிக்கும் பேரின்ப வீட்டை—ஆதனூர்ப் புலைச்சேரியிலுள்ள நீ கண்டறிவாயோ? பேசாமல் சேரிக்குப் போ. வீரனைத்தொழுது பகலெல்லாம் வயலை உழுது வாழ்வதை விட்டாய். இராக்காலங்களில் பந்தம் பிடித்துத் தடியெடுத்துக் கொம்பு தம்பட்டம் முழக்கிக் கோலாகலமாகப் பறையரோடு ஊர் சுற்றி வந்து காக்கும்படி கிராமத்தாரிட்ட காவலையும் விட்டாய். ஊணுறக்கமும் விட்டாய். எப்போதும் சிவ சிதம்பரம், தில்லையம்பலம், திருச்சிற்றம்பலம் என்று புலம்பிப் புலம்பித் தாயை விட்ட குழந்தை போல வாய்விட்டலறிப் பேய் கொண்டவன்போல மதி மயங்கித் திரிகிறாய். நந்தா! உனக்கு இவ்விதமான பிரமை வந்ததற்குக் காரணம் என்ன? அந்தரங்கமுள்ள சொந்தப் பறையன் என்று நான் உன்னை அபிமானித்திருக்க, நீ தகாத வார்த்தைகளை முரட்டுத்தனமாக என் முன் பேசலாமோ? நீ என் அருமையான பண்ணையாள் அன்றோ? உன் கால் பட்டால், பாழான பூமியும் பசுமை கொள்ளுமே; உன் கை பட்டால் கதிர் ஒரு முழம் நீளுமே; கட்டுக் கலம் காணுமே. நீ அதிர்ஷ்டசாலி; தொட்டது தங்கமாக விளையுமே! நீ பித்த

ஞய்ப் போனதென்ன, நந்தா, உனக்கு நான் கர்த்தனுக இங்கிருக்க, இந்தச் சிதம்பரப் பித்தம் ஏன் விளைந்தது; இப்பித்தம் எவ்வாறு தெளியுமோ?'' என்றான்.

நந்தனர் சொன்னர்:—“அடிமையின் பித்தம் தெளிய மருந்தொன்றிருக்கிறது. அது பேரின்பமன்றுள் இருக்கிறது. மற்ற மருந்தினுல் என் பித்தம் தெளியப்போவதில்லை. பாம்பும் புலியும் பாடுபட்டுப் பயிரிட்ட மருந்து! பக்தமணிகள் பார்த்துக் களித்த மருந்து! பார்வதி யென்னும் சீமாட்டி இம்மருந்தில் பாதியைத் தின்றதுண்டு. இம்மருந்தின் மகிமையை என்னென்று கூறுவேன்! அறிவால், செருக்கால், செல்வத்தால் பத்தத்திசையும் பறந்து பார்த்தாலும் இம்மருந்தினைக் கண்டு கொள்வது அரிதாகும். நல்ல சித்தமுடைய மெய்யன்பர்க்கோ, தேனுகப் பாலாகச் செங்கரும்பாகத் தித்திக்கும். அறிவுக்கண்ணுக்கு அகப்படாத இம்மருந்து, அன்புக்கண்ணுக்கு எளிதாகிச் சிலம்பு கொஞ்சத் தத்திக் குதித்துவரும்; தாளங்கள் போடும்; ஆனந்தத்தேன் சொரியும்; ஊழ்வினையை வேரறுக்கும்; இம்மருந்து தீராத நோய்களையும் தீர்த்துவைக்கும். ஐயரே! இது சாதியைப் பாராது! என் சித்தத்தைக் கட்டி இழுக்கிறது. ஐயோ! எத்தனை யன்பர்கள், ஞானிகள், யோகியர், முனிவர்கள் இம்மருந்தினை யடைய முயற்சி செய்தார்கள், செய்கிருர்கள், செய்வார்கள். பறையா, உன் பித்தம் தெளிய நீயும் போய்ப்பார் என்று உத்தரவு தரலாகாதா? ஐயரே! என் பக்தியும் மனமும் அங்கே போய்விட்டன. உடம்புதான் இங்கே இருக்கிறது. ஆசையும் பாசமும் நேசமும் அங்கே போய்விட்டன; பேச்சும் பிதற்றலுந்தான் இங்கே யிருக்கின்றன'' என்றார்.

இவ்வாறு சொல்லிக்கொண்டே, நந்தனர் ஆனந்தக் கூத்தாடினர். மயான உருத்திரனர் இப்படி யாட்டிவைக்கிருர் என்று புலேயர்கள் தன்னிடம் முறையிட்டுக் கொண்டது, பிராமணனது நினைவில் வந்தது. அவன், "ஐயோ, இவன் பித்தம் தெளியவில்லையே! நான் என்ன செய்யப் போகிறேன்? நாற்பது வேலி நிலம் நடுகை நட்டாகவில்லையே! ஊர்ப்புலேயனும் நல்லவனும் சாமர்த்தியசாலியுமான நந்தனில்லாமல் என் பண்ணைத் தொழில் நடக்குமோ? இவனைத் திருத்தவும் முடியவில்லை; கை விடவும் முடியவில்லையே!" என்று துயரமுற்றுப் புலம்பினன்.

பதினொராம் அத்தியாயம்

சோதனையும் வெற்றியும்

"இனிமேல் சிதம்பரம் போவேன்; போகாவிடில் பிராணனை விடுவேன்" என்று உறுதி செய்துகொண்டு, நந்தனர் ஒரு நாள் வேதியன்பால் சென்று தலை வணங்கிக் கை குவித்து மனம் துடித்துக் கண்டிப்பாகச் சிதம்பரம் போக வேண்டுமென்று உத்தரவு கேட்டார். மறையவன் 'கொள்ளித் தேள்போல நீ என்னைக் கொட்டாதே' என்று கோபித்துக்கொண்டு,

"'பறையருக்கெப்போதும் சேரியே சொர்க்கம்'' என்ருன்.

நந்தனர்,

"மறையோருக் கெப்போதும் வாயிலே தர்க்கந்தான்"

என்று கூறி, இவ்வளவு கடுமையாகத் தம்மைக் கவலைப் படுத்துவது நியாயமோ? என்று கேட்டார்.

பிராமணன், "அடிமையாய் வந்து நீ அவலப்படுத்துவ தேன்?" என்று மறு கேள்வி கேட்டு, "அப்பா, பஞ்சமனுகிய உனக்கு உண்மை விளங்குமோ?" என்ருன்.

நந்தனர்,

"கள்ளம்போனல் உள்ளது காணும்"

என்று அமைதியாகச் சொன்னர். மறையவனே 'பல கலே கற்றிருந்தும் நான் பறையனுக்குத் தோற்பேனு?' என் னுஞ் செருக்கோடு,

"வெள்ளம்போனல் உள்ளது விளேயும்"

என்று 'எட்டிக்குப் போட்டி'யாகப் பேசினன். நந்தனர், பார்ப்பானது நிலேமைக்கிரங்கி, "ஐயரே! உங்கள் மனத்தையும் என் மனத்தையும் ஏன் இவ்வாறு புண்ணுக்கிக் கொள்ளல் வேண்டும்? உள்ளங்கால் வெள்ளெலும்பாக உமக்கு ஓடி உழை த்த அடிமையிடம் இவ்வாறு பேசலாமா? மார்கழி மாதம் திருவாதிரைநாள் வரப்போகிறது; ஐயா, ஒரு தரம் போய்வா என்று இந்த அடிமைக்கு உத்தரவு கொடுக்கலாகாதா?" என்று கெஞ்சிக் கேட்டார்.

பிராமணன், "மாடு தின்னும் புலேயா! உனக்கும் மார் கழித் திருநாளோ? நண்டுக்குக் கலியாணமும் நரிக்குச் சங்க ராந்தியு முண்டோ? இது நாடு சிரிக்கும் வார்த்தை யன் ருே?" என்று கொடுமையாக மறுமொழி சொன்னன்.

"கட்டை யிருக்கையில் சிதம்பரம் போய் நான் காண வேணும். நாளுக்குநாள் ஆசை அதிகமாக விளேகிறது. உங் கள் காலில் கும்பிடுகிறேன்" என்று நந்தனர் தாழ்ந்த குரலில் பரிதாபமாகப் பேசினர்.

பிராமணன்:—“சபாஷ்! நன்றாயிருக்கிறது; நீ சிதம்பரம் போகவேண்டுமென்று கேட்பதை ஆலோசிக்க ஆலோசிக்க, அது மிக மிக ஆச்சரியமாகவே யிருக்கிறது.”

நந்தனார்:—ஐயரே, நான் என்ன செய்வேன்? அடியேன் அறியாச் சிறியேன். எனினும் ஆசை பேராசையாகவே யிருக்கிறது.”

பிராமணன்:—“நீ போனாலும் பலன் பெறமாட்டாய். உனக்கு அவ்விடத்தில் என்ன அலுவல்? உனக்கு அல்லும் பகலும் சோறளித்துக் காக்கும் அம்பலவாணன் ஆதனூர் வேதியனாக இங்கிருக்கும்போது, ஏன் அங்கே போகவேண்டுமென்று அல்லற்படுத்துகிறாய்?”

நந்தனார்:—நான் என்ன செய்வேன்? என் உயிர் ஓய்ந்தாலும், பொன்னம்பலத்தின்மீதுள்ள ஆசை ஓய்வதில்லையே!

பிராமணன்:—(கடுஞ்சீற்றங்கொண்டு) “நந்தா, உன்னை நல்லவனென்று நம்பினேன். திருட்டு வேடங்கொண்ட முரட்டுப்பயல் என்று இப்பொழுது தீர்மானிக்கிறேன். நாற்பது வேலி நடுகைக்குக் காத்திருக்க, நீ சிவமென்றும் சிதம்பரமென்றும் கதை பேசுகிறாய். பாவாடைராயன் சாட்சியாக, உன்னை நான் சும்மா விடமாட்டேன். உன் சலசலப்புக்கு அஞ்சும் நரியோ, நான்! அஞ்சினால், சீமான் என்று பேர் படைத்திருக்கும் எனக்குப் பஞ்சம் வந்து விடாதா? என்னைப்போன்ற பெரியவர்களுக்கும் விளங்காத ஜகதீசனுடைய திருநாமத்தை நீ கத்திக் குரைக்கலாமா? வித்தை யொன்றும் அறியாதவன் பக்தி பண்ணலாமா? பெரியோர்களிடத்தே சத்தம் போடலாமா?

நந்தனார்:—“ஐயரே! என் ஜன்மம் வீணான ஜன்மமாகுமா? ஏழை யென்றும் அடிமை யென்றும் பிறந்து

விட்டால், தெய்வமும் இல்லாமல் எங்கேயோ போய்விடுமோ? பாவியேன் ஆசை வைத்துவிட்டேன். நேசம் வைத்த நெஞ்சையும் அம்பலத் தெய்வம் மோசம் செய்து வஞ்சிக்குமோ? "ஐயோ, நாள் போகுதே!" என, வேதியனது கோபம் அளவு கடந்து பொங்கியது. 'சிங்கம் புசிக்கும் இறைச்சியை ஒரு நாய்க்குட்டி இச்சிப்பதுண்டோ?' என்று சீறினான். 'உன் பக்தியால், என்னுடைய நாற்பது வேலியும் நாசமாகுமோ?' என்று கர்ச்சித்துக்கொண்டு, நந்தனரை 'முரடா! வழி தெரியாத குருடா! என்று ஏசி வாயால் திட்டித் தேள்போல் கொட்டினான். அவனது வெஞ்சினம் இன்னும் அதிகமாகப் பொங்கி நெய் பெய்த தீயைப்போல் கொழுந்து விட்டெரிந்தது. இத்தகைய சினத்தீ, அறிவைப் புகைத்து விட்டதால், பிராமணன் தன்னை மறந்து நந்தனாரது மகிமையை ஒரு சிறிதும் உணராது, அவரைக் கல்லாலெறிந்து தடியால் அடித்தான். நந்தனர் சிறிதும் மனவருத்தமின்றி, "ஐயரே, உமது கை நோகுமே!" என்று இரங்கி, "இன்னம் சிதம்பரம் போக வேண்டுமென்று உத்தரவுபெற இங்கு வருவதில்லை. ஐயரே! உங்கள் தயவிருந்தால் போதும்" என்று சொல்லி, ஐயருக்குத் தலை வணங்கி ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு மீண்டார்.

அன்றே அவர் வீரவைராக்கியத்துடன் தமது துயரங்களை யெல்லாம் அம்பலவாணனுக்கே ஒப்புவித்தார். "இறைவனே! ஏழையேனை நீ சோதிக்கிறாயோ? எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்த் தோய்ந்திருக்கும் அன்புக் கடவுளே! நீ பார்ப்பானுள்ளத்தில் இருப்பதுபோல் பறையனுள்ளத்திலும் கோயில் கொண்டிருப்பதில்லையோ? ஐயா, உன் அடைக்கலம். அத்தா, நான் வருவேனோ; அம்பலத்தை அடை

வேனோ? சற்றேயாகிலும் உன் சந்நிதியைக்கண்டு களிப்பே னோ? என் துன்பங்களெல்லாம் நீறு பட்டழிய, எளியேனைத் தாங்குவதும் உனக்கு அரிதோ? ஐயோ, தெய்வமே! இந்த ஐயருக் கடிமையானேன். செய்யாவினைகள் செய்தல்லவோ, இந்த ஜன்மம் கிடைத்தது! ஆவி தவிக்கிறது; உள்ளம் கரை ந்து கரைந்து உருகுகிறது. எனினும் உய்யும் வழியில்லையே! பாவியேனுக்குப் பார்ப்பான் மனமிரங்கான்! அவனுள் ளிருந்து, உத்தரவு தருவதும் உனக்கு அருமையோ? தில் லைத் தெய்வமும் புலையர்க்குக் கல்லாகச் சமைந்ததோ? அன் னையும் தந்தையும் ஆவியும் பொருளுமாகிய பொன்னம்பல வனைப் போற்றுதற்கும் உரிமை பெறாத ஜன்மமோ பெற் றேன்? அடிமுடியொன்று மில்லாத அம்பலத்தரசே! உன் பால் கொடியேன் வந்தால் உனக்கும் குறைவுண்டோ? தில் லைச் சிவனே! செய்யு முபாயம் அறியேன். பத்து வருஷ காலமாகப் பார்ப்பானைக் கேட்டும் பயனில்லையே! அவன் சித்தமிரங்கிப் போய் வா என்று ஒரு நல்ல வார்த்தை சொல் லக் காணேன், ஐயோ! நாற்பது வேலி நிலத்தையும் நடுவதார்? காப்பதார்? களை பிடுங்குவதார்? செக்கு மாடு போல் இப் படியே சுற்றிச் சுழன்று உழைத்துக் கொண்டிருந்தால், சிதம் பர தரிசனம் எப்போது சித்திக்கும்? தில்லைத்தலத்தைக் காணாத இந்த ஜன்மம் இருந்தாலென்ன? போனாலென்ன?" என்றிவ்வாறு எண்ண மிட்டுக்கொண்டே அன்றிரவு படுத்தி ருந்தார்.

இத்தகைய நினைவின் வெள்ளத்தினிடையே எவ்வாறோ கொஞ்சம் நித்திரையும் ஏற்பட்டது. அந்நித்திரையில் ஒரு கனவும் தோன்றியது. தில்லைநாதன், அம்பலத்தேவன் கன வினில் வந்தார். நந்தனாரது கருத்திலே கலந்திருந்த திருவுரு

வம், சுத்த மெய்ஞ்ஞானச் சுடர் நகை புரிந்து, அவர் கண் முன் தோன்றியது. 'குறையில்லாது, உமது கழனிகளை நமது பூதகணங்களால் நடச்சொன்னேம்; மறையவனுக்குக் காட்டி உத்தரவு பெற்று நீ விரைந்து வா' என்று சொல்லி எம்பெருமான் அம்பலத்தே சென்று மறைந்தார்.

நந்தனர் நித்திரை நீங்கி வயல்களைப் போய்ப் பார்த்தார்; பிரமித்தார்; பெரு வியப்பும் பெரு மகிழ்வும் எய்தினர். "என்ன ஆச்சரியம்! என்ன அற்புதம்! களையெடாமல் ஜலம் விடாமல் கதிர் ஒரு முழம் காணுமாம். ஏரி குளமெல்லாம் மேடும் பள்ளமும் தண்ணீராக நிறைந்திருக்குமாம்!' என்று கூறிக் கனவிலுருவாகி வந்த இறையருளை வியந்து வியந்து வாழ்த்திக்கொண்டு, நந்தனர், வேதியனைக் காண விரைந்து சென்றார்.

வேதியனே, நந்தனரை அடித்ததற்காகப் பச்சாத்தாபங் கொண்டு, "ஐயோ, கோபம் சண்டாளமன்றோ? நல்ல மனிதனை அடித்துத் துரத்தினேமே!" என்று உள்ளத்தில் நரகவேதனை அனுபவித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அன்றிரவு நன்றாகத் தூக்கம் பிடிக்கவில்லை. இந்நிலையில், "ஐயரே வாரும்!" என்று அழைத்திடும் நந்தனரது பொன் போன்ற குரலைக் கேட்ட பிராமணனது நெஞ்சும் உடம்பும் அரைத்த சந்தனம் கொண்டு அப்பியதுபோலக் குளிர்ந்தது. "சிதம்பரப் பித்தம் தெளிந்து நந்தன் வந்தான்; இனி முன்போலிருப்பான்; வழக்கம்போல் நடந்து கொள்வான். இதுவே தக்க சமயமாதலால் இவனிடம் நமது அந்தரங்க சித்தாந்தமாகிய உள்ளக் கருத்தை உள்ளவாறு வெளியிட்டு இனி ஒரு போதும் விலகாதபடி இவனை நம் வழிப்படுத்திக் கொள்ள வேண்டு" மென்று அவன் தீர்மானித்தான்.

நந்தனர் கும்பிடு போட்டு நின்றார். அவரை நோக்கிப் பார்ப்பான், "கள்ளக் கும்பிடு தள்ளடா, காரியம் கைக்கொள் ளடா!' என்று கூறிவிட்டு, "நந்தா, புத்தி வந்ததா? சித்த மும் தெளிந்ததா? பத்தியும் தொலைந்ததா? தில்லையென்று சொன்னதெல்லாம் இல்லை யென்று போச்சுதா?" என்று பல கேள்விகளை அடுக்கினன். நந்தனர் விடை கூறுவதற்கு முன்னமே, 'நல்லது, நல்லது, மெத்த மெத்த ஸந்தோஷம்!' என்று உற்சாகமாகக் கூவினன். நந்தனர் ஏதோ சொல் வதற்கு வாயை அசைத்தார். பார்ப்பான் அதற்கு அவ காசம் கொடாமலே, "இப்படி அப்படிச் சொல்லாதே; தப்பெடுத்தடிப்பையா?" என்று வினவினன்.

மீண்டும் வேதியன், அவர் பேசுவதற்கு இடங்கொடா மலே தன்னுடைய அந்தரங்கமான சித்தாந்தக் கொள்கைகளை அவருக்கு உபதேசிக்கத் தொடங்கினன்:—

"தெய்வம் என்பது குற்றம்
தெளிந்து பாரு சுற்றம்
கையைக் கொட்டு, சத்தம்
கண்டு கொள்ளு நித்தம்.
ஊணு றக்கமே இன்பம்
ஊணிழந்தாலே துன்பம்
சாண் வயிற்றுக்கே அன்பு
சாதி முறைமை வம்பு"

எனக் கூறி, 'ஓகோ, சபாசு! கண்டு கொண்டாய்' என்று உற்சாகப்படுத்தினன்.

பிறகு பிராமணன்,

"சூதாடித் தோற்றவன்போல்
வாதாடி நிற்பதற்கு
வேதாந்த சாஸ்திரங்கள்

காதாலே கேட்டிருந்தாலும்
　　என்ன காரியம்?—அதில்
என்ன வீரியம்? தள்ளு, தள்ளு"

என்றும்,

" தில்லை யென்பது காட்டிலுண்டு
　　கேட்ட தில்லையா?
தேகம் பட்டால் புண்ணாகும்
　　பார்த்த தில்லையா?
அம்பல மாவது ஆகாசம்
　　உற்றுப் பாரு,
அருளில்லை, பொருளில்லை,
　　கண்டு தேறு"

என்றும்,

" பத்தி யென்றும் சித்தி யென்றும்
　　வெற்றி யென்றும் முத்தி யென்றும்
இத்தனை நாள் கற்ற கலை
　　அத்தனையும் பித்த மாச்சு
மாறு பாட்டுக்காரன் வார்த்தை
　　கூறு படுமோ?
தாறு மாறு பேசினால்
　　சோறு படுமோ?"

என்றும் சொல்லிக்கொண்டே வந்து, உறுதியான குரலில்,

எல்லாம் முழுப்புரட்டு!
வல்லான் வகுத்தவழி!
சொல்லாதே, சும்மா நில்லாதே!
காரியத்தைப் பாரடா,
　　உனக்கிணை யாரடா!

காசுபணம் சேரடா
இது நல்ல ஊரடா !
காடு வெட்டி நஞ்சை பண்ணு,
மாடு கட்டி வைக்கோல் போடு,
பாடுபட் டுழைத்தா லன்றோ,
வீடு கட்டி வாழலாம்.''

என்று உபதேசித்து முடித்தான்.

'ஆண்டைப்' பார்ப்பானது வைதிக வேடத்திற்குள்ளும அபாரமான சாஸ்திரக் கல்விக்குள்ளும் மறைந்து கிடந்த உலகாயத சித்தாந்தம் தம் பொருட்டு வெளிப்பட்டு வந்ததென அறிந்து நந்தனர் திடுக்கிட்டு, "அந்தோ! உலகம் இது தானே?'' என்று எண்ணி ஏங்கினர். ஆனல் அவர் ஒன்றும் சொல்லவில்லை. வேதியனது பண்ணையில் விளைந்திருக்கும் அற்புதமே அவனது நோய்க்கு மருந்தாகுமென்று நம்பினர்.

நந்தனர் வேதியனைப் பண்ணை நிலங்களைப் பார்வையிட வேண்டுமென்று வருந்தி யழைத்தார். பிராமணனுக்கு விஷயம் இன்னதென்று விளங்கவில்லை. எனினும் அவன் நந்தனரோடு சென்று, சிவ கணங்களால் ஓர் இரவிலே நடுகை நட்டு அறுப்பறுக்க வேண்டிய நிலையிலிருக்கும் தன் சொந்த வயல்களைக் கண்ணுற்றான். அவன் இந்திர ஜால மகேந்திர ஜாலங்களை யெல்லாம் ஒருங்கே நோக்கும் பேதைபோல் ஒன்றும் தோன்றாது சிறிது நேரம் திகைத்துச் செயல் மறந்து நின்றான். நந்தனர் கொஞ்ச நேரம் உலக வாசனையை விட்டு அம்பலவாணனைக் கொண்டாடிக் கூத்தாடிக்கொண் டிருந்தார். பிறகு அவர், கைகொட்டி, "ஐயரே! பாரும், பாரும், சிவனரே வந்து செய்த காரியங்களை! என்று கூவினர்.

மகா பக்தமணியான நந்தனருக்காகவே சிவபெருமான் அத்தகைய அற்புதம் விளைவித்தார் என்பதை உணர்ந்து கொண்ட வேதியன் 'நீசச்சாதி யென்று பேசியும் ஏசியும் இம்சித்தும் அறியா மனத்தால் சிவ பக்த சிகாமணியை அபசாரம் பண்ணி விட்டோமே!' என்று வருந்திச் சிறியவனை தன் பிழைகளை யெல்லாம் பெரியவராகிய நந்தனர் பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்தனை செய்தான். "அண்டர் பணியும் தில்லை யாண்டவனே உமக்கு அடிமையாளாகி வந்து செய்தாரோ? நந்தனரே! இவ்வளவு பெருமை வாய்ந்த உம்மை அடிமை கொண்டதாகக் கருதிய மூடனாகிய நான் இனி உமக்குத் தொண்டனானேன்" என்று கூறி, நடந்த வரலாற்றை அறிய விரும்பினன்.

கனவிலே இறைவன் வந்து கருணை செய்ததை நந்தனர் கூறினர். பிராமணன், "தனக்குப் புத்தி யுண்டு, வித்தை யுண்டு, பக்தி கிடையாது" என்று ஒப்புக்கொண்டு, "நந்தா, நீயே சிவ பக்தன்; நான் நம்பாமல் மோசம் போனேன். நந்தா, நீ ஒரு சித்தன்; நான் சாஸ்திரப் பிரசித்தன். நான் வேத சாஸ்திரங்களை யெல்லாம் ஐயந்திரிபறக் கற்றேன்; கற்றும் என்ன பயன்? ஓதாதுணர்ந்த நீ எடுத்துரைத்த சிவ போதத்தை என் பிடிவாதத்தாலும் உலகாயத உள்ளத்தினலும் ஏற்றுக்கொள்ளாமற் போனேன்" என்று புண்பட்ட நெஞ்சோடு புலம்பினன்.

முடிவில், அவன், "ஆருக்குப் பொன்னம்பலவன் கிருபை யிருக்குமோ அவனே பெரியவனும்" என்று துணிந்து,

"பாருக்குள் வீடுகள் மாடுகள் ஆடுகள்
பணமிருந்தால் அவன் பெரியவ னவனே?"



நந்தனர் நடராஜர் தரிசனம்.

என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

வேதியன் பன்முறையும் வேண்டிக் கொண்டதற்கிணங்கி, நந்தனர் அவனுக்கு ஞான பக்தியின் மர்மங்களை உபதேசித்தார். அவ்வுபதேசத்தால் வேதியன்,

"சாத்திரக் குப்பையெல்லாம் தள்ளினேன் பதரைப்போலே,
காத்திரம் சுத்தமாச்சு, கனிந்திடு முள்ளம், பக்தி,
மாத்திர மிருந்தால் போதும் மற்றென்று மில்லை........"

யென்று தெளிந்து, திவ்விய ஞானமடைந்து, சிதம்பரம் போய்ப் பதம் பெறுவீரென்று நந்தனருக்கு விடை கொடுத்தனுப்பினன்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

சிதம்பர தரிசனம்

திருநாளைப் போவார் தமது பழம்பதியான ஆதனூரினின்றும் புறப்படும்போது, தமது சேரித் தோழர்களிடம் விடை கொள்ள வேண்டுமென்று கருதினர். அவர்கள் அவரை விட்டுப் பிரிய மனமில்லாதவர்களாய், "அண்ணே! அங்கே போகவேண்டாம். இந்த எல்லையிலிருந்தே ஈசனர் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டிருப்போம்" என்று சொன்னர்கள். நந்தனர், ஆண்டையே தம்மை மனமுவந்து அனுப்பி வைப்பதால், அன்பர்களும் தோழர்களுமான அவர்கள் இடையூருக இருக்கலாகாதென்று கூறினர். அப்படியானல் அவர் தில்லைக்குச் சென்று சீக்கிரம் திரும்பிவர வேண்டுமென்று வற்புறுத்தினர்கள். அப்பொழுது அவர்களது மனநிலை கண்டு

அனல்கண்ட மெழுகுபோலுருகி, அவர்களைத் தழுவிக் கண்ணீர் வடித்து, அந்த அன்பர் முகம் நோக்கித்,

"தில்லை வெளியிலே கலந்து கொண்டாலவர்
திரும்பியும் வருவாரோ"

என்று வினவினர். பிறகு அவர்கள் 'நாங்களும் கூட வருவோம்' என்று சொன்னர்கள். ஆனல் அவர் அதற்கு இணங்கவில்லை. "நான் சிதம்பரம் போவேன்; நீங்கள் இங்கேயேயிருந்து சிந்தனை செய்து கொண்டிருங்கள். நீங்கள் எந்த விதமும் கரையேறலாம்" என்று அவர்களுக்கு இதம் கூறி விட்டு, நந்தனர் சிதம்பரத்தை நோக்கிப் பிரயாணமானர்.

ஆதனூரிலிருந்து விடும் அம்பு போலப் பறந்து, கொள்ளிடம் தாண்டி அப்பால் போகும்பொழுது, அவரது கவலைகள் எங்கும் பொங்கிய பரசிவ-வெள்ளத்தில் கரைந்தொழிய, அவர் முக்தி வெள்ளம் கரைபுரண்டோடுவதாகவே உணர்ந்தார். 'ஆதனூரில் ஒரு புலையனுக்காக அம்பல நாடகம் ஆடுகிறரோ இறைவர்' என்று நெஞ்சொடு வினவினர்.

சிதம்பரத்தின் எல்லையை வணங்கி யெழுந்து, கோபுரங்களோடும் சோலைகளோடும் தடாகங்களோடும் மணிமண்டபங்களோடும் மாட மாளிகைகளோடும் விசாலமான வீதிகளோடும் விளங்கி வேள்விச் சாலைகளும் அத்தியயனசாலைகளும் மடாலயங்களும் நிறைந்து பொலிந்த தில்லைத்தலத்தைக் கண்டார், கலி தீர்ந்தார். இரு கண்களிலும் ஆனந்தம் பொங்கியது. ஆனல் தம் குலத்தை நினைத்து அஞ்சி உட்செல்லாது நின்று விட்டார். இவ்வாறு நின்றவர் அப்பதியின் மதிற்புறத்தில் ஆராத பெருங்காதல் வளர்ந்தோங்க, உள்ளுருகிக் கை கூப்பி, அவ்வெல்லையை வலஞ்செய்து செல்வாராயினர்.

இவ்வாறு இரவும் பகலும் வலமாக வந்து, கனகசபையில் ஆனந்த நடனம் கும்பிடுவது எவ்வாறென்று நினைந்து மனமழிந்தார்; "இறைவனே! அஞ்சவேண்டாமென்று ஒரு தரஞ் சொல்லி அழைத்தால் ஆகாதோ? அப்பா! தில்லைக் கரசே! நடனம் பயிலும் ஒளியே! சரணம், சரணம். நீர் எப்போது வருவீரோ? அருள் புரிவீரோ? வராமலிருப்பீரோ? நான் உம்மைப் பாராமலிருப்பேனோ? என் வேதனையைக் கண்டு ஆதரிக்கும் தெய்வம் கிடையாதோ!' என்றிவ்வாறு புலம்பிப் புலம்பிப் புரண்டழுவார். "இரட்சிக்க இதுவே நல்ல சமயம். என்னை இரட்சித்தாளும். கருணைக் கடலென்று உம்மை நம்பி வந்தேன். தில்லை யம்பலவாணரே! கனவிலும் உம்மை யன்றி வேறு எப்பொருளையும் வேண்டேன்," என்று போற்றுவார். மீண்டும், "இறைவர் தள்ளுவாரோ? கொள்ளுவாரோ? அவர் தள்ளினாலும், இத் தில்லையில் தானே என் தேகத்தை விடுவதன்றி இனி நான் திரும்பிப் போகமாட்டேன்" என்று கூறுவார். இவ்வாறு எண்ணாததெல்லாம் எண்ணி யெண்ணி, நந்தனார் அயர்வெய்தி, அவ் வயர்ச்சியோடு துயில் புரிவாராயினர்.

"இன்னல்தரும் இழிபிறவி
 இதுதடையென் றேதுயில்வார்
அந்நிலைமை அம்பலத்துள்
 ஆடுவார் அறிந்தருளி,
மன்னுதிருத் தொண்டரவர்
 வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண்
 முறுவலொடும் அருள்செய்வார்."

நந்தனரது நித்திரையிலே நடராஜமூர்த்தி வந்து காட்சி தந்து சொல்லுவார்:—"எமதன்பிற் சிறந்த பக்தமணியே! உன்னிடம் நமது தொண்டர்களான வேதியர்களை அனுப்புவோம். அவர்கள் முன் நீ எரி மூழ்கியெழுந்து அவ்வேதியர்களுடனே நமது சபைக்கு வந்து தரிசனம் பெறுவாய்" என்றார்.

"இப்பிறவி போய்நீங்க
எரியினிடை நீமூழ்கி
முப்புரிநூல் மார்பருடன்
முன்னணைவா யென்னமொழிந்(து)
அப்பரிசே தில்லைவாழ்
அந்தணர்க்கு மெரியமைக்க
மெய்ப்பொருளா னாருளி
அம்பலத்தே மேவினர்"

நடராஜப்பெருமான் பணித்த கட்டளையைக் கேட்ட தில்லை மூவாயிரவர் யாவரும், அம்பலவர் திருவாயிலின் முன்னே அச்சத்தோடு கூடி, அப்பெருமான் அருளிச்செய்த பணிவிடையை யாம் செய்வோம் என்று சுவாமியைத் துதித்து, நந்தனரைத் தேடிச் சென்றார்கள்.

அந்தணர்கள் நந்தனரை யடைந்து, "ஐயரே! அம்பலவரருளால் இப்பொழுது உம்மிடத்து வந்தோம். தீயை உண்டாக்கி உமக்குத் தர வந்தோம்." என்று சொன்னார்கள். திருநாளைப்போவார் கசிந்த மனத்தோடு 'அடியேன் உய்ந்தேன்' என்று கைகூப்பி வணங்கினர்.

பிறகு நந்தனர் தெற்குத் திக்கிலுள்ள மதிலின் புறத்தே, கோபுர வாயிலின் முன்னே, தில்லை மூவாயிரவர்கள் நெருப்புண்டாக்கிய குண்டத்திற் சென்று, ஆனந்த நடராஜ மூர்த்தி

யின் குஞ்சித பாதத்தை மனத்தில் தியானித்துக்கொண்டு, கை தொழுது எரியை வலமாகச் சூழ்ந்து வந்து, அந்த நெருப்பில் முழுகினர். அவ்வெரியின்கண், மயக்கத்திற் கேதுவான சரீரம் நீங்கியது. அப்பொழுது திருநாளைப்போவார் சடைமுடி தாங்கிக்கொண்டு, தீயினின்றும் எழுந்தார்.

செந்தீயில் முழுகியெழும்போது, அவர் செம்மலர்மேல் உதித்தெழுந்த படைப்புக் கடவுளைப்போல் விளங்கினர். அப்பொழுது ஆகாயத்தில் தேவ துந்துபி ஒலித்தது. வானவர்கள் மகிழ்ந்து ஆரவாரித்து மலர்மாரி பொழிந்தனர். பக்தியின் பெயரால் செயற்கரிய தியாகம் செய்து முனிவராக வெளிப்பட்ட புனிதமூர்த்தியான நந்தனரை, ஞானச் செல்வர்களான தில்லை மூவாயிர மறையவர்களும் கைகுவித்து வணங்கினர்கள். வேறு சிவனடியார்களும் வணங்கி மனங்களித்தார்கள். அங்கிலையில், திருநாளைப்போவார் தில்லைவாழந்தணர் உடன்செல்லச் சென்றெய்தி, நடராஜப்பெருமானது தெற்குக் கோபுரத்தைத் தொழுது வணங்கி,

"ஒல்லைபோ யுட்புக்கார் உலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால்."

தில்லை மூவாயிரவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். முனி கணங்கள் துதிசெய்ய முனிவடிவாய்த் தம்மை யடைந்த திருநாளைப் போவாரை, வினை மாசறுத்து,

"சுந்தரத்தா மரைபுரையுந் துணையடிகள் தொழுதிருக்க
அந்தமிலா ஆனந்தப் பெருங்கூத்த ரருள்புரிந்தார்-"

நெருப்பில் மூழ்கி மாசுடம்பு நீத்து நிமலராகி யெழுந்த நந்த மாமுனி யென்னும் திருநாளைப்போவார், புரட்டாசி மாதம்

உரோகிணி நட்சத்திரத்தில் கனக சபையில் வந்து சிவசாயுஜ்யம் அடைந்தாரென்று திருத்தொண்டர் புராணம் கூறுகின்றது.

"என்று மின்பம் பெருகு மியல்பினு
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்"

முற்றும்.

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS—1933.

எமது பிரசுரங்கள்

ஆரம்பப் பாடசாலைகளில் உபயோகிப்பதற்குத் தகுந்தது.

செந்தமிழ் வாசக பாடம்	ரூ.	அ.	பை.
முதற் புத்தகம்	0	2	6
இரண்டாம் புத்தகம்	0	3	0

மாணவர் தமிழ்ப் புத்தகம்

இரண்டாம் வகுப்பு	0	3	0
மூன்றும் வகுப்பு	0	4	0
நான்காம் வகுப்பு	0	5	0
ஐந்தாம் வகுப்பு	0	6	0

இலக்கணம்

தமிழ் இலக்கணம்—முதற் புத்தகம்	0	2	0
ஆரம்பத் தமிழ் இலக்கணம்	0	3	0

இந்திய சரித்திரக் கதைகள் (5-ம் வகுப்பு)	0	5	0
திருநெல்வேலி ஜில்லா சரித்திரம் (4-ம் வகுப்பு)	0	4	6
திருநெல்வேலி ஜில்லா பூமி சாஸ்திரம்	0	5	0

நீதிக் கதா மஞ்சரி

உலகநீதி	0	2	0
ஆத்திசூடி	0	2	0
கொன்றைவேந்தன்	0	2	0
வெற்றிவேற்கை	0	3	0

எண்சுவடி	0	1	6
Star English Primer	0	2	0

S. R. சுப்பிரமணிய பிள்ளை,

புத்தக வியாபாரம், திருநெல்வேலி ஜங்ஷன்.